நவமணி

அல்லது

தூக்கு மரந்தானே கதி?

ஒரு துப்பு அறியும் இனிய தமிழ் நாவல்

இஃது
"சிவகுமாரன்" "ரமணன்"
முதலிய துப்பு அறியும் நூல்களின் ஆசிரியர்
பீ. எஸ். நீலகண்டன்
இயற்றியது.

வசந்தா புத்தகசாலை
78, பவழக்காரத் தெரு,
சென்னை.

1923

காபிரைட்] [விலை ரூபா 1.

PRINTED BY THE UPENDRA PRINTING & PUBLISHING HOUSE
AT THE GONUGUNTLA PRESS, 15, BROADWAY, MADRAS.

விஷய அட்டவணை

பொருளடக்கம்

4167

அத்தியாயம்.		பக்கம்:
1.	வயிற்றுப் பசிக்காகவா !	1
2.	அருளுடைய துறவி	3
3.	உண்மையான நட்பு	6
4.	உட்பகை	13
5.	வருபயனறியாத கோபம்	15
6.	சினம் தன்னையே சுடும்...	19
7.	லீலாவதி உண்மையை உரைக்கிறாள்	21
8.	நவமணியின் காதல்	25
9.	நவமணியின் அவகேடு	27
10.	என் குழந்தை எங்கே ?...	30
11.	பிரதம விஜாரணை	34
12.	நட்பின் பெருமை	42
13.	கேடுகாலம் கிட்டிவிட்டது !	44
14.	போனது போகட்டும் ! ஜாக்கிரதை !	48
15.	வழியைவிட்டு ஒதுங்கும் !	53
16.	யாரடா அங்கே ! யமராஜ் !	57
17.	பாட்டியம்மாள் ஹோட்டல்	61
18.	கோஷா ஸ்திரீ	66
19.	பாழ் அடைந்த கிணறு	69
20.	நீர்ப் பிசாசங்கள்	71
21.	கல் சுரங்கம்	74
22.	சதுரங்க ஆட்டம்	78
23.	துப்பனும் கைதியும்	81
24.	கொலைக்கேஸ் விஜாரணை...	85
25.	சத்தியமே ஜயம்	90
26.	நவமணியின் விடுதலை	97
27.	கொலைக்கேஸ் மர்மம்	101
28.	எனையாளு மீசன் செயல்	118

உ

4167

நவமணி

அல்லது

தூக்கு மாந்தாளோ கதி?

முதல் அத்தியாயம்

வயிற்றுப் பசிக்காகவா!

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

"ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி."—திருக்குறள்.

ஆதித்தியன் செங்கடலில் மூழ்குஞ் சமயம் நெருங்கிக் கொண்டிருந்தது. திரிசிராபுரத்து மாதாக்கோயிலின் உன்னத கோபுரத்தி லமைக்கப்பட்ட கடியாரம் ஒன்று, இரண்டு என்று எழடித்து நின்றது. கோயிலுக்கு வந்திருந்த பக்தர்களொவ்வொருவராய், சுவாமிதரிசனஞ் செய்துவிட்டு, வெளியே போய்க்கொண் டிருந்தார்கள். சுமார் கால்மணி சாவகாசத்துக்குள் எல்லோரும் வெளியே போனவுடன், தேவாராதனை, தூபதீப நைவேத்தியம் முதலிய கைங்கரியங்கள் நடக்கும்போது சந்நிதானத்தில் தேவர் புகழை இனிய குரலுடன் பாடுவதற்கென்றே நியமிக்கப்பட்டிருந்த அற்புதஸாமி உடையார் பாராக்காரனைவிட்டுக் கதவுகளை யெல்லாம் பூட்டச் சொல்லிவிட்டுக் கடைசியில் மெதுவாய் வந்தார். அவருக்கு மிகவும் அலுப்பா யிருந்தபடியால், மாதாக்கோயிலிலிருந்து சுமார் முக்கால் மைல் தூரத்திலிருந்த காவேரியாற்றின் பக்கம் போக

வேண்டுமென்ற எண்ணத்துடன், ஆற்றுக்குச் செல்லும் வழியைத் தொடர்ந்துசென்றார். அங்கு சென்று உற்சாகமாய்க் காவேரி மணலி லுட்கார்ந்துகொண்டு, பௌர்ணமி பூரண சந்திரன் வெகு தேஜோ மயமாய்ப் பிரகாசித்துக்கொண் டிருந்ததை யுல்லாசமாய் உற்று நோக்கிக்கொண் டிருந்தபோது யாரோ ஒருவர் அவருக்குப் பின் நின்று "உடையாரவாளா?" என்று அவருடைய பெயரைச் சொன்னார். அற்புதஸாமி உடையார் திடுக்கிட்டு அச்சத்துடன் திரும்பிப் பார்த்தார். ஒரு விஞடியில் அவருக்கு அச்சம் நீங்கிக் கோபம் மேலிட்டு, "உன்னை யார் இங்கு வரச்சொன்னது?" என்று கேட்டார். அங்கு நின்றுகொண் டிருந்த சுமார் பதினெட்டு வயதுள்ள அப்பெண், "யாரா என்னை வரச்சொன்னது ? என்னுடைய வயிற்றுப்பசியின் கொடுமைதான். நான் சாப்பிட்டு இன்றைக்கு இரண்டு நாட்களாகின்றன. தங்களைத் தவிர வேறு யார் எனக்குக் கொடுப்பார்கள் ? ஏதாவது வாங்கிக்கொண்டு போகலா மென்றுதான் வந்தேன்" என்றாள்.

அற்புதஸாமி உடையார் :—வயிற்றுப் பசிக்காகவா ! பேஷ் ! வெகு நிஜந்தான் நீ சொல்வது !

பெண் :—வேறு எதற்காகவென்று நினைக்கிறீர்களோ, அதுவும் எனக்குத் தங்கள் சிக்ஷைதானே.

அற்புதஸாமி உடையார் :—குதிரை கீழே தள்ளிவிட்டது மல்லாமல், குழியையும் பறித்துமூடிய கதைபோ லாயிற்றே. என் முகத்தில் விழிக்காதேயென்று நான் உன்னிட மிதுவரையில் பல முறை சொல்லியிருந்தும், நீ இங்கு வர எப்படித் துணிந்தாய் ? இனிமேல் நீ என்னை அணுகுவாயானல் * * * * ஜாக்கிரதை என் குணம் உனக்கு நன்றாய்த் தெரிந்ததுதான். ஆகையால் அதைப்பற்றி நான் உனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இப்போது எவ்வளவு வேண்டு மென்கிறாய் ?

பெண் :—நான் கேட்பது பிச்சை. எது கொடுத்தாலும் வாங்கிக்கொண்டு போகவேண்டியதுதான். தங்களிஷ்டம்.

அற்புதஸாமி உடையார் தம்முடைய சொக்காய்ப் பையிலிருந்த பத்து ஒருரூபாய் நோட்டுகளை அவளிடங் கொடுத்து

விட்டு, வெகு கோபமாய்த் தம்மிருப்பிடத்துக்குச் சென்றார். அந்தப் பெண்ணும் பணத்தை ஜாக்கிரதையாய் முடிந்துகொண்டு தன்னிருப்பிடஞ் சென்றாள்.

இரண்டாவது அத்தியாயம்

அருளுடைய துறவி

"புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற."—திருக்குறள்.

"அம்மா! படையார்பாளையத்து ஜமீந்தாரிடமிருந்து கடிதமொன்று வந்திருக்கிறதே" என்று திரிசிரபுரத்து மாதாக் கோயிலைச்சேர்ந்த பள்ளிக்கூடத்து வார்டனாகிய மேரியா மர்ட்டன் தம்முடைய தாயாரிடத்தில் சொன்னார்.

மேரியம்மாள் :—படையார் பாளையத்து ஜமீந்தார் நமக்குக் கடிதமெழுதுவதின் காரணம் எனக்கு விளங்கவில்லையே. ஏதோ நாலைந்து வருஷங்களுக்கு முன் நம்ம வீட்டுக்கு ஒரு தரம் வந்திருந்தது தானே. தேர்த்திருவிழாப் பார்ப்பதற்கு சூரியாஸ்தமன சமயத்துக்கு வந்து இரவில் மட்டும் நம்ம வீட்டி லிருந்துவிட்டு மறுநாட் காலையிலேயே திரும்பிவிட்டார்போ லிருக்கிறதே. அவ்வளவுதானே நமக்கு அவரைத் தெரியும்? கடிதம் பிரும்மாண்டமா யிருக்கிறதே.

மேரியா மர்ட்டன் :—கடிதத்தைப் படித்துப்பார்த்தால் இன்னு மாச்சரியமா யிருக்கும். படிக்கிறேன் கேளுங்கள்.

"எனது அன்புள்ள கனம் பொருந்திய மேரியா மர்ட்டன் அவர்களுக்குத் தண்டனிட்டு எழுதிக்கொண்ட விண்ணப்ப மென்னவென்றால் :—நம்முடைய மாதாக்கோயில் தேர்த்திருவிழாப் பார்க்க நான் தங்கள் வீட்டுக்கு நான்கு வருஷங்களுக்கு முன் வந்திருந்தபோது தேவரருளால் நான் தங்களைத் தரிசிக்கலானேன். தாங்கள் தேவரினருள்

பெற்ற ஒரு பெரியஆத்மாவென்று உடனே உணரலானேன். இக்காரணத்தினாலேயே நான் விண்ணப்பஞ் செய்யத் துணிந்தேன். ஆரோக்கியஸாமி உடையார் என்று எனக்கொரு நண்பரிருந்தார். அவர் பத்மாவதியென்ற ஒரு பெண்ணை விவாகஞ் செய்துகொண்டு சுமார் எட்டுவருஷ காலம் சுகித்திருந்து, பிறகு மரணமடைந்தார். அவரிறக்கும்போது, அவருக்கு நான்கு வயதில் ஒரு பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையு மிருந்தன. அக்குழந்தைகள் இரட்டையாய்ப் பிறந்தவைகள். அவறிறந்து மூன்று வருஷங்களுக்குப் பிறகு அவர் மனைவி புனர்விவாகஞ்செய்துகொண்டாள். அந்தம்மாள் விவாகஞ் செய்துகொண்ட மனிதன் இரண்டு வருஷங்களிற் காலஞ்சென்றான். பிறகு இரண்டு வருஷங்களுக்கெல்லாம் குழந்தைகளின் துர்ப்பாக்கியத்தால், திடீரென்று அவர்களுடைய தாயாருக்கு விஷஜுரம் கண்டது. அவ்வம்மாளுக்கு தான் இனிப் பிழைக்க முடியாதென்று தோன்றி எனக்குச் சொல்லி யனுப்பினாள். நான் உடனே போய், அந்த அம்மாளைக் கண்டு "என்ன அம்மா உடம்பு? முன்னாடியே எனக்கு இதைத் தெரிவிக்கக் கூடாதா?" என்று கேட்டேன். அதற்கு அவ்வம்மாள் கண்களில் நீர் ததும்ப, மிகவும் தீனக்குரலுடன், "எனது கணவனின் இனிய நண்பரே! என் காலம் கிட்டிவிட்டது. நானின்னு மிரண்டொரு நாழிகையில் போய் விடுவேன். தாங்களெனக்கு ஒரு பேருதவிசெய்யவேண்டும். ஐயோ! நான் என்னசெய்வேன்! என் குழந்தைகளை யார் பார்த்துக் கொள்ளுவார்கள்! எனக்கொருவரு மில்லையே! தங்களைத்தான் நம்பி யிருக்கிறேன்! எனக்கு வேறு யாருமில்லை. ஆகையால் தாங்கள் என் மீது கிருபை கூர்ந்து * * * * *" என்று சொல்லி முடிக்குமுன் கண்கள் சுழன்று, தேகவியோக மடைந்தாள். பிறகு அந்த அம்மாளுக்குச் செய்யவேண்டிய உத்தரக்கிரியைகளை யெல்லாம் முறைப்படி நான் செய்வித்துக் குழந்தைகளை

என்னிருப்பிட மழைத்துப்போய், சென்ற ஒரு வருஷ காலமாய் எனது இரு கண்களைப்போல் காப்பாற்றி வந்தேன். ஒரு பெரிய காரியமாக நான் இப்போது திடீரென்று புறப்பட்டுச் சீமைக்குப்போகவேண்டும். நான் நாளையதினமே புறப்படவேண்டி யிருக்கிறது என் நண்பரது குழந்தைகளின் யோகக்ஷேமத்தைத் தங்களிட மொப்புவித்தால்தான் எனக்கு மனவமைதி யிருக்கும்போல் தோன்றிற்று. ஆனபடியால் நான் அவர்களை இன்றையதினம் திரிசிரபுரத்துக்குத் தங்களிட மனுப்புகிறேன். நான் திரும்பி வரும் வரையில் தாங்கள் கிருபைகூர்ந்து அவர்களை இரக்ஷிக்கப் பிரார்த்திக்கிறேன். குழந்தைகளின் பரிபாலனத்துக்காக ரூ. 5,000 மதராஸ் பாங்கியில் போட்டிருக்கிறேன். மேற்படி தொகையில் தங்களுக்குத் தேவையானதை யெடுத்துச் செலவு செய்யப் பிரார்த்திக்கிறேன். நாளையதினம் காலை எட்டு மணிக்கு அவர்கள் தங்களிருப்பிடம் வந்து சேர்வார்கள். நேரில் வந்து தங்களைத் தரிசித்து எனது நண்பரின் குழந்தைகளைத் தங்களிடம் ஒப்புவிக்க எனக்கு அவகாச மில்லாதபடியால் நான் வரவில்லை. அவ்விஷயமாய்த் தங்களை நான் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, எப்போதும் தங்களையே தியானித்துக் கொண்டிருக்கும்

தங்களடிமை,

கிருபாகரன்."

மேரியா மர்ட்டன் படித்து முடித்தவுடன், மேரியம்மாள் "என்ன அப்பா! இது பெரிய கதையாயிருக்கிறதே! ஜமீந்தார் இவ்வளவு புண்ணியசாலியா! என்ன தாராளம்! என்ன தயை! இக்குழந்தைகளைக் காப்பாற்ற நமக்குப் பணம் வேண்டுமா வென்ன? என்ன சஷ்டம் குழந்தைகளுக்கு! அவர்களுக்கு நாமே தாய் தந்தையா யிருப்போம்" என்றாள்.

மேரியா மர்ட்டன் :—நாளை இத்தருணத்துக்கு அக்குழந்தைகள் இங்கிருக்கவேண்டும். அம்மா! உனக்குத்தான் கொஞ்சம் சிரமம்!

மேரியம்மாள் :—என் கண்ணே ! அப்படிச் சொல்லாதே. இந்தக் கைங்கரியந்தான் தேவருக்கு ஏற்றது. அக்குழந்தைகளைப் பாதுகாப்பதே நம்முடைய விரதம். இதுவே தேவனுக்கு நாம் செய்யுங் கைங்கரியமாகும்.

மூன்ருவது அத்தியாயம்

உண்மையான நட்பு

" உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு.''—திருக்குறள்.

திரிசிரபுரத்தில் கிறிஸ்துவப் பெண்மணிகளுக்கென்று பிரத்தியேகமா யேற்படுத்தப்பட்ட மேரி ஸ்கூலின் தோட்டத்தி னருகே யுள்ள ஓர் அறையில் தேவகன்னிகைகளை யொத்த இரண்டு பெண்மணிகள் பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்களிலொருத்தி சுலோசனு என்பவள் மற்றவளைப் பார்த்து, "லீலாவதி ! இன்றைக் கென்ன ஒரு மாதிரியா யிருக்கிருய் ? அப்படியிருப்பதற்குக் காரணம் உற்சாகமோ அல்லது வியாகூலமோ வென்று எனக்கு ஏற்படவில்லையே'' என்று சொன்னுள்.

லீலாவதி :—அக்கா! தங்களுக்கு ஜோஸியங் கூடத் தெரியுமா வென்ன ? ஒரு விசேஷ விஷயத்தைத் தங்களிடஞ்சொல்ல வேண்டு மென்று நானும் சென்ற இரண்டு வருஷ காலமாய்ப் பிரயத்தனப் படுகிறேன். நான் சொல்ல ஆரம்பிக்கும்போ தெல்லாம் என்னவோ தோன்றிவிடுகிறது ; உடனே நிறுத்திவிடுகிறேன்.

சுலோசனு :—என்னிடங் கூட உனக்குச் சங்கோசமா ? என்னிடஞ் சொல்ல நீ யேன் தியங்கவேண்டும் ?

லீலாவதி:—அக்கா ! கூடிய சீக்கிரத்தில் எனக்குக் கலியாணம் நடக்கப்போகிறதாம். அது விஷயமாய்க் கடிதங்கூட எனக்கு வந்திருக்கிறது.

சுலோசனை:—ஏதோ பெரிய சங்கதி சொல்லப் போகிறு யென்று நான் நினைத்துக்கொண் டிருக்கிறேன். 'என்னவோ தோன்றி' விட்டதோ ? ஏதோ விளையாட்டுப் பேச்சு பேசுகிருயே !

லீலாவதி:—தங்கள் ஆசீர்வாதத்தால் இந்த விவாகப் பேச்சு வேடிக்கையாகவே முடிந்துவிட்டால் எனக்கு நிரம்ப சந்தோஷமா யிருக்கும்.

சுலோசனை:—நிஜமாய்த்தான் சொல்லுகிருய்போ லிருக்கிறது. நம்ம ஜாதியில் சாதாரணமாய்ப் பதினெட்டு வயதுக்கு மேல்தானே பெண்களுக்கு விவாகஞ் செய்கிருர்கள். அது எப்படி யிருந்தா லென்ன ? இப்போது விவாகஞ் செய்துகொள்ள உனக் கிஷ்ட மில்லாவிட்டால் வேண்டாமே இப்போது. இவ்விஷயமாய் உன்னை யார் நிர்ப்பந்தஞ் செய்ய முடியும் ?

லீலாவதி:—அக்கா! என் கலியாண விஷயம் சாமானியமாய்ச் சொல்லக் கூடியதல்ல. அது ஒரு பெரிய கதைமாதிரி சொல்ல வேண்டும். சொல்லுகிறேன் கேளுங்கள். காலஞ்சென்ற என்னு டைய தந்தையும், முத்துக்குமர நாடாரின்—இங்கு அடிக்கடி வருகி ருரே, அவர்தாம் முத்துக்குமர நாடார்—தந்தையும் இனிய நண் பர்களாம். என்னுடைய ஐந்தாம் பிராயத்தில் என் தாய் இறந்தாள். என் * * * தாய்க்கு * * * என்னிடம் * * *

சுலோசனை:—லீலாவதி ! என் கண்ணே ! துக்கத்துக்கு இடங் கொடுக்காதே. உன் தாயார் மாதிரி என்னை நினைத்துக் கொள்.

லீலாவதி:— * * * இருந்த பிரியத்துக்கு அளவேகிடை யாது. என் தந்தை என்னை மிகுந்த அன்புடன் வளர்த்து வந்தார். எங்களுக்கு நெருங்கிய பந்துக்கள் ஒருவருங் கிடையாது. என் தந்தையின் வயதுசென்ற சகோதரியும் வேலைக்காரியுந்தான் எங்க ளுடன் வசித்து வந்தார்கள். என் தந்தை இந்திரபுரி மிட்டேதா ரென்ற விஷயம் தங்களுக்குத்தெரிந்ததே. அவர் மிகவும் தனவந்தர். எனக் கின்னது வேண்டுமென்று அவரிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டியதுதான் தாமதம் ; உடனே அவ்விச்சை நிறைவேறும். என்னை அப்படி வளர்த்தார். ஒருநாள் இரவு பன்னிரண்டு மணி

சுமாருக்கு அவரென்னை யெழுப்பிக் கண்களில் நீர் ததும்ப, " என் கண்ணே! நான் வெகு நாள் உன்னுடன் இருக்கும்படியான பாக்கியத்தைப் பெறவில்லை. இன்னும் வெகு நாட்க ளிருக்கமாட்டே னென்று தோன்றுகிறது. ஆனபடியால் உன்னைப் பாதுகாத்து இரக்ஷிக்கவேண்டிய நிமித்தமாயும், என தருமைக் குழந்தையை ஒருவருமில்லாமல் ஏகாங்கியாய் விட்டுப்போக மனமில்லாமலும், எனது நண்பராகிய காசினி மிட்டேதாரிடம் ஒரு ஏற்பாடு செய்து கொண்டேன். அஃதென்னவென்று கேட்பாயே யாகில், நான் காலஞ்சென்று" * * * * * அப்பா! * * அப்பா! * * *

சுலோசனை :—என் தங்கமே! நீ அழுதால் நானெப்படி அதைச் சகிப்பேன் ?

லீலாவதி :—ஆகா ! அவரையு மிழந்துவிட்டேன். நான் எவ்வளவு பாக்கியசாலி! * * "உனக்குச் சரியான வயது வந்தவுடன் அவருடைய குழந்தை முத்துக்குமாரனை நீ விவாகஞ் செய்துகொள்வதுதான். இவ்வேற்பாட்டை அவர் மிகவும் மெச்சிக்கொண்டார். நீ அப்படிச் செய்தால் என்னுடைய மரண காலத்தில் எனக்குத் துக்கம் கொஞ்சம் குறைவாயிருக்கும்" என்று என்னிடம் சொன்னார். "அப்படியே ஆகட்டும்" என்று நான் அவருக்கு வாக்குக் கொடுத்தேன். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவர் காலஞ் சென்றார். உடனே காசினி மிட்டேதார் இருப்பிடம் நான் சென்றேன். நான் போன இடம் விளங்குமா? அக்காசினி மிட்டேதாரும் நான் போய் இரண்டு வருஷங்களில் இறந்தார். அவர் இறந்தபின் என் தந்தையின் மற்றொரு சிநேகிதரும் என்னுடைய மற்றொரு போஷகருமாகிய மாசிலாமணி உடையார் இருப்பிடம் சென்றேன். அவர் சேலத்தைச் சேர்ந்தவர். புதுக்கோட்டையில் ஒரு பெரிய பாங்கி அவர் வைத்திருக்கிறார். அவருக்குச் சந்ததியொன்றுங் கிடையாது. அவர் தனவந்தர். அவர் தாம் என்னை இப்பள்ளிக்கூடத்துக் கனுப்பினார். ஆகவே, என்னுடைய தந்தையின் முதல் நண்பராகிய காசினி மிட்டேதாரின் குமாரர் முத்துக்குமர நாடாரை நான் மணக்க வேண்டும். இந்த முத்துக்குமர நாடாருடைய தாயாரும் நம்ம பாட்டு உபாத்தியாயர் அற்புதஸாமி உடையாரும் சகோதர சகோதரிகள். முத்துக்குமர நாடாருக்குக் கார்டியன் அற்புதஸாமி

உடையார்தாம். முத்துக்குமர நாடார் நாளையதினம் இங்கு வரப்போகிறாராம்.

சுலோசனை :—முத்துக்குமர நாடாரிடம் உனக்கு அவ்வளவாக
* * * *

லீலாவதி :—இல்லை யில்லை. அதெல்லா மொன்று மில்லை. எனக்கு அவரிடத்தில் பிரியந்தான். அவர் என்னிடம் நிரம்ப விசுவாசமா யிருக்கிறார். நான் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வந்து சேர்ந்த பிறகுதான் எனக்கு மனத்தில் ஒரு விதமான சுகம் ஏற்பட்டது. இங்கு எல்லோரும் என்னிடம் பிரியமா யிருக்கிறார்கள். விவாகஞ் செய்துகொண்டால் எப்படி யிருக்குமோ ஏதோ! கலியாணமே வேண்டாமென்று எனக்குத் தோன்றுகிறது. வேறொன்றுமில்லை.

சுலோசனை :—பேஷ்! நல்ல பதில் சொன்னாய். கலியாணம் வேண்டாமா? பார்க்கலாம் அதை! அது கிடக்கட்டும். இப்போது விவாகஞ் செய்துகொள்ள உனக்கு இஷ்டமில்லாவிட்டால் பிறகு பார்த்துக் கொள்ளலாமே. அதைப்பற்றி உனக்கென்ன கவலை? அவரும் உன்னைப்போல் தனவந்தர்தாமே. அவரை நீ விவாகஞ் செய்துகொள்ளாவிடில் அவருக்கு ஏதாவது சங்கட மேற்படுமோ? இது விஷயமாய் உன்னை அவர் கட்டாயப்படுத்துகிறாரோ?

லீலாவதி :—அதெல்லாம் ஒன்றுமில்லை, அக்கா! என்னைக்காட்டிலும் அவர் நிரம்பப் பணக்காரர், தங்கமான மனிதர். அவர் அப்படி யில்லாவிட்டால்தா னென்ன? என் தந்தையி னிஷ்டப்படி நான் அவரை மணக்கவேண்டியது தானே. அநேகமாய் அவருடைய மாமன் கூட நாளையதினம் இங்கு அவருடன் வருவார். மாமனும் மருமகனும் பிரிவதேயில்லை. முத்துக்குமர நாடாருக்கு அவருடைய மாமனிடம் இவ்வளவு அவ்வளவு பிரியம் என்று சொல்ல முடியாது. பசுவும் கன்றும்போல இருக்கிறார்கள். முத்துக்குமர நாடார் அற்புதஸாமி உடையாரிடத்தில் இவ்வளவு பிரியம் வைக்க அவரிடம் என்ன கண்டாரோ?

சுலோசனா :—நீ பேசுகிற மாதிரியிலிருந்து அற்புதஸாமி உடையாரிடத்தில் உனக்கு ஏதோ அப்பிரிய மிருக்கிறதாக எனக்குத் தோன்றுகிறதே. அவர் நல்லவராயிற்றே. என்ன விசேஷம்?

லீலாவதி :—அவனா நல்லவன்? அந்தச் சண்டாளனுக்கு எப்போது தொலைவு காலம் வருமோ, அது தெரியவில்லை.

லீலாவதி அப்படிச் சொல்லிவிட்டு, பயத்துடன் கதவண்டை போய் அதைத்தாளிட்டு, ஜன்னல் கதவுகளையுந் தாளிட்டு, "அக்கா நானிப்போது சொல்லப்புகும் சமாசாரத்தைத் தாங்கள் ஒருவரிடமும் வெளியிடக்கூடாது. ஒருவரிடமும் சொல்லாம லிருக்கிறீர்களா?" என்று கேட்டாள். சுலோசனா திடுக்கிட்டு, "அப்படியே ஆகட்டும், அம்மா!" என்று சொன்னாள். பிறகு லீலாவதி சொல்லத் தொடங்கினாள்.

லீலாவதி:—அந்த அயோக்கியனை நான் விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமாம்.

சுலோசனா:—அற்புதஸாமி உடையாரையா? அப்புறம்.

லீலாவதி:—அவன் என்னைத் தனியாய்க் காணும்போதெல்லாம், 'என்னை விவாகஞ் செய்து கொள்ளுகிறாயா, இல்லையா?' என்று மிரட்டுகிறான். நான் எங்குசென்றாலும் எப்படியோ அவன் என் பின்னேயே வந்துவிடுகிறான். இப்படி அவன் சொல்லுகிறதை நான் ஒருவரிடமும் சொல்லக் கூடாதாம். பரம இரகசியமாய் வைத்துக்கொள்ள வேண்டுமாம். இல்லாவிடில், என்னை இன்ன செய்வானென்று அவனுக்கே தெரியாதாம். அவனைக்கண்டால் என் தேகம் பதறுகிறது. எனக்கு ஒன்றும் தோன்றுகிறதில்லை. என் தைரியமெல்லாம் எங்கேயோ போய்விடுகிறது.

சுலோசனா:—இவ்வளவுதானே. அவனைத் தொலைப்பது வெகு கஷ்டமா வென்ன? இத்தனைநாட்கள் நீ இதை என்னிடஞ் சொல்லாமலிருந்தது சுத்தப் பிசகு முத்துக்குமர நாடாரிடம் இவ் விஷயத்தின் கோடியை நீ காட்டியிருந்தால், அவனுயிரை அவர் அந்தக்ஷணமே வாங்கியிருப்பாரே.

லீலாவதி---அக்கா ! நல்லகாரியஞ் செய்யச்சொன்னீர்கள் ! வேறு யாரிடத்தில் வேண்டுமென்றாலும் சொல்லலாம். முத்துக் குமர நாடாரிடத்தில் மட்டும் இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவே கூடாது. அற்புதஸாமி உடையார் சாக்ஷாத் தேவரின் அவதார மென்றல்லவா முத்துக்குமர நாடாரின் அபிப்பிராயம். அவரிடஞ் சொன்னால் வீண் இரஸாபாஸமுண்டாகுமேயொழிய காரியமொன் றும் நடக்காது.

சுலோசனா :—அப்படியானால் இவ்விஷயத்தை நானே இனிப் பார்த்துக் கொள்ளுகிறேன். உன் கவலையை ஒழி.

அப்படி அவர்கள் பேசிக்கொண் டிருந்த போது, கதவுக்கு வெளியில் நின்றுகொண்டு யாரோ கூப்பிட்டதாக அவர்களுக்குத் தோன்றிற்று. லீலாவதி நடுங்கினாள். "யாரங்கே ?" என்று சுலோ சனா கேட்டாள். "நான்தான் நவமணி!" என்ற பதில் வர, "நவமணி! இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லி, சுலோசனா கதவைத் திறந்தாள். நவமணி உள்ளே வந்தவுடன், லீலாவதி, "அக்கா! தலை வலி அதிகமாயிருக்கிறது ; நான் இப்படி தோட்டத்துப் பக்கம் போய் வருகிறேன்" என்று சொல்லி வெளியே சென்றாள்.

சுலோசனா:—பெரிய துரைசாணியினிடம் அனுமதி பெற்றுக் கொண்டுதானே இங்கு வந்தாய் ?

நவமணி.—ஆமாம். கேட்டுக்கொண்டுதான் வந்தேன். நீ யென்ன ஒரு மாதிரியா யிருக்கிறாய் ? நான் வருவதற்கு முன் நீ வருத்தப்பட்டுக்கொண் டிருந்தாய்போல் தோன்றுகிறதே.

சுலோசனா:—உன்னைப்போன்ற உத்தமனின் உடன்பிறந்தவ ளாகிய எனக்குத் துக்கமே கிடையாது. நவமணி ! நீ நம்முடைய தந்தையைப் போலவே இருக்கிறாய். அது கிடக்கட்டும். பாட மெல்லாம் சரிவரப் படித்துக்கொண்டு வருகிறாயா ? நீ இப்போது காலேஜுக்குப் போயிருக்கிறாய் இனிமேல்தான் நீ நிரம்ப ஜாக் கிரதையாகப் படிக்கவேண்டும்.

நவமணி:—என்னால் கூடியமட்டும் கவனமாய்த்தான் படிக்கிறேன். வீட்டுக்குப் போனவுடன், மேரியா மார்ட்டன்கூட எனக்குக் கொஞ்சநேரம் சொல்லிக்கொடுக்கிறார். சுலோசனா! நம்மிடத்தில் அவருக்கு இருக்கும் பிரியத்துக்கு அளவே கிடையாது. படையார்பாளையத்து ஜமீந்தார் கிருபாகரர்கூட நம்மிடம் இவ்வளவு பிரியமா யில்லைபோல் தோன்றுகிறது. * * * அக்கா! நம்முடைய தகப்பனார் வக்கீல் உத்தியோகஞ் செய்துகொண்டு தகுந்த ஸ்திதியி லிருந்தாரே. பின் ஏன் நமக்கு ரூ. 2000 தான் இருக்கிறது?

சுலோசனா:—இவ்விஷயத்தைப்பற்றி எனக்கும் வெகுநாட்களாய்ச் சந்தேகந்தான். நம் தகப்பனாரிடம் நிரம்ப ரொக்க மிருந்ததாகத்தான் நமக்குத் தெரிந்தவரெல்லோரும் சொல்லுகிறார்கள். * * என்ன, லீலாவதி இன்னும் வரவில்லை? போய் நாழிகையாகிவிட்டதே.

நவமணி:—சரி, நான் வரட்டுமா?

நவமணி வெளியே சென்றவுடன், சுலோசனா "லீலாவதி! லீலாவதி!" என்று உரக்கக் கூப்பிட்டாள். லீலாவதி உடனே வந்து, "அக்கா! தங்கள் சகோதரனைப் போல எனக்குமொரு சகோதரனிருக்கக் கூடாதா? தங்களுடைய பாக்கியமே பாக்கியம். அவரைப்போல் சுந்தரமுள்ளவரை நானிதுவரை பார்த்ததே கிடையாது" என்றாள்.

சுலோசனா:—இவ்வளவுதானே. அவன் நம்மிருவருக்கும் சகோதரன்தான். அவன் எனக்குச் சகோதரனா யிருந்தால், உனக்கு மப்படித்தானே!

அவர்கள் பேசிக்கொண் டிருந்தபோது சாப்பாடு மணியடிக்க, இருவருஞ் சென்றார்கள்.

—:o:—

நான்காவது அத்தியாயம்

உட்பகை

"இனியார் தந்நெஞ்சத்து நோயுரைப்ப வந்நோய்
தணியாத வுள்ளமுடையார்—மணிவரன்றி
வீழு மருவி விறன்மலை நன்னாட
வாழ்வின் வரைபாய்த லன்று—நாலடியார்"

மாதாக் கோயிலைச் சேர்ந்த மேரி பள்ளிக்கூடத்தின் ஒரு அறையில் லீலாவதியும் சுலோசனையும் பேசிக்கொண் டிருந்தார்கள். "அக்கா! நாழிகை நிரம்ப ஆகிவிட்டதே. நாம் கடைசியில் போய்ச் சேருவோம்போ லிருக்கிறது.

சுலோசனை:- நீ பண்ணுவ தெல்லாம் வெம்பாய்த்தா னிருக்கிறது. அவர்களை யெனக்கு முன்பின் தெரியாது. நீயும் அவர்களும் எட்டின பந்துக்கள். "இனம் இனத்தோடு சேரும்" என்கிறபடி நீயும் அவர்களும் ஜமீந்தார் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். நீ அவர்கள் வீட்டுக்குப் போவது நியாயந்தான். "கொல்லன் பட்டறையில் கொசுவுக் கென்னவேலை?" என்றபடி, எனக்கும் நவமணிக்கும் அங்கு என்னவேலை? அவர்கள் எங்களையும் உன்னுடன் விருந்துக்கு அழைத்ததற்கு நீதான் காரணம். முகமறியாதவர்கள் வீட்டுக்குப் போவதென்றால், எனக்கு இலஜ்ஜையாயிருக்கிறது. போகாமல் இருந்தாலும் நன்றாயிராது. நீ இப்படித் தருமசங்கடத்தை யுண்டாக்கிவிட்டு வேடிக்கை பார்க்கிறாயே.

லீலாவதி:—என்ன, அக்கா! நீங்களிருவரும் அழைக்கப்படாத இடத்துக்கு நான் போகமாட்டே னென்பதைத் தெரிந்துகொண்டு அவர்கள் உங்களிருவரையும் அழைத்திருக்கிறார்கள். நான் ஒன்றுஞ் சொல்லவில்லை. வண்டியிலேறியபிறகுகூட நீங்கள் தகாறு பண்ணுவீர்கள்போ லிருக்கிறதே? வாருங்கள், போகலாம். வண்டிக்காரன் வெளியில் கூச்சல் போடுகிறான்.

பிறகு அவ்விருவரும் தகுந்த ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டு வண்டியிலேறி, ஜமீந்தார் வீட்டை யடைந்தார்கள்.

லீலாவதியை வெகுநேரமாக எதிர்பார்த்துக்கொண் டிருந்த ஜமீந்தாரின் ஸம்ஸாரம் அவர்களை எதிர்கொண்டு வந்து, மிகுந்த அன்புடன் உள்ளே அழைத்துச் சென்று உபசாரஞ் செய்தாள். சாப்பாடு முடிந்த பிறகு, லீலாவதியும் சுலோசனுவும் தாம்பூலம் போட்டுக்கொண்டு உல்லாசமாய்ப் பேசிக்கொண் டிருக்கையில், அற்புதஸாமி உடையார் திடீரென்று அவர்களுக்குமுன் வந்து நின்று, 'லீலாவதி! உன்னுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டு மாடியில் எல்லோரும் உட்கார்ந் திருக்கிறார்கள். உன்னுடைய பாட்டின் மகிமை வெகுதூரம் பரவியிருக்கிறது. சீக்கிரம் வா, போகலாம். வேண்டுமென்றால் உன்னுடன் கூட நான் ஹார்மோனியம் வாசிக்கிறேன்" என்று லீலாவதியினிடஞ் சொன்னார்.

லீலாவதி:—எனக்குத் தலைவலி அதிகமா யிருக்கிறது. உடம்பும் அவ்வளவுசரியா யில்லை. என்னால் பாட முடியாதுபோல் தோன்றுகிறது. அவர்களிடம் தயவுசெய்து சொல்லுங்கள்.

அற்புதஸாமி:—நான் அவர்களிடம் வாக்குக் கொடுத்துவிட்டேன். இல்லாவிட்டா லென்ன? என்னுடைய வார்த்தைக்குக் கௌரவமாய் ஒருபாட்டு மட்டும் பாடிவிட்டு வந்து விடேன். போகலாம் வா, தாமதிக்காதே.

லீலாவதி:—என்னால் முடிய வில்லையே, என்ன செய்வேன்? வீணில் என்னை என் தொந்தரவு செய்கிறீர்கள்? உடம்பு சரியா யிருக்கும் பக்ஷத்தில் நான் வரமாட்டேனா?

சுலோசனா:—லீலாவதி! என் இப்படிச் சங்கடப் படுகிறாய்? உன்னால் முடியாவிட்டால், வேண்டாமே. உடையார் உன்னைக் கட்டாயப் படுத்துவாரா என்ன? உன்னால் முடியாவிட்டால் முடியாது என்று ஒருவார்த்தையில் சொல்லேன். என்னவோ கதை பேசுகிறாயே.

சுலோசனா அப்படிச் சொல்லிக்கொண் டிருக்கையில், ஜமீந்தாரும் தற்செயலாய் அங்கு வந்து சேர்ந்தார். "மாமா! நல்ல சமயத்தில் வந்தீர்கள். இங்கே வரும்போதே, தலைவலிக்கிறதென்று

லீலாவதி என்னிடஞ் சொன்னாள். இரண்டு மூன்று நாட்களாக அவளுக்கு உடம்பு சரியாகவே யில்லை. அவளால் பாட முடிய வில்லையாம்" என்று சுலோசனை அவரிடஞ் சொன்னாள்.

"அதற்கென்ன இப்போது? குழந்தையை நான் தொந்தரவு செய்வேனா? நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்" என்று பதில் சொல்லிவிட்டு ஜமீந்தார் வெளியே போனார். போனவுடன் சுலோசனை, "உங்களைக் கண்டால் லீலாவதி ஏன் இவ்வளவு பயம் பயப்படு றாள். பேய் பிசாசு என்றால்கூட இவ்வளவு பயப்படமாட்டாள்போ லிருக்கிறதே. நான்மட்டும் அவளுட னில்லாவிட்டால், தாங்கள் எப்படியு மவளைப் பாடச்சொல்லி யிருப்பீர்கள். அதென்னவோ எனக்குத் தெரியாது. நியாயமாகவோ, அல்லது நியாயமில்லா மலோ, அவளுடைய இஷ்டத்துக்கு விரோதமாய் அவளிடம் யார் நடந்து கொண்டாலும் சரி, எனக்கு அது சகிக்கிறதில்லை" என்று அற்புதஸாமி உடையாரிடஞ் சொன்னாள்.

தம்முடைய இரகசியம் சுலோசனைவுக்குத் தெரிந்து விட்ட தென்று கண்டு, அற்புதஸாமி உடையார் கவலையுடன் போய்ச் சேர்ந்தார்.

——:O:——

ஐந்தாவது அத்தியாயம்

வருபயனறியாத கோபம்

"மறத்தல் வெகுளியை யார் மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்."—திருக்குறள்.

ஒருநாள் சாயந்திரம் ஐந்துமணி சுமாருக்கு, நவமணி தன் னுடைய சகோதரியைப் பார்க்க வேண்டி, மேரி பள்ளிக்கூடத் துக்குப் போயிருந்தான். நவமணி அறைக்குள் சென்றவுடன், லீலாவதி வழக்கம்போல் ஏதோ காரணத்தைச் சொல்லிவிட்டு வெளியே போய்விட்டாள். நவமணியும் சுலோசனையும் லீலாவதி யின் குணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

நவமணி:—இவ்வளவு அழகு வாய்ந்த பெண்ணை நான் பார்த்ததே கிடையாது. அழகும் குணமும் வாய்ந்திருக்கிறதே, அது தான் மெச்சத் தகுந்தது. இந்த வயதில் என்ன புத்தி கூர்மை பார். ஆனால் ஒன்று. முத்துக்குமரன் அவளுக்கு ஏற்ற புருஷனல்ல. அதுதான் எனக்குத் தெரியும். அவர்களிருவரும் சாதாரண சிநேகிதர்களைப்போல இருக்கிறார்களே யொழிய, விவாகஞ் செய்துகொள்ளத் தக்க பிரியம் இருப்பதாகத் தோன்ற வில்லையே. அவ்விதப் பிரியமில்லாமல் விவாகஞ் செய்துகொண்டால், அவர்களுக்கு ஆயுள் பரியந்தம் துக்கமல்லவா ஏற்படும்? மேலும், * * *

நவமணி "மேலும்" என்று தொடங்கி மேலே சொல்லுவதற்கு முன் முத்துக்குமர நாடார் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து, கடுகடுவென்று நவமணியைப் பார்த்துவிட்டு, வெகு விநயத்துடன் சுலோசனாவைப் பார்த்து, "நீங்களிருவரும்—லீலாவதியும் நீங்களும், பேசிக்கொண் டிருக்கிறீர்க ளென்று நினைத்துத் தெரியாமல் வந்துவிட்டேன். அவள் தோட்டத்துப் பக்கம் சென்றிருக்கிறாளோ? சரிதான், வருகிறேன்" என்று சுலோசனாவினிடஞ் சொல்லிவிட்டு உடனே கதவைச் சாத்திக்கொண்டு வெளியிற் சென்றார்.

பிறகு நவமணியும் சுலோசனாவும் முத்துக்குமரனிடம் வீண் வருத்தமுண்டாயிற்றே யென்று வருத்தப்பட்டார்கள். நேரமாகி விட்டபடியால், நவமணி தன் னிருப்பிடத்துக்குப் புறப்பட்டுத் தோட்டத்தின் வழியாக வெளியே போய்க்கொண் டிருந்தபோது, முத்துக்குமர நாடார் வழியில் நின்றுகொண் டிருந்தார். அவரருகில் நவமணி போனவுடன், "நீயும் உன் சகோதரியும் பேசிக்கொண் டிருந்த விஷயம் எனக்குத் தெரியுமென்பது உனக்குத் தெரியுமென்றே நான் நினைக்கிறேன். என் விஷயத்தைப் பற்றி நீ பேச வேண்டிய அவசியமென்ன?" என்று முத்துக்குமர நாடார் நவமணியைக் கேட்டார்.

நவமணி:—அவ் விஷயத்தைப் பேசினதைப் பற்றி நான் நிரம்ப வருத்தப்படுகிறேன். அது என் மீது பிசகுதான். அது விஷயமாய் நீ என்னிடம் மனஸ்தாபப் பட்டுக்கொள்ளாம லிருக்கும்படி நான் உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏதோ எனக்குத் தோன்றினதை என் சகோதரியினிடஞ் சொன்னேனே யொழிய, வேறு வித்தியாசமாய் நானொன்றுஞ் சொல்லவில்லை. நான் சொன்னது பிசகுதான்.

முத்துக்குமரன்:—இது நல்ல சமாதானம். ஏதோ எனக்குத் தோன்றுகிறபடி கண்டபடி நான் உன்னைப் பற்றிப் பேசிவிடலாம் போ லிருக்கிறது. இந்த நீதி எனக்கு இதுவரையில் தெரியாது. உன்னிட மிருந்துதான் கற்றுக் கொண்டேன். லீலாவதியும் நானும் எக்கேடு கெட்டால் உனக்கு ஆகவேண்டியது என்ன? நான் அவளுக்கு எற்ற புருஷன் இல்லை என்பதைப்பற்றி உனக் கென்ன கவலை? இவ் விஷயத்தைப் பற்றி நீ பேசவேண்டிய அவசியமென்ன?

நவமணி:—பேசினது என்மீது பிசகுதா னென்று பன்முறை சொல்லிவிட்டேன். இன்னுமென்ன செய்யவேண்டும்? அதைத் தான் சொல்லேன், கேட்கலாம். இதைப்பற்றி நீ யென்னை மடக்கி மடக்கிச்கேட்பதில் பயனென்ன? வீண் வார்த்தைச் செலவுதான்.

முத்துக்குமரன்:—வீண் வார்த்தையா! வெகு நன்றாயிருக் கிறது. குதிரை தள்ளிவிட்டது மல்லாமல் குழியையும் பறித்து மூடின கதையாகத்தா னிருக்கிறது நீ சொல்வது. ஜாக்கிரதையா யிரு. தகுந்த வம்சத்து ஸ்திரீகளைப்பற்றி உன்னைப்போன்ற கேவல மான * * * *—

முத்துக்குமரன் சொல்லி முடிப்பதற்குள், "சீ, சீ, நாயே! அதிகமாய்ப் பேசாதே! எது, இடத்தைக் கொடுத்தால் மடத் தைப் பிடுங்குகிறாய். உன்னுடைய வாலை என்னிட மாட்டாதே! ஒட்ட அறுத்துவிடுவேன். நீ ஒரு பெரிய மனுஷனும், மிட்டே தாரின் பிள்ளையாம்! நீ மிட்டேதாரின் பிள்ளையா யிருந்தால், இப்படிக்கேவலமாய் நடந்துகொள்ளவே மாட்டாய். நீ மிட்டாய்க் காரன் பிள்ளைதான். நான்தான் சொன்னது தவறென்று ஒப்புக்

கொண்டேனே. என்னவோ, பெரிய மனுஷனும், சின்ன மனுஷனும், பேச்சுப் பலுக்குகிறுன்! நான் அப்படித்தான் பேசுவேன். நீ என்னடா பண்ணுவாய்? காட்டடா உன் கைவரிசையை, பார்க்கலாம்'' என்று நவமணி முத்துக்குமர நாடாரிடஞ் சொன்னுன்.

முத்துக்குமரன் :—டேய், ஜாக்கிரதை! உன்னுடம்பிலுள்ள தடித்தனம் உன்னை இப்படிப் பேசச் சொல்லுகிறது. உனக்குத் தகுந்த மரியாதை செய்வேன்.

நவமணி :—காட்டேனடா உன் கைவரிசையை. வீண் வீராப்பு ஏன் பேசுகிறுய்? குலைக்கிற நாயா கடிக்கப் போகிறது?

“குலைக்கிற நாயா கடிக்கப் போகிறது?'' என்று நவமணி சொன்னவுடன், முத்துக்குமரன் நவமணியின் மேல் பாய்ந்தான். இருவரும் கைகலந்து கொண்டார்கள். “முத்துக்குமரா! என்ன இது, விகாரமா யிருக்கிறதே'' என்று சொல்லிக்கொண்டே அற்புதஸாமி உடையார் விரைவில் அவர்களை யணுகி, சண்டையை விலக்கினுர். முத்துக்குமர நாடார் சண்டையின் காரணத்தை அவரிடஞ் சொன்னுர்.

அற்புதஸாமி உடையார் :—இப்படிக்கூட ஒருவரோடொருவர் சண்டை செய்துகொள்வ துண்டா? உனக்குத் தோன்றுகிற ஒரு விஷயத்தை நீ என்னிடஞ் சொல்லமாட்டாயோ! அதேமாதிரி, நவமணி அவனுக்குத் தோன்றினதை அந்தரங்கமாய்த் தன் சகோதரியினிடம் சொன்னுண். தற்செயலாய் நீ அங்கு சென்றுய். அதற்கு அவர்கள் என்ன செய்வார்கள்?

முத்துக்குமரன் :—மாமா! நான் செய்தது தவறுதான்.

அற்புதஸாமி உடையார்:—ஏன், அவன் சொன்னது சரியாகவே இருக்கலாம். லீலாவதிக்கு நீ தகுந்த கணவனல்லவோ என்னவோ? காலதேச வர்த்தமானம் எப்படி யிருக்குமோ? அது போகட்டும். இது விஷயமாய் உங்களிருவருக்கும் வருத்தமில்லை யென்று இருவரும் பேசிக்கொள்ளுங்கள், பார்க்கலாம்.

“அந்த அற்பனேடா நான் பேசுவது?'' என்று முத்துக்குமர நாடார் சொல்லி வாய்மூடுமுன், பளீர் என்று அவர் கன்னத்தில்

ஒரு அடி விழுந்தது. முத்துக்குமார நாடார் திடுக்கிட்டு இரண்டொரு நிமிஷம் நின்றார். நவமணி சரேலென மறைந்து ஓடிவிட்டான்.

———o———

ஆறாவது அத்தியாயம்

சினம் தன்னையே சுடும்

"மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்."—திருக்குறள்.

"மணி எழுக்குமே லாகிவிட்டதே! இவ்வளவு நாழிகை வராமலிருக்க மாட்டானே" என்று சொல்லிக்கொண்டு, மேரியா மர்ட்டன் போஜனத்துக்கு உட்காராமல் நவமணியின் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார். அரைமணி சாவகாசத்துக்குப் பிறகு, பெருமூச்சு விட்டுக்கொண்டு நவமணி வீடு வந்து சேர்ந்தான். "என்ன அப்பா, இப்படி வந்திருக்கிறாய்? எதற்காக இப்படி ஓடி வந்திருக்கிறாய்? என்ன சமாசாரம்? யாரோடாயினும் சண்டை போட்டாயா?" என்று மேரியா மர்ட்டன் அவனைக்கேட்டார். சண்டையின் விவரத்தை நவமணி அதிகத் துக்கத்துடன் அவரிடம் சொன்னான். அப்படிச் சொன்னபோது, நவமணிக்குக் கோபமதிகரித்துக் கொண்டே வந்தது. அவன் தன்னாலியன்ற மட்டும் அதை அடக்கிக்கொள்ள முயன்றும், அவனால் முடியவில்லை. அவ்விஷயத்தை மேரியா மர்ட்டன் நுட்பமாய்க் கவனித்துக் கொண்டுவந்து, நவமணி சொல்லி முடித்ததும், "அப்பா! நீ செய்தது தவறுதான். அதற்குச் சந்தேகமேயில்லை ஆனால் முத்துக்குமான் நடந்துகொண்டதும் பிசகுதான். செய்தது தவறென்று நீ அவனிடம் ஒப்புக்கொண்ட பிறகு உன்னை அவன் ஏசியிருக்கலே கூடாது. அவனிடம் வாய்ப்பேச்சோடு நிற்காமல் நீ அவனை அடித்தது எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது.

"கூர்த்துநாய் கௌவிக்கொளக் கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவின ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு"—(நாலடியார்) என்றபடியும்,

"இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று" (திருக்குறள்) என்றபடியும் நாய் கடிக்கக் கண்டும், தம்மைப் பற்களாற் கடித்த நாயைக் கடித்தவர்கள் இவ்வுலகிலில்லை. கீழானவர்கள் இழிவான சொற்களைச் சொன்னால், மேலானவர்கள் ஒன்றும் சொல்லார்கள். பெருங் கஷ்டத்தை ஒருவன் உனக்கு உண்டாக்கினாலும், அவன்மேல் நீ கோபங்கொள்ளாமலிருப்பதே பெருங்குணம். நீ கோபத்துக்கு இடங்கொடுத்ததனால்தான் இது ஏற்பட்டது. இப்படி உனக்கு அடிக்கடி கோபம் திடீரென்று வருவதற்கு உன்மீது குற்றங்கூற நான் இப்போது தயாராயில்லை. உன் தந்தை இறந்த பிறகு, உன்னுடைய சிறிய தகப்பன் உன்னை அகாரணமாய்த் துன்பப் படுத்தினான். அதனால் அச்சிறுவயதிலேயே உனக்குக் கோபமென்பது ஏற்பட்டது. நீ என்னிடம் வந்தபோது உனக்கிருந்த கோபத்தில் நூற்றில் ஒரு பங்கு கூட இப்போது இல்லை. ஆனபடியால் இன்னுங் கொஞ்சநாட்களில் உன்னைவிட்டுக் கோபம் அகன்றுவிடும். பயப்படாதே!" என்றார்.

நவமணி:—தாங்களென்மீது அளவற்ற கருணையோடிருக்கிறீர்கள். கோபம் கூடாதென்று எனக்குப் பல விதத்தில் சொல்லியிருக்கிறீர்கள். நான் தங்களுடைய வார்த்தையை மீறி நடந்துகொண்டதற்கு என்னை மன்னிக்கும்படி பிரார்த்திக்கிறேன். தங்களுடனிருப்பதற்கு நான் தகுதியற்றவன்.

மேரியா மர்ட்டன்:—நவமணி! உன்பேரில் எனக்கு இனி வருத்தமில்லை. ஆனால் நீ ஒன்றுமட்டுஞ் செய்யவேண்டும்.

நவமணி:—தாங்கள் எது சொன்னாலும் அதைச் செய்யத் தயாராய்க் காத்துக்கொண்டிருக்கிறேன்.

மேரியா மர்ட்டன்:—என்னவென்றால், மறுபடியும் முத்துக்குமான் திரிசிரபுரத்துக்கு வரும்போது, நீ அவனைக் கண்டு, அவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும். அவ்வளவுதான்.

நவமணி:—அப்படியே செய்கிறேன்.

பிறகு அவ்விருவரும் போஜனத்துக் கெழுந்தார்கள்.

—o—

ஏழாவது அத்தியாயம்

லீலாவதி உண்மையை உரைக்கிறாள்

இசையாவொரு பொருளில் லென்றல் யார்க்கும்
வசையன்று வையத்தியற்கை—நகையழுங்க
நின்றோடிப் பொய்த்தனிரை தொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்றமுடைத்து—நாலடியார்.

"நேற்றுச் சாயந்திரமேதான் முத்துக்குமார நாடார் வந்து விட்டாராமே. ஏன் அவர் இன்னு மிங்குவரவில்லை?" என்று லீலாவதி யோஜித்துக்கொண்டு முத்துக்குமாரனைத் தன்னிருப்பிடத்தில் எதிர்பார்த்துக்கொண் டிருந்தாள். அப்போது முத்துக் குமாரனும் அவளிச்சையை யறிந்தவன் போல், "லீலாவதி" என்று கூப்பிட்டுக்கொண்டு உள்ளே வந்து, நாற்காலியி லுட்கார்ந்து, லீலா வதியின் முகத்தைப் பார்த்துவிட்டு, வருத்தத்துடன், "உன் முகம் ஏனிப்படி வாட்டமுற் றிருக்கிறது? மனத்தில் கவலை ஏதாவது வைத் துக்கொண் டிருக்கிறாயா? அல்லது உடம்பு ஏதேனும் சரியாக இல்லையா? என்ன சமாசாரம்?" என்று முத்துக்குமாரன் அவளைக் கேட்டான்.

லீலாவதி:—தாய்தந்தைய ரில்லாத நான் ஒரு அனாதை! சுமார் இரண்டு மூன்று வருஷங்களாக சுலோசனாவை நான் என் சகோ தரியைப்போல் பாவித்து வந்தேன். அவளுடைய சகோதரனுக்கும் தங்களுக்கும் மனஸ்தாபமேற்பட்டது. எல்லா விஷயங்களையும் என்னிடம் சொல்லிக்கொண்டிருந்த சுலோசனா இப்போது என் னிடம் ஒரு விதமாய் இருக்கிறாள். தங்கள் பேரில் குற்றமிருக்கிற தென்று அவள் நினைத்துக்கொண் டிருக்கிறாள். தாங்களும் நானும் விவாகஞ் செய்துகொள்கிற தென்று ஏற்பாடா யிருக்கிறபடியால் இதுவிஷயத்தை என்னிடஞ் சொல்லப் பயப்படுகிறாள். சண்டை நடந்தது முதல் என்னிடம் ஒரு விதமாயிருக்கிறாள். அவளப்படி இருப்பது எனக்குச் சகிக்கவில்லை. மேலும் நேற்றுச் சாயந்திரம் தற்செயலாய் மேரியா மர்ட்டன் தங்களிருப்பிடம் வந்தபோது, இந்த மனஸ்தாபத்தின் விஷயமாய் அவர் தங்களிடம் பேசினதாக வும், தாங்கள் அப்போது அதிகக் கோபங்கொண்டு, சுலோசனாவின்

சகோதரனைத் தொலைத்து விடுவதாயும், அவனை அயோக்கியனென்றும் ஈனஜாதிப் பிள்ளை யென்றும் பற்பல தகாத வார்த்தைகளைச் சொல்லி ஏசினதாயும் இங்கே யெல்லோரும் சொல்லிக்கொண்டார்கள். இவ்விதம் தாங்கள் சொன்னீர்களென்பதின் உண்மையை அறிந்துகொள்ளவேண்டி சுலோசனு இப்போது மேரியா மர்ட்டன் இருப்பிடஞ் சென்றிருக்கிறாள். அவள் துக்கப்படுவது எனக்குத் துக்கத்தை யுண்டுபண்ணுகிறது.

முத்துக்குமரன் :—இவ்வற்ப விஷயத்துக்காக நீ வருத்தப்பட்டால், அவ்வருத்தத்தை இதேக்ஷணம் நிவர்த்தி செய்கிறேன். எப்படி யென்றால், நீ இப்போது சொன்ன சமாசாரங்களில் பாதிதான் உண்மை; பாட்டியம்மாள் ஹோட்டலுக்கு நேற்றுச் சாயந்திரம் மேரியா மர்ட்டன் வந்திருந்தார். நான் இது விஷயமாய் அவரிடம் பேசினேன். அதுவரையில் நீ சொன்னது சரிதான். சண்டையின் விஷயமாய் நவமணி நிரம்ப வருத்தப்படுகிறான் என்றும், அவன் என்னுடைய மன்னிப்பை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறானென்றும் அவர் என்னிடம் சொன்னார். அது விஷயமாய் நான் நடந்துகொண்டதே முட்டாள்தனமென்றும், நியாயமாய் நவமணியினிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் நான் அவரிடஞ் சொன்னேன். அதற்கு அவர் எங்களிருவருக்கும் மனஸ்தாபமில்லை யென்பதற்கு அறிகுறியாய் என்னை இன்றையதினம் சாயந்திரம் அவர் வீட்டுக்குச் சாப்பிட வாச்சொல்லி யிருக்கிறார். நவமணியின் பேரில் எனக்கு வருத்தமே கிடையாது. துர்ப்பாஷையாய் நான் அவனை யொன்றுஞ் சொல்லவில்லை—நேற்றைத்தினம். என் மீது இன்னுமேதாவது குற்றமுண்டானால் உடனே அதையுஞ் சொல்லிவிடு. ஒன்றையும் மனத்தில் வைத்துக்கொள்ளாதே. உன் னிஷ்டப்படி நடந்துகொள்ள நான் தயாராய்க் காத்துக்கொண் டிருக்கிறேன்.

லீலாவதி :—தங்கள் குணமே குணம்! இன்னுமொரு விஷயந்தான் பாக்கி யிருக்கிறது. இக்கடிதத்தைத் தாங்கள் பார்த்தால் போதும்.

முத்துக்குமரன் :—மாசிலாமணி நாடாரிடமிருந்து வந்திருக்கிறதே. இங்கே கொடு, படிப்போம்.

"என்னருமை லீலா! அவசரமாய் நான் சென்னப்பட்டணம் போக வேண்டியிருப்பதால், அதிகமாய் எழுத முடியவில்லை. அதைப் பற்றி என்னிடம் வித்தியாசமான எண்ணங் கொள்ளாதே. ஆனுலும் நீ கேட்டிருக்கிற விஷயங்களுக்கு நான் கூடியமட்டும் யோஜனை செய்து பதிலெழுதி யிருக்கிறேன். பரஸ்பரம் ஒருவர்மேலொருவருக்குக் காதலில்லாம லிருக்கும்போது அவ்விருவரும் விவாகஞ் செய்து கொள்வது நிரம்பத் தவறு. அது நம்முடைய கொள்கைக்கே விரோதமானது. பிரிய மில்லாமல் விவாகஞ் செய்துகொள்வது கடவுளுக்கு ஏற்காது. மனத்தில் சுயமாய்ப் பிரியமில்லாம லிருக்கும்போது, எவ்விதக்காரணத்தைக்கொண்டும், எவ்வித ஏற்பாட்டை அனுசரித்தும், விவாகஞ்செய்து கொள்ளவே கூடாது. நானின்னும் சில தினங்களில் நேரில் வந்து எல்லா விஷயங்களையும் சொல்லுகிறேன். அது வரையில் இவ்விஷயமாய் நீ தனியே ஒரு முடிவும் செய்யவேண்டாம். நாமிருவரும் கலந்து பேசிக்கொண்டு, பிறகு முடிவு செய்யலாம்."

லீலாவதி! நீ செய்தது சரியான காரியம். இவ்விஷயமே சில நாட்களாய் என் மனத்திலுமிருந்தது. இவ்வளவு தைரியமாய் இவ் விஷயத்தைப் பற்றி நீ யோஜனைசெய்து முடிவுக்கு வந்தது உன்னுடைய பெருங்குணத்துக் கறிகுறியா யிருக்கிறது. இவ்வெண்ணம் எனக்குத்தோன்றியபோ தெல்லாம், நமது அருமைத் தந்தைகளி னிஷ்டத்துக்கு விரோதமாய் நடப்பது பிசகென்றும் பாவமென்றும் எனக்குத் தோன்றி, இவ்வெண்ணத்துக்கு நான் இடங் கொடுக்காம லிருந்தேன். ஆனபடியால்தான் நான் உன்னிடங் கூட இதைத் தெரிவிக்கவில்லை. இதே அபிப்பிராயம் உனக்கு மிருந்த தென்று எனக்குத் தெரிந்திருந்தால், நான் தைரியமாய் உன்னிடம் சொல்லி யிருப்பேன். இரண்டு மூன்று வருஷங்களுக்கு முந்தியே நான் சொல்லியிருப்பேன்.

லீலாவதி:—இப்போது அதனுல் ஒன்றும் கெட்டுப்போகவில்லை. இப்போதாவது நாம் நமது அபிப்பிராயங்களை வெளியிட்டுக் கொண்டோமே, அதுவே பெரிய காரியம். எனக்குச் சகோதரர்கள் ஒருவருமில்லையென்று நான் இதுவரையில் துக்கித்துக்கொண்டிருந்தேன். இதே க்ஷணத்தில் அந்தத் துக்கம் நீங்கி விட்டது. தாங்

களே எனதன்புள்ள சகோதரர். தாங்களு மென்னைத் தங்கள் சகோதரியாகவே பாவிக்கவேண்டும்

முத்துக்குமரன் :—இதை நீ எனக்குச் சொல்லவேண்டுமா வென்ன ? ஒரு வேடிக்கை; இதைக் கேள். நமக்கு விவாக நிச்சய தார்த்தம் நடந்து பல வருஷங்களாகியும், அதற்கு அறிகுறியாக உலக வழக்கப்படி நாம் மோதிரம் வாங்கிக் கொடுக்கவில்லையே யென்று, சென்னையை விட்டுப் புறப்பட்டபோதுதான் எனக்குத் தோன்றிற்று. உடனே " பி. ஆர். அண்டு ஸன்ஸ் " கம்பெனிக் குப்போய் ஒரு மோதிரம் வாங்கினேன். இதோ பார் அதை ! உனக்கென்று நான் இந்த மோதிரத்தை வாங்கி வந்தபடியால் இதை என் ஞாபகார்த்தமாய் நீ அணிந்துகொண்டால் எனக்குச் சந்தோஷமாயிருக்கும்.

லீலாவதி :—இதில் தங்கள் பெயரும் என் பெயரும் வெட்டப் பட்டிருப்பதால் இதை நான் அணிந்துகொள்வது சரியல்ல. நியாய மாய்க் கொடுக்கவேண்டிய உத்தமிக்கு நீங்கள் அதைக் கொடுங்கள்.

முத்துக்குமரன் :—அப்படியானால், நான் கையில் இப்போது போட்டுக்கொண் டிருக்கும் பச்சைக் கல் மோதிரத்தையாவது போட்டுக்கொள்ளேன். அதற்கும் ஆக்ஷேபனை ஏதாவது சொல் வாயோ ?

லீலாவதி :—அதற்கும் ஆக்ஷேபனை உண்டு. ஆனால் அது நிர் ஆக்ஷேபனை.

முத்துக்குமரன் :—இவ்விவாக சமாசாரத்தை நான் எப்படி என் மாமனிடம் சொல்லுவேன் ? அவரிடமிதைச்சொன்னால் அவர் என்ன சொல்வாரோ.

லீலாவதி :—இது தானா பெரிய காரியம்? இவ்விஷயத்தைத் தாங்கள் அவரிடம் பிரஸ்தாபிக்கவே வேண்டாம். மாசிலாமணி நாடாரைவிட்டுச் சொல்லச்சொல்லுகிறேன்.

" பேஷ் ! நீ சொல்வது நிரம்ப சரி. நான் போய் வருகிறேன்" என்று சொல்லி முத்துக்குமார நாடார் லீலாவதியினிடம் விடை பெற்றுக்கொண்டு, ஞாபகக் குறைவால், தன்னுடைய பச்சைக்கல் மோதிரத்தை லீலாவதியினிடம் கழற்றிக் கொடுக்காமலும், விவாக

நிச்சயத்துக்கு அறிகுறியாகக் கொண்டுவந்த வைர மோதிரத்தைத் தன்னுடைய ஜோபியில் போட்டுக்கொண்டும், தன் மாமனைக் கூட்டிக்கொண்டு மேரியா மர்ட்டன் வீட்டுக்குச் செல்லும் பொருட்டு, தன்னிருப்பிடத்துக்கு விரைந்து சென்றான்.

———o———

எட்டாவது அத்தியாயம்

நவமணியின் காதல்

"உடம்போ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையோ டெம்மிடை நட்பு."—திருக்குறள்.

பள்ளிக்கூடத்தில் லீலாவதியும் முத்துக்குமாரனும் பேசிக் கொண்டிருந்த அதே சமயத்தில் காவேரி யாற்றின் மணலில் உலாவிக்கொண்டு, நவமணியும் சுலோசனனும் எதைப்பற்றிப் பேசிக் கொண் டிருந்தார்க ளென்பதை நாம் சற்று விசாரிப்போம்.

சுலோசனன்:—உங்கள் சண்டை ஒழிகிறவழியாய்க் காணோமே. நேற்றுத்தான் வந்தானும். தற்செயலாய் மேரியா மர்ட்டன் அற்புதஸாமி உடையார் வீட்டுக்கு நேற்றுச் சாயந்திரம் போயிருந்தாராம். மேரியா மர்ட்டன் அவனிடம் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசின போது அவரிடமே அவன் உன்னைப்பற்றி ஏகதேசமாய்ப் பேசினனுமே. ஆஸாமி பெரிய வம்புக்காரன்போ லிருக்கிறதே.

நவமணி:—யார் உனக்கு இப்படிச் சொன்னது? நீ சொல்வது வேடிக்கையா யிருக்கிறதே. நேற்றுச் சாயந்திரம் மேரியா மர்ட்டன் அவனைப்பார்த்தார். இதுவிஷயத்தைப் பற்றியும் அவர் அவனிடம் பேசினாராம். அவன் தன்மீதுதான் குற்றமென்று வருத்தப்பட்டானும். முத்துக்குமாரன் நல்லவன்தான். சண்டை நடந்த தினமே நாங்கள் சிநேகிதர்களாகி யிருப்போம். அற்புதஸாமி உடையார் சூதான வார்த்தைகள் இரண்டொன்று சொல்லி அவனுக்குக் கோபத்தை மறுபடியும் உண்டாக்கினார். நான் அவனிடம் மன்னிப்புக் கேட்பதே அவசியமில்லை யென்று சொன்னானும். எங்கள் மனஸ்தாபம் ஒழிந்ததற்கு அறிகுறியாய் அவனை இன்றைய தினம் அவர் தமது வீட்டுக்குச் சாப்பிட வாச்சொல்லி யிருக்கிறார்.

அவனும் சாப்பிட வருவான். இவ் வற்ப விஷயத்தைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிருய்? அதுதான் எனக்கு நிரம்பவும் வேடிக்கையா யிருக்கிறது. ஆனால் ஒரு விஷயம். * * * ஒன்றுமில்லை.

சுலோசனு :—என்னவோ சொல்ல ஆரம்பித்துவிட்டு, திடீ ரென்று நிறுத்தி விட்டாயே.

நவமணி :—ஒன்றுமில்லை.

சுலோசனு :—நமக்குள்கூட இரகசியம் இருக்கிறதா என்ன?

நவமணி :—நீ இப்படிக் கேட்டால் நான் என்ன செய்கிறது? முத்துக்குமாரனுக்கும் லீலாவதிக்கும் நடக்கப்போகிற விவாகத்தைப் பற்றி நினைத்தால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போ லிருக் கிறது. முத்துக்குமாரன் அவளுக்குத் தகுந்த கணவனே யில்லை.

சுலோசனு :—நீ சொல்வதற்கு எனக்கு அர்த்தம் தெரிய வில்லையே.

நவமணி :—நான் ஒன்றும் பரிபாஷையில் பேசவில்லையே. அவர்களிருவரும் மணம்புரிந்துகொள்வது சுத்தத் தப்பு. சரியே யில்லை. அவ்விருவருக்கும் பரஸ்பரம் விசுவாசமே கிடையாது. அவர்கள் விவாகஞ் செய்துகொண்டால் வீண் துன்பந்தான் ஏற் படும். அதற்குச் சந்தேகமில்லை. அவ்விவாகத்தைத் தடுக்க எது அவ சியமென்றாலும் நான் செய்து விடுவேன். பெற்றோர்கள் யோஜிக்கா மல் இப்படிக்கூட ஏற்பாடு செய்வார்களோ?

சுலோசனு :—“உரத்தநாட்டுச் சத்திரத்தில் ஊறுகாய்க்கு வடு மாங்காய் போட்டால் நமக்கென்ன, அல்லது வெந்தய மாங்காய் போட்டால்தான் நமக்கென்ன?” என்ற தென்னுட்டு வசனப்படி, அவர்களெப்படிப் போனுல் உனக்கு ஆகவேண்டியதென்ன? யானை தன் தலையின்பேரில் குப்பையை வாரிப் போட்டுக்கொண்டால், அதைப்பற்றி உனக்கென்ன கவலை?

நவமணி :— உனக்கு நானின்னும் வெளிப்படையாய்ச் சொல்ல வேண்டும்போ லிருக்கிறது. லீலாவதியின்பேரில் நான் காதல் கொண்டிருக்கிறேன். அவளை வேறொருவன் விவாகஞ் செய்து கொள்வதென்றால், அதை என்னால் சகிக்க முடியவில்லை. அவளை

விவாகஞ் செய்துகொள்ள வேண்டி, நான் எது வேண்டுமென்றாலும் செய்வேன்.

சுலோசனை :—இவ்விஷயம் லீலாவதிக்குத் தெரியுமோ ?

நவமணி :—அவளுடைய விவாக நிச்சயதார்த்தம் எனக்குத் தெரியாதா? இதைப்பற்றி நான் அவளிடம் பேசினால், அவள் என்னை ஒரு மனிதனாய் மதிப்பாளா? உன்னிடங்கூட நான் இதைச் சொல்வதாய் எண்ணவில்லை. வாய் தவறி ஆரம்பித்து விட்டேன். நீ வற்புறுத்திக் கேட்டதனால் சொல்லவேண்டியதாயிற்று. சொன்னதில் உனக்கும் வருத்தத்தை யுண்டுபண்ணிவிட்டேன்.

சுலோசனை :—முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதுபோல், உன் கைக்குக் கிடைப்பதற்கு அரிதான ஒரு பொருளின்மீது நீ ஆசை வைத்திருக்கிறாய். ஆகையால் நம்மிருவருக்கும் துன்பந்தான். நாழிகையாகிவிட்டதுபோ லிருக்கிறதே.

“ ஆம், ஆம் ! மறந்தே போய்விட்டேனே ! நான் சீக்கிரம் வீடு போய்ச் சேராவிட்டால், அவர்களெல்லோரும் போஜனத்துக்குக் காத்துக்கொண் டிருப்பார்கள்” என்று நவமணி சொல்ல, அவ்விருவரும் விரைந்து சென்றார்கள். மேரி ஸ்கூல் வாசலில் அவ்விருவரும் பிரிந்தார்கள்.

—o—

ஒன்பதாவது அத்தியாயம்

நவமணியின் அவகேடு

“ஈண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்துணையும்
வேண்டார் மற்றீயவிழை பயனல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுதலரிது”—நாலடியார்.

மேரியா மர்ட்டன் இஷ்டப்படியே, அன்றிரவு சுமார் எட்டு மணிக்கு, அற்புதஸாமி உடையாரும், முத்துக்குமாரனும் போஜனத்துக்கு மேரியா மர்ட்டன் வீட்டுக்குப் போய்ச்சேர்ந்தார்கள். மேரியா மர்ட்டனும், அற்புதஸாமி உடையாரும் மாதாக் கோயிலின் விஷயமாய்ப் பேச ஆரம்பித்தவுடன், முத்துக்குமாரனை நவமணி தன்னறைக்கு அழைத்துப்போய், தான் அன்று நடந்துகொண்டது சுத்

தப் பிசகென்றும், தன்னை அவன் மன்னிக்க வேண்டுமென்றும் முத்துக்குமரனிடம் சொல்ல, முத்துக்குமரன் தான் நடந்து கொண்டதே மிகவும் முட்டாள்தனமென்றும், தான் தான் அவனை வீண் வாதுக்கு இழுத்ததாகவும், ஆனபடியால் அவனே தன்னை மன்னிக்க வேண்டுமென்றுஞ் சொல்லி வருத்தப்பட்டான். பிறகு இருவரும் கொஞ்சநேரம் வேடிக்கைபாகப் பேசிக்கொண் டிருந்தார்கள். பிறகு யாவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். போஜனம் முடிந்தபின், "வீட்டில் எனக்கு ஒரு அவசரவேலை யிருக்கிறது. நான் உடனே போகவேண்டும்" என்று மேரியா மர்ட்டனிடம் சொல்லிவிட்டு, அற்புதஸாமி உடையார், "ஏனப்பா புறப்படலாமா, அல்லது நீ கொஞ்சநேரங்கழித்து வருகிறாயா? நவமணியினிடம் நிரம்ப சுவாரஸ்யமாய்ப் பேசிக்கொண் டிருக்கிறாயோ? புது சினேகமன்றோ?" என்று முத்துக்குமரனைக் கேட்டார். "நீங்கள் வீடு போய்ச் சேருவதற்குமுன் நான் வந்துவிடுகிறேன். நீங்கள் கொஞ்சம் முன்னே செல்லுங்கள்" என்று முத்துக்குமரன் சொன்னான்.

அற்புதஸாமி உடையார் வெளியே செல்லுமுன், தம்முடைய சொக்காய்ப் பையிலிருந்த ஒரு நீண்ட மஞ்சள் கழுத்துப் பட்டையை யெடுத்து, விளக்கின் வெளிச்சத்திலேயே அதைத் தம்முடைய கழுத்தில் கட்டிக்கொண்டு, தம்மிருப்பிடஞ் சென்றார்.

அற்புதஸாமி உடையார் சென்ற பிறகு, முத்துக்குமரனும் நவமணியும் இரண்டுமணி சாவகாசம் நாழிகை தெரியாமலே பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது கடியாரம் பத்தடிக்க, "அடா, டா! நேரம் போனதே தெரியவில்லையே! மாமா கவலைப்பட்டுக் கொண்டிருப்பார். நான் உடனே போகவேண்டும்" என்று நவமணியினிடஞ் சொல்லிவிட்டு முத்துக்குமரன் எழுந்திருந்தான். நவமணி, "நிரம்ப நன்றாயிருக்கிறது. எல்லாம் நாளைக் காலையில் போகலாம். நீ ஐந்து வயதுக் குழந்தையா என்ன? அவர் ஒன்றும் கவலைப்படமாட்டார். இன்னுங் கொஞ்சநேரம் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்து விட்டுப் படுத்துக்கொள்ளலாம்" என்றான்.

முத்துக்குமரன்:— எனக்கு இஷ்டந்தான். ஆனால் என் மாமன் நிரம்ப கவலைப்படுவார். நான் போகாமலிருப்பது சரியல்ல.

மேரியா மர்ட்டன்:—என்ன அப்பா! முத்துக்குமரா! இவ்வளவு தூரம் சொல்லுகிறுனே; நாளைக் காலையில்தான் போயேன். இதென்ன காடா வனாந்தரமா?

முத்துக்குமரன்:— தாங்கள் எனக்கு இவ்வளவு தூரம் சொல்ல வேண்டியதேயில்லை. அவர் கவலைப்படுவார். அதற்காகத்தான் நான் போகவேண்டு மென்கிறேன்.

பிறகு முத்துக்குமரன் புறப்படும்போது, "நல்ல நிலவா யிருக்கிறது. கொஞ்சமிரு. ஷர்ட்டு போட்டுக்கொண்டு நானும் உன்னுடன் கொஞ்சதூரம் வருகிறேன்" என்று நவமணி முத்துக்குமரனிடஞ் சொல்லிவிட்டு மேரியா மர்ட்டனது அனுமதி பெற்றுக்கொள்ள, அவ்விருவரும் வெளியே சென்றூர்கள்.

*　　*　　*　　*

நவமணியை எதிர்பார்த்துக் கொண்டு மேரியா மர்ட்டன் வெகு நேரம் காத்துக்கொண்டிருந்தார். மணி பன்னிரண்டு அடித்தும், நவமணி திரும்பி வாராததால், அவர் அதிகக் கவலையுடன் வெளியே போய்த் தேடிப்பார்க்க யத்தனித்தார். அப்போது "அண்ணு, அண்ணு" என்று கூப்பிட்டு நவமணி கதவைத் தட்டினுன். மேரியா மர்ட்டன் தம் கையில் ஒருவிளக்கை யெடுத்துக்கொண்டு கதவைத் திறந்தார். நவமணியின் வேஷ்டி ஷர்ட்டு எல்லாவற்றிலிருந்தும் இரத்தம் சொட்டிக்கொண் டிருந்ததைப் பார்த்து, "என்ன அப்பனே! இப்படி வந்திருக்கிறுய்? சொட்டச் சொட்ட நிற்கிறுயே! எனிவ்வளவு நாழிகை? கையிலென்ன காயம்? வாவா, உள்ளே வா! என்ன சமாசாரம்?" என்று கேட்டார்.

நவமணி:— நானும் முத்துக் குமரனும் வேடிக்கையாய்ப் பேசிக் கொண்டு ஆண்டார் தெரு முக்கத்து வரையில் சென்றோம். வேடிக்கையாய்க் காவேரியாற்று வரையில் போய் வரலாமா?" என்று முத்துக்குமரன் என்னை கேட்டான். நான் அதற்குச் சம்மதிக்க, நாங்கள் காவேரி யாற்றுக்குப் போனோம். அங்கேபோய், தென்னண்டைப் பாலக்கோடியின் மேல் பாகத்தி லிருக்கிற சரிவில் இறங்க, பூர்ணப் பிரவாகத்தைப் பார்த்தோம். நாங்கள் திரும்பிவந்தபோது கால் சறுக்கி நான் ஜலத்தில் விழுந்துவிட்டேன். ஜலம் பாரொத்து ஓடிக்கொண்டிருந்தபடியால் ஆழம் நிலைக்கவே யில்லை. நான் மெதுவாய்

நீந்திக் கிராதியைப் பிடித்துக்கொண்டு கரையேறினேன். கிராதியில் கம்பிகள் முடுக்கப்பட்டிருக்கிறபடியால் அது என்கையைக் கிழித்துவிட்டது. அதனால்தான் என் ஷர்ட்டுக்கூட இரத்தமாயிருக்கிறது. என்னை மன்னிக்க வேண்டும்."

"என்னைக் கேட்காமல் நீ இனிமேல் இராத்திரியில் எங்கும் வெளியே போகக்கூடாது. அவ்வளவுதான். போமேட் வாஸலின் போரிக் பௌடர் இரண்டையுங் குழைத்துக் காயத்தில் தடவிக் கட்டிவிட்டுப் படுத்துக்கொள். இங்கே வா, நானே கட்டுகிறேன்" என்று சொல்லி மேரியா மர்ட்டன் காயத்தைக் கட்டினார். பிறகு இருவரும் நித்திரைக்குச் சென்றார்கள்.

பத்தாவது அத்தியாயம்

என் குழந்தை எங்கே ?

"யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு".—திருக்குறள்.

முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்ட விஷயங்கள் நடந்த மறு நாட் காலையில், அதாவது, 1900 வருஷம் ஏப்ரல் மாதம் இருபதாந் தேதிக் காலையில், ஏழு மணி சுமாருக்கு, மேரியா மர்ட்டனும், நவமணியும் காப்பி சாப்பிட்டுவிட்டு, கூடத்தில் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அப்போது அற்புதஸாமி உடையார், அவருடைய வஸ்திரம், சொக்காய் முதலியவைகள் வெகு அலங்கோலமாயும், தலைமயிர் கோரமாய் அவிழ்ந்தபடியும், பிரேதம்போல் வெளுத்த முகத்துடனும், வெகு தூரம் ஓடி வந்தவர் சுவாசம் விடுவது போல் மூச்சுத் திணறிக் கொண்டு மடமடவென்று உள்ளே நுழைந்தார். அதைக் கண்டு மேரியா மர்ட்டனும் நவமணியும் திடுக்கிட்டு எழுந்தார்கள். "உடையாரவர்களா! என்ன சமாசாரம்? என்ன ஆபத்து? ஏனிப்படி வந்திருக்கிறீர்கள்? என்ன கஷ்டம்?" என்று மேரியா மர்ட்டன் அற்புதஸாமி உடையாரைக் கேட்டார்.

அற்புதஸாமி உடையார்:—என் குழந்தை எங்கே? முத்துக்குமரன் எங்கே?

மேரியா மர்ட்டன் :— ஏன், என்ன அவனுக்கு? என்ன சமாசாரம்? நேற்று இரவு அவன் இங்கு வந்ததுதான். என்ன சமாசாரம். விஷயத்தைச் சொல்லுமே. பிள்ளையைப் பறிகொடுத்தவன் போல் ஏன் இப்படி விழிக்கிறீர்?

அற்புதஸாமி உடையார்:—அவனைத் தேடிக் கொண்டு தான் நான் இங்கு வந்திருக்கிறேன். நேற்று இங்கு வந்தவன் இன்னும் என் வீட்டுக்குத் திரும்பி வரவில்லையே. என்ன ஆபத்தோவே!

மேரியா மர்ட்டன்:—பூ! இவ்வளவுதானு? இதற்காகவா இப்படி வந்தீர்? வெகு அழகாயிருக்கிறது. நான் என்னவோ என்று திகிலடைந்து விட்டேனே. இதற்காகவா இவ்வளவு கவலை? தானே வருகிறுன். அவன் என்ன நாலைந்து வயதுக் குழந்தையா என்ன? இருபது வயதான ஆளுக்கு வழியா தெரியாது? நீர் அகாரணமாய் இப்படிக் கவலைப்படுவது உண்மையில் எனக்கு வேடிக்கையாய்த்தா னிருக்கிறது.

அற்புதஸாமி உடையார்:—நேற்றிரவு, அவன் இங்கு தங்கியிருந்தானு இல்லையா?

மேரியா மர்ட்டன்:—இல்லை. இராத்திரி பத்துமணி வரையில் இங்குதா னிருந்தான். நவமணியும் அவனும் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு அவன் நீர் கவலைப்படுவீரென்று எங்களிடஞ் சொல்லிவிட்டுப் போனுன்.

அற்புதஸாமி உடையார்:—ஐயோ, நான் என்ன செய்வேன்! அவன் கதி என்ன ஆயிற்றோவே! என்னென்னவோ கண்டபடி கனவு கண்டேனே!

மேரியா மர்ட்டன்:—உடையாரவாள்! உமக்கு உடம்பு சரியாயில்லை யென்று எனக்குத் தோன்றுகிறது. ஊசிக்குஞ் சரட்டுக்குஞ் சேராமல் என்னென்னவோ சொல்லுகின்றீரே. சே! என்ன உம்மிடம் இவ்வளவு துர்நாற்றம் வீசுகிறது!

அற்புதஸாமி உடையார்:—அந் நேரத்தில் குழந்தை தனியாகவா சென்றுன்?

மேரியா மர்ட்டன்:— தனியாய்ச் சென்றுல் என்ன ஐயா? எலியா தூக்கிக்கொண்டு போய்விடும்? உம்முடைய குழந்தையை

நான் தனியா யொன்றும் அனுப்பவில்லை. அவனுக்குத் துணையாய் நவமணியுஞ் சென்றான்.

அற்புதஸாமி உடையார்:—என்ன சொன்னீர்கள்? நவமணி கூடச் சென்றானென்று சொன்னீர்கள்?

மேரியா மர்ட்டன்:—ஆம், ஆம்! இப்போது கவலை யொழிந்ததா?

அற்புதஸாமி உடையார்:—சரிதான். விரைக் கோட்டைக்குள் எலியை வைத்துக் கட்டியதுபோல்தான். அடே வஞ்சகா! நீ உருப்படுவாயா?

மேரியா மர்ட்டன்:— யாரைப் பற்றி இப்படி ஏகதேசமாய்ப் பேசுகிறீர்?

அற்புதஸாமி உடையார்:—எல்லாம் உமது சிஷ்யன் நவமணியைப்பற்றித்தான். வேறு யாரைப்பற்றி?

நவமணி:— சந்தேகம் நிவர்த்தியாய்விட்டது. முத்துக்குமரன் என்னிடம் சொன்னபோது நான் அதை நம்ப முடியவில்லை. அந்த ஏழுவா உம்மை இப்படிப் படுத்துகிறது? இவ்வளவு நாழிகை எனக்கு அது ஞாபகம் வரவில்லையே. கஞ்சாவைக் குடித்துவிட்டு, இப்படி உளறவேண்டுமா?

அற்புதஸாமி உடையார்:—மரியாதை யின்றி அதிகமாய்ப் பேசாதே. நான் கேட்கப் போகிற இரண்டொரு கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல். நான் போய்விடுகிறேன். அதிகமாய்ப் பேசாதே. நீயும் முத்துக்குமாரனும் கடைசியில் எங்கே பிரிந்தீர்கள்?

உடனே நவமணி ஆதியோடந்தமாய் எல்லாவற்றையும் அவரிடஞ் சொன்னான்.

அற்புதஸாமி உடையார்:—கடைசியில் நீ அவனை எங்கே விட்டுப் பிரிந்தாய்?

நவமணி:—அதுதான் சொன்னேனே. கடைசியில் நானும் அவனும் ஆண்டார் தெரு முக்கத்திலிருக்கிற சுப்பையா கடை வாசலில் பிரிந்தோம்.

அற்புதஸாமி உடையார்:— வேறொன்றும் உனக்குத் தெரியாதா?

நவமணி:—வேறு எனக்கு என்ன தெரியும்?

அற்புதஸாமி உடையார்:—பின் ஏன் இன்னும் அவன் திரும்பி வரவில்லை ?

நவமணி:— அது விஷயம் பூசாரியைக் கூப்பிட்டு உடுக்கடித்துக் கேட்டால்தான் தெரியுமேயொழிய எனக்குத் தெரிவதற்கு நியாயமில்லை.

அற்புதஸாமி உடையார்:—அப்படியா ? அதையும் பார்க்கலாம். அவன் எங்கு சென்றானென்று தெரியும்வரையில் நீயே ஜவாப்தாரி.

மேரியா மர்ட்டன்:—உடையாரவாள் ! யோஜிக்காமல் என்னென்னவோ சொல்லுகிறீரே ! ஜவாப்தாரியாவது ! அதற்கு என்ன அர்த்தம் ?

அற்புதஸாமி உடையார்:—அதற்கு அர்த்தத்தைக் கூடிய சீக்கிரத்தில் சொல்லுகிறேன். எனக்கு இவன்பேரில் பெருத்த சந்தேகமேற்பட்டிருக்கிறது. முத்துக்குமரன் காணாமற்போன விஷயத்தைப்பற்றி இவனிடத்தில் எனக்குச் சமுசயம் உண்டாயிருக்கிறது. இவ்விஷயத்தைத் தீர விளங்க விஜாரிக்கவேண்டும். ஆகையால் இதோ போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், ஒரு தகுந்த போலீஸ் அதிகாரியை அழைத்து வருகிறேன்.

மேரியா மர்ட்டன்:—உம்முடைய சித்தம் உம்முடைய சுவாதீனத்திலில்லையென்று நான் முதலிலேயே சந்தேகித்தேன். அது இப்போது வெளிப்படையாய்த் தெரிகிறது. நீர் என்னவேண்டுமென்றாலும் செய்யும். அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை.

அற்புதஸாமி உடையார் உடனே புறப்பட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்கு விரைந்து சென்று, ஏதோ ஒரு வாக்குமூலத்தை எழுதி வைத்துவிட்டு, போலீஸ் அதிகாரியுடன் மேரியா மர்ட்டன் வீட்டுக்குத் திரும்பி வந்தார். போலீஸ் அதிகாரியானவன் நவமணியினிடம் கிரிமினல் வாரண்டைக் காட்டி, அவனை பந்தோபஸ்துக்கு அழைத்துச் சென்றான்.

—o—

பதினோராவது அத்தியாயம்

பிரதம விஜாரணை

"சொலையஞ்சார்; பொய்நாணார்; மானமு மோம்பார்;
களவொன்றோ? ஏனையவுஞ்செய்வார்;—பழியொடு
பாவமிஃதென்னார்; பிறிதுமற் றென்செய்வார்
காமங் கதுவப்பட்டார்?" —நீதிநெறிவிளக்கம்.

நவமணியைப் போலீஸ் அதிகாரி பிடித்துக்கொண்டு போன விஷயம் மாஜிஸ்ட்ரேட்முன்னே பிரதம விஜாரணைக்கு வந்தது. நவமணி பின்வருமாறு வாக்குமூலம் எழுதிவைத்தான்:— "எனக்கும் முத்துக்குமர நாடாருக்கும் சுமார் ஒருவருஷ காலமாய்ப் பரிச்சய முண்டு. சுமார் இரண்டுமூன்று மாதங்களுக்குமுன் ஒருநாள் சாயந்திரம், நான் மேரிஸ்கூலில் என் சகோதரி சுலோசனையோடு அவளறையில் பேசிக்கொண் டிருந்தேன். அப்போது தற்செயலாய் முத்துக்குமரநாடார் அவ்வறைக்கு வந்தார். நானும் என்சகோதரியும் பேசிக்கொண்டிருந்த சமாசாரமானது முத்துக்குமர நாடாருக்கு என்னிடம் வருத்தத்தை உண்டுபண்ணிற்று. அந்த மனஸ்தாபமானது முந்தாநாள் இராவிலேயே, அதாவது, 1900-ம் வருஷம் ஏப்ரல் மீ 19-ம் தேதி இராவிலேயே நீங்கிவிட்டது. அன்றைய இரவு முத்துக்குமர நாடாரும் அற்புதஸாமி உடையாரும் மேரியா மர்ட்டன் வீட்டுக்குச் சாப்பிடவந்திருந்தார்கள். சாப்பாடு ஆனவுடன், அற்புதஸாமி உடையார் அவருடைய வீட்டுக்குச் சென்றார். பிறகு சுமார் இரண்டுமணிநேரம் நானும் முத்துக்குமரனும் பேசிக்கொண்டிருந்தோம். முத்துக்குமரனும் நானும் பிறகு வெளியிற் சென்றோம். நிலவு காய்ந்துகொண் டிருந்தபடியால் வேடிக்கையாய் நாங்களிருவரும் காவேரியாற்றுக்குப் போனோம். காவேரியாற்றில் பூரணப் பிரவாகம் ஓடிக்கொண்டிருந்தது. சாதாரணமாய் ஏப்ரல் மாதத்தில் ஆற்றில் ஜலமே யிராது. இந்த வருஷம் மட்டும் மழை அதிகமாதலால், அபூர்வமாய்க் காவேரியாற்றில் ஜலம் ஓடுகிறது. வேடிக்கை பார்க்கும்பொருட்டு நாங்களிருவரும் காவேரியாற்றுப் பாலத்தின் தென்னண்டையிலிருக்கிற மணற்சரிவி லிறங்கினோம். மணற்சரிவின் ஓரத்தில் நின்றுகொண்டு நாங்கள் கொஞ்சநேரம் வேடி

க்கை பார்த்துவிட்டுத் திரும்பி வந்தபோது, கால் தவறி நான் ஜலத்தில் விழுந்துவிட்டேன். ஆழம் அதிகமா யிருந்தபடியால் இரண்டு மூன்று தரம் நான் மூழ்கி மூழ்கி யெழுந்தேன். அதற்குள் ஜலத்தின் வேகத்தால் நான் பாலத்துக்குப் பக்கத்தில் வந்துவிட்டேன். பாலத்தின் கம்பங்கள் என்னுடைய தலையை உடைத்துவிடுமென்று பயந்து, நான் உடனே நீரோட்டத்துக்கு எதிரே நீந்திச் சென்றேன். அப்போது முத்துக்குமரன் அவனுடைய அங்கவஸ்திரத்தின் ஒரு நுனியை என்மேல் எறிந்தான். நான் அதைப் பிடித்துக்கொண்டு, மெதுவாய்க் கிராதியைக் கைப்பற்றிக் கரையேறினேன். அவ் விரும்புக் கிராதியில் கூர்மையான கம்பிகள் சடையப்பட் டிருக்கிறபடியால், அவைகள் என் கையைக் கிழித்துவிட்டன. நான் என் வேஷ்டியையும், ஷர்ட்டையும் அப்படியே பிழிந்துகொண்டேன். பிறகு நாங்களிருவரும் வேகமாய்த் திரும்பி வந்தோம். ஆண்டார் தெரு முக்கத்துக்கு வந்தவுடன், முத்துக்குமரன் கிழக்கே திரும்பிப் பாட்டியம்மாள் ஹோட்டலை நோக்கிச் சென்றான். நான் மேற்புறமாய்த் திரும்பி, வாணப்பட்டரைத் தெரு வழியாய் என்னிருப்பிடம் நோக்கிச் சென்றேன். இவ்வளவு தான் எனக்குத் தெரியும். இதுவே என்னுடைய வாக்குமூலம்."

பிறகு அற்புதஸாமி உடையார் வாக்குமூலம் கொடுத்தார்:—
"சுமார் இரண்டு மாதங்களுக்குமுன் முத்துக்குமரனுக்கும் நவமணிக்கும் சண்டையாயிற்று. முத்துக்குமரனின் தகப்பனும் லீலாவதியின் தகப்பனும் கலந்து ஆலோசனை செய்துகொண்டு, பல வருஷங்களுக்குமுன் முத்துக்குமரனுக்கும் லீலாவதிக்கும் விவாகநிச்சயதார்த்தம் செய்துவைத்தார்கள். அதன்படியே அவ்விருவரும் நடந்துகொண்டு வருகிறார்கள். இந்த லீலாவதியும், நவமணியின் சகோதரியான சுலோசனுவும் மேரிஸ்கூலில் ஒரு அறையில் சேர்ந்து வசிக்கிறார்கள். சுமார் இரண்டு மாதங்களுக்குமுன் ஒருநாள் சாயந்திரம் லீலாவதி வெளியே போயிருந்தபோது, சுலோசனுவும் நவமணியும் அவ்வறையில் லீலாவதியைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது நவமணியானவன் லீலாவதியின் ரூபலாவண்யத்தைப் பற்றியும் குணாதிசயங்களைப்பற்றியும மெச்சிப் பேசிவிட்டு முடிவில் லீலாவதிக்கு முத்துக்குமரன் தகுந்த கணவனேயல்ல வென்று

சொன்னான். தற்செயலாய் அப்போது முத்துக்குமரன் லீலாவதியைத் தேடிக்கொண்டு அவ்வறைக்குள் நுழைந்தான். நவமணி பேசிக்கொண்டிருந்தவைகளெல்லாம் அவன் காதில் விழுந்தன. அதன் விஷயமாய் மனஸ்தாபம் ஏற்பட்டு அவ்விருவரும் கைகலந்து கொண்டார்கள். சண்டை நடந்த தினத்துக்கு மறுநாள் சாயந்திரம் முத்துக்குமரன் சென்னைக்குச் சென்றான். அவன் இங்கு இரண்டு நாட்களுக்கு முன்தான் திரும்பிவந்தான். அதாவது, அவன் திருச்சிக்கு 18-ம் தேதி சாயந்திரம் வந்தான். 19-ம் தேதி இரவில் நானும் முத்துக்குமரனும் மேரியா மர்ட்டன் வீட்டுக்குப் போஜனத்திற்குப் போயிருந்தோம். சீக்கிரம் போஜனத்தை முடித்துக்கொண்டு நான் முதலில் என்னிருப்பிடம் சென்றேன். பிறகு இரவில் பத்து மணிக்கு மேல் நவமணியும் முத்துக்குமரனும் மேரியா மர்ட்டன் வீட்டை விட்டுப் புறப்பட்டுக் காவேரியாற்றுக்குப் போனார்களாம். அன்றிரவு நான் நிரம்பக் கவலைப்பட்டுக்கொண்டு, வெகுநேரம் முத்துக்குமரனை எதிர்பார்த்துக்கொண்டு என்னறையில் காத்துக்கொண்டிருந்தேன். கொஞ்சநேரம் கழித்து மேரியா மர்ட்டன் வீட்டுக்குச் சென்று விஜாரிக்கலாமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். பிறகு என்னையறியாமலே நான் தூங்கிவிட்டேன். விடியற்காலம் மூன்றுமணி சுமாருக்கு விழித்துக்கொண்டு நான் இருந்துவரும் ஹோட்டல் அம்மாளிடம், "முத்துக்குமரன் ஒருவேளை வருவான், கவனமாய்க் கதவைத் திறவுங்கள்" என்று சொல்லிவிட்டு நான் நித்திரை செய்தேன். மறுநாட்காலையிலெழுந்தவுடன் நான் மேரியா மர்ட்டன் வீட்டுக்குப் போய் மேரியா மர்ட்டனை முதலில் விஜாரித்தேன். அன்றிரவு நவமணி பன்னிரண்டு மணி சுமாருக்குத் தம் வீட்டுக்குத் திரும்பி வந்தானென்றும் வெகு அலங்கோலமாய் வந்தானென்றும் சொன்னார். அப்போது நான் தற்செயலாய் நிமிர்ந்து பார்த்தேன். கூடத்திலிருந்த ஒருகொடியில் நவமணியின் வேஷ்டியும் ஷர்ட்டும் போடப்பட்டிருந்தன. அவைகளெல்லாம் ஒரே இரத்தமாயிருந்தன. அப்போது எனக்குத் திடுக்கிட்டது. அந்தச் சமாசாரத்தைக் காட்டிக்கொள்ளாமல் நவமணியை விஜாரித்தேன். அப்போது அவன் சரிவர எனக்குப் பதிலளிக்கவில்லை. 19-ம் தேதி சாயந்திரம் நடந்த மற்றொரு விஷயம் எனக்கு ஞாபகம்

வந்தது. அதென்னவென்றால், நவமணியும் சுலோசனுவும் அன்றையதினம் சாயந்திரம் ஏழுமணி சுமாருக்குக் காவேரிக் கரையில் உலாவிகொண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். தற்செயலாய் நான் அங்கு போகலாயிற்று. "முத்துக்குமாரனுக்கும் லீலாவதிக்கும் நடக்கப்போகிற விவாகத்தை நினைத்தால் எனக்குப் பயித்தியம் பிடித்துவிடும்போலிருக்கிறது. முத்துக்குமாரன் லீலாவதிக்குத் தகுந்த கணவனல்ல. லீலாவதியின் பேரில் நான் காதல் கொண்டிருக்கிறேன். அவளை வேறொருவன் விவாகஞ் செய்துகொள்வதானால், அதை என்னால் சகிக்க முடியவில்லை. அவளை விவாகஞ் செய்துகொள்ளவேண்டி நான் எது வேண்டுமென்றாலும் செய்யத் துணிவேன்" என்று நவமணி சுலோசனுவிடஞ் சொன்னான். அந்த விஷயம் எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. முத்துக்குமாரன் மறைந்திருப்பதற்குக் காரணம் நவமணிதான் என்று எனக்குத் தோன்றிற்று. அவனுடைய வேஷ்டியிலும், ஷர்ட்டிலும் இரத்தமிருந்தபடியால், அவ்விருவருக்கும் சண்டை ஏற்பட்டதென்று சந்தேகித்தேன். முத்துக்குமாரனை ஒரு சமயம் நவமணி கொலை செய்திருக்கக் கூடுமென்றும் எனக்குத் தோன்றிற்று. நவமணி அதிகக் கோபக்காரன் என்கிற விஷயம் எல்லாருக்குந் தெரிந்ததுதான். அற்ப விஷயங்களிலும் நவமணிக்குப் பெருத்த கோபம் வருமென்கிற விஷயம் மேரியா மார்ட்டனுக்குக்கூடத் தெரியும். லீலாவதியை விவாகஞ் செய்துகொள்ள தான் எதையுஞ்செய்யத் துணிந்தவன் என்று அவனே சொல்லியிருந்தபடியால், எனக்கு அவனிடம் பெருத்த சந்தேகமேற்பட்டது. உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், நான் வாக்குமூலம் எழுதிவைத்துவிட்டு, அவனை அரெஸ்ட் செய்யும்படி ஏற்பாடு செய்தேன். அவனை ஸ்டேஷன் பந்தோபஸ்தாவில் வைத்துவிட்டு, பிறகு காவேரியாற்றுக்கு நானும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் சென்றோம். அங்குபோய்ப் பார்த்ததில், முத்துக்குமாரனை நவமணி கொலைபண்ணினதாக ஏற்பட்டது".

அற்புதசாமி உடையார் வாக்குமூலம் கொடுத்தபின், மேரியா மார்ட்டன் பின்வருமாறு வாக்குமூலம் கொடுத்தார் :—

"சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக நவமணி என்னுடைய பாதுகாப்பில்தான் இருந்துவருகிறான். சுமார் இரண்டு மாதங்களு

க்கு முன் முத்துக்குமரனுக்கும் நவமணிக்கும் சண்டை நடந்தது. 19-ம் தேதி இரவிலேயே அவர்கள் மனஸ்தாபம் நீங்கிவிட்டது. நவமணி நன்னடத்தை யுள்ளவன் என்று நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன். சிறு பிள்ளைகளுக்கு சகஜமாய்க் கோபம்வருவதுபோல் அவனுக்கும் கோபம் வருவதுண்டு. அவ்வளவுதான். அன்றிரவு நவமணியும் முத்துக்குமரனும் வெகு பிரியத்தோடு அந்தரங்கமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் மனஸ்தாபங் கிடையாது என்று நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன். அவர்களை ராஜி பண்ணவேண்டியே, நான் முத்துக்குமரனை என் வீட்டுக்கு அழைத்தேன். என் எண்ணப்படியே அவர்களுஞ் சிநேகமானார்கள்".

"சண்டை நடந்ததாகச் சொல்லப்படும் இடத்துக்கு நான் தற்செயலாய்ப் போயிருந்தேன். அங்கு சேற்றில் ஏதோ பளிச்சென்று மின்னிற்று. அங்கு போய்ப் பார்க்க, இந்தக் கடியாரமும் சங்கிலியும் அங்கு புதைந்து கிடந்தன. "முத்துக்குமரன்" என்று அதன் மீது வரையப்பட்டிருந்தபடியால், உடனே நான் அதைப் போலீஸார் வசம் ஒப்புவித்தேன். நான் அங்கு போனபோது காலையில் சுமார் பத்துமணி யிருக்கும். நான் போனது 20-ம் தேதி."

பிறகு சுலோசனை பின்வருமாறு வாக்குமூலங் கொடுத்தாள்:— நானும் என் சகோதரனும் 19-ம் தேதி சாயந்திரம் ஆற்றங்கரையில் உலாவிக்கொண்டு பேசிக்கொண்டிருந்தோம். என் சகோதரன் தான் லீலாவதியின் பேரில் காதல்கொண்டிருந்ததாக என்னிடம் சொன்னான். சாதாரணமாய்ப் பேசிக்கொண்டிருந்தோமேயொழிய, விகற்பாய் நாங்கள் பேசவில்லை. சூதான எண்ணங்கொண்டு அற்புதஸாமி உடையார் நாங்கள் பேசிக்கொண்டிருந்த விஷயத்துக்கு விகற்ப அர்த்தங் கொடுத்திருக்கிறார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமன் நாயர் பிறகு கூட்டிலேறிப் பின்வருமாறு வாக்குமூலங் கொடுத்தார்: —"20உ காலையில் அற்புதஸாமி உடையார் ஸ்டேஷனுக்குவந்து, இப்போது கோர்ட்டின் முன் கொடுத்திருக்கிற வாக்குமூலத்தின் விஷயத்தை என்னிடஞ்சொல்லிச் சுருக்கமாய் வாக்குமூலம் எழுதிவைத்தார். நவமணியினிடம் சந்தேகம் ஏற்பட்டு, நான் அவனை உடனே அரெஸ்ட் செய்து பந்தே

கானுவில் வைத்துவிட்டு அற்புதஸாமி உடையாருடன் காவேரி யாற்றுக்குச் சென்றேன். மணற்சரிவில் இரண்டுபேர்கள் கைகலந்து கொண்டு சண்டைசெய்ததுபோல் அங்கே காலடிச்சுவடுகள் இருந்தன. பூமியிலும் இரும்புக்கிராதிகளிலும் இரத்தக்கறைக ளிருந்தன. மேற்படி கிராதி மிகவும் வளைந்திருந்தது. பிறகு திரும்பி மேரியா மர்ட்டன் வீட்டுக்குப்போய் நவமணியின் உடுப்புகளைச் சோதித்துப் பார்த்தேன். அவைகளெல்லாம் ஒரே இரத்தமாயிருந்தன. அவ்வுடுப்புகளும் இதோ இருக்கின்றன. கடியாரமும் சங்கிலியும் இதோ இருக்கின்றன.

மாஜிஸ்ட்ரேட்டவர்கள் பிறகு அற்புதஸாமி உடையாரை க்ராஸ் பண்ணினார்.

மாஜிஸ்ட்ரேட்:— முத்துக்குமாரனுக்கும், நவமணிக்கும் ராஜியாகிவிட்டதென்று மேரியா மர்ட்டன்தாம் சொல்லுகிறாரே. அதனால், முத்துக்குமாரனை நவமணி கொலைசெய்யப் பிரமேயமே யில்லையே?

அற்புதஸாமி உடையார்:—முத்துக்குமாரனைத் தன்வழியிலிருந்து விலக்க நவமணி எதுவுஞ் செய்யத் துணிந்தவன்; அவனைத்தொலைக்கச் சரியான சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். மேரியா மர்ட்டன் முத்துக்குமாரனைத் தம்வீட்டுக்கு விருந்துக்கழைத்தது அவனுக்கு அனுகூலமாய் முடிந்தது. தன்மீது பழிசுமரக் கூடாதென்ற எண்ணத்துடன் முன்யோஜனையால் முத்துக்குமாரனிடம் சிநேகஞ் செய்துகொண்டதுபோல் அவன் பாசாங்கு செய்தான். நவமணி பாசாங்கு செய்ததை மேரியா மர்ட்டன் உண்மையென்றே நம்பி விட்டார். அவ்வளவுதான்.

மாஜிஸ்ட்ரேட்:—முத்துக்குமாரனை நவமணி கொலை செய்தான் என்பதற்கு ருசுவாய் அவனுடையசரீரம் எங்கேனும்அகப்பட்டதா?

அற்புதஸாமி உடையார்:— காவேரி யாற்றில் பலவிடங்களில் நான் தேடச்சொல்லிப் பார்த்தேன். எங்கும் அகப்படவில்லை நவமணியின் வாக்குமூலத்தின்படி, அவர்களிருவரும் சேர்ந்து வந்து ஆண்டார் தெரு முக்கத்தில் பிரிந்தார்களென்று ஏற்படுகிறது. அப்படி யிருக்க முத்துக்குமாரனின் கடியாரமும் சங்கிலியும் சேற்றில் கிடப்பானேன்? விலையுயர்ந்த கடியாரத்தையும் அதன் தங்கச் சங்

கிலியையும் ஒருவன் எறிந்துவிட்டு வருவானு? பித்தனைப்போல் அப்படியே முத்துக்குமரன் அவைகளை எறிந்திருந்தால் பக்கத்திலிருந்த நவமணிக்குத் தெரியாமலிருக்குமா? இதனுல் நவமணியின் வாக்குமூலம் பிசகென்றும், அவ்விருவர்களுக்கும் அங்கு சண்டை நடந்ததென்றும் ஏற்படுகிறது.

பிறகு மாஜிஸ்ட்ரேட்டவர்கள் நவமணியைப் பார்த்து, "இது முத்துக்குமரனுடைய கடியாரந்தானு? அது காவேரியாற்றில் கிடப்பானேன்?" என்றுகேட்க, "இது முத்துக்குமரனுடையதுதான்; காவேரியாற்றிலிருந்து நாங்கள் திரும்பி ஆண்டார் தெருமுக்கத்தில் பிரிந்தபோதுகூட அதில் மணி பார்த்தோம். அது காவேரிக் கரையில் இருப்பதற்குக் காரணம் எனக்குத் தெரியாது" என்று நவமணி பதிலளிக்க, மாஜிஸ்ட்ரேட் நவமணியையும் அற்புதஸாமி உடையாரையும் மாற்றி மாற்றிக் கிராஸ் கேள்வி போட ஆரம்பித்தார்.

மாஜிஸ்ட்ரேட்:—"லீலாவதியை விவாகஞ் செய்துகொள்ளும்பொருட்டு எதையுஞ் செய்யத்துணிவேன்" என்று நீ சொன்னதுண்டா?

நவமணி:—"எதையுஞ்செய்யத் துணிவேன்" என்று சாதாரணமாய்ச் சொன்னேனே யொழிய விகற்பமாய் ஒன்றும் நினைக்கவில்லை. எப்படியாவது அவளை மணக்கவேண்டுமென்ற அவாவினுல் நான் சொன்னேன். இந்த விஷயத்தை வெளியிடுவதாக எனக்கு எண்ணமே யில்லை.

மாஜிஸ்ட்ரேட் :— (அற்புதஸாமி உடையாரைப் பார்த்து) முத்துக்குமாரனுடு நீர் 19உ இரவில் எட்டு மணி வரையிலிருந்தீர். முத்துக்குமானும் நவமணியும் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்தபடியால் முத்துக்குமரன் கொஞ்சநேரங் கழித்து வருவதாக உம்மிடஞ் சொன்னுன். சகஜமாய் நீரும் போய்விட்டீர். இரவில் உம்மிருப்பிடத்துக்கு அவன் திரும்பி வரவில்லை. அதில் விசேஷமொன்றுமில்லை. சிநேகிதர் வீட்டில் படுத்துக்கொள்வது எல்லோருக்கும் சகஜந்தான். அப்படியிருக்க, நிரம்பக் கவலைப் பட்டுக்கொண்டு மறுநாட் காலையிலேயே நீர் மேரியா மர்ட்டன் வீட்டுக்கு என்

ஓடினீர்? இருபது வயது ஆளைப்பற்றி ஏன் அவ்வளவு கவலை? பொழுது விடிவதற்குமுன் நீர் ஏன் ஓடினீர்? அவ்வளவு கவலைக்குக் காரணமென்ன?

அற்புதஸாமி உடையார்:— முதல்நாளிரவு முத்துக்குமரனின் விஷயமாய் நான் பற்பல துற்கனவுகள் கண்டேன். அதனால் என் மனம் சலிப்படைந்து, பற்பல எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தன. அவ்வளவு கவலைக்கு இடமேயில்லை என்பது சரிதான். அன்று காலையில் மேரியா மர்ட்டன் வீட்டுக்கு அவ்வளவு பரபரப்புடன் போனதற்குக் காரணம் உண்மையில் எனக்கே விளங்கவில்லை. முத்துக்குமரனிடம் எனக்குள்ள பிரியமும், முதல்நாளிரவு நான் கண்ட கனவுகளுந்தான் காரணமாயிருக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது.

மாஜிஸ்ட்ரேட்:— அவ்விருவரும் காவேரி யாற்றிற் சண்டை செய்து கொண்டதற்குச் சாக்ஷிகளுண்டா?

அற்புதஸாமி உடையார்:— நவமணியின் உடுப்புகளில் இருக்கிற இரத்தக்கரையும், காவேரியாற்றிற் பதிந்து கிடந்த கடியாரமும் சங்கிலியும் தவிர வேறு சாக்ஷியங்கள் கிடையாது. அவ்விருவரும் சண்டை போட்டுக்கொண்டதைப் பார்த்தவர்கள் இதுவரை ஒருவரும் அகப்படவில்லை. தீர விஜாரித்தால் அகப்படலாம்.

மாஜிஸ்ட்ரேட்:— (நவமணியைப் பார்த்து) காவேரியாற்றில் உனக்கும் முத்துக்குமரனுக்கும் சண்டை நடந்ததா?

நவமணி:— நாங்களிருவரும் சண்டையே போடவில்லை. நானும் அவனும் ஆண்டார் தெரு முக்கத்துவரையில் சேர்ந்து வந்தோம்.

பிறகு கோர்ட்டாரவர்கள் நவமணியின்மீது குற்றஞ் சாட்டத் தகுந்த ருசுக்களில்லை யென்றும், முத்துக்குமரனின் பிரேதம் அகப்படாதபடியால், முத்துக்குமரன் கொலை செய்யப் பட்டானென்று சொல்வதற் கில்லையென்றும், அவர்களிருவரும் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்பதை நிரூபிக்கச் சாக்ஷிகளில்லையென்றும், அதனால் சண்டையே நடந்திராம லிருக்கக்கூடு மென்றும், நவமணி சொன்னதெல்லாம் உண்மையாயிருக்கலா மென்றும், முத்துக்குமரன் சொல்லிக் கொள்ளாமல் எங்கேனும் போயிருந்து அதே நிமிஷத்தில் திரும்பி வரலாமென்றும், கடியாரமும் சங்கிலியும் காவேரியாற்றில் அகப்பட்டதை வைத்துக்கொண்டு, நவமணியின் மீது குற்றஞ் சாட்டத் தாங்கள் தயாராயில்லை யென்றுஞ் சொல்லி நவமணியை விடுதலை செய்தார்கள்.

பிரதம விஜாரணை முடிவடைந்தது.

—o—

பன்னிரண்டாவது அத்தியாயம்.

நட்பின் பெருமை.

"செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு"—திருக்குறள்.

கோடை காலத்துக்காகத் திரிசிரபுரத்து மேரி ஸ்கூல் மூடப்பட்டது. பள்ளிக்கூடத்து மாணுக்கர்களெல்லோரும் வெகு உற்சாகத்துடன் அவரவர்க ளூருக்குப் பிரயாணப் பட்டார்கள். சுலோசனுவும் புறப்படத் தயாராயிருந்தாள். அப்போது "அக்கா! எனக்கு மட்டும் போக்கிட மொன்று மில்லையே; நீங்களாவது என்னுடன் இருப்பீர்களென்று நினைத்திருந்தேன். தாங்களும் போகப் போகிறீர்களா?" என்று கண்களில் நீர் ததும்ப, லீலாவதி சுலோசனுவைக் கேட்டாள்.

சுலோசனு:— உன்னைத் தனியே விட்டுப் போவதினுல் எனக்கு உண்டாகும் துக்கத்துக்கு அளவே கிடையாது. நவமணியின் பக்கத்தில் நான் இப்போது இல்லாவிட்டால், அவனுக்கு யார் ஆறுதல் சொல்வார்கள்? அதற்காகத்தான் நான் போகவேண்டியது அவசியமாயிருக்கிறது. இல்லாவிடில் உன்னைத் தனியே விட்டு நான் போவேனு?

லீலாவதி:—ஏன் அக்கா, தங்கள் சகோதரர் சொன்னது உண்மைதானு?

சுலோசனு:—எதைப்பற்றிக் கேட்கிருய்?

லீலாவதி:—கோர்ட்டில் அவர் என்னைப்பற்றிச் சொன்ன விஷயந்தான்.

சுலோசனு:—அற்புதஸாமி உடையாரின் வஞ்சகத்தால் உன் பெயர் கோர்ட்டுக்கு வந்ததே ஒழிய என் சகோதரனுக ஒரு நாளும் சொல்லியிருக்கவே மாட்டான். அது விஷயமாய் நீ வருத்தப்படாம லிருக்கவேண்டும். வேறு வழியில்லாமல் சொன்னுன்.

லீலாவதி:—அதைப்பற்றி எனக்கு அணுவளவேனும் மனஸ்தாபம் கிடையாது. நான் கேட்டதில் வித்தியாசமாய் ஒன்றும் நினைத்துக் கொள்ளாதீர்கள். தங்கள் சகோதரருக்கு இனிக் கஷ்டம் ஒன்று மில்லை யன்ருே? அவரை இனி மேல் ஒருவரும் தொந்தரவு செய்யமாட்டார்கள் அல்லவா? அதுதான் எனக்கு வேண்டியது.

சுலோசனு:—கஷ்டம் எல்லாம் இனித்தா னிருக்கிறது. முத்துக்குமரன் கொலை செய்யப்பட்டா னென்று நிரூபிக்க அவனுடைய பிரேதம் எங்கு மகப்படாதபடியால், தற்காலம் என் சகோதரனை விடுதலை செய்திருக்கிருர்கள்; அந்தப் பாபி அற்புதஸாமி உடை

யார் என்ன காரணத்தாலோ நவமணியைக் கெடுக்கச் சூதாய்ப் பல ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகிறான்; முத்துக்குமரன் உண்மையிலேயே யாரோவொரு விரோதியினால் கொலை செய்யப் பட்டிருந்து, அவனுடைய பிரேதம் எங்கேனும் அகப்பட்டாலும், அல்லது ஏதேனும் அநாதைப் பிரேதம் ஆற்றங்கரையில் அகப்பட்டாலும், நவமணிதான் குற்றவாளியென்று சொல்லி அற்புதஸாமி உடையார் தீங்கு செய்வான். என்னுடைய சகோதரன் போகுமிடம் எல்லாம் இவனும் போகிறானாம். இந்த விஷயத்தை நவமணி பல தடவைகளில் கவனித்திருக்கிறானாம்.

லீலாவதி:—தங்கள் சகோதரர் இப்போது ஏன் புதுக்கோட்டையில் இருக்கிறார்?

சுலோசனை:—ஊர் வாயைமூட எவரால் முடியும்? முத்துக்குமாரனைக் கொன்றவன் நவமணியென்று அற்புதஸாமி உடையார் ஒரு வதந்தியைக் கிளப்பியிருக்கிறான். நவமணியோடு இப்போது ஒருவரும் சகஜமாய்ப்பேசி வார்த்தை சொல்லுகிறதில்லை. இரண்டொருவர் பேசினாலும், முன்னிருந்த மரியாதை கிடையாது. அவன் வெளியிற் சென்றால், அவனைப் பற்றி ஜனங்கள் வம்பளக்கிறார்கள். இவைகளையெல்லாம் சகிக்க மாட்டாதவனாய் அவன் புதுக்கோட்டைக்குச் சென்றிருக்கிறான். அங்கு போயும் இந்த பாபி அவனைத் தொந்தரவு செய்கிறானாம்.

லீலாவதி:—புதுக்கோட்டையில் யாருடனிருக்கிறார்?

சுலோசனை:—நமது மேரியா மர்ட்டனுக்குச் சிநேகிதர் ஒருவர் புதுக்கோட்டையில் இருக்கிறாராம். அவர் பெரிய மனிதராம். அவருடைய வீட்டிலிருக்கிறான். நவமணியின் குணத்தைக் கண்டு அவர் அவனிடம் அதிகப் பிரியமாயிருக்கிறாராம். பாவம்! அவருக்குக் குழந்தையே கிடையாதாம். நான் அங்கு போகிற விஷயத்தை நவமணி அவரிடம் தெரிவித்து, கொஞ்ச நாட்களுக்கு வேறு வீடொன்று அமர்த்திக் கொண்டு தனியே இருப்பதாகச் சொன்னானாம். அதற்கு அவர் வருத்தப் பட்டுக் கொண்டு "உன் சகோதரி வந்து நம் வீட்டிலிருந்தால், நம் வீடு தேய்ந்து போகாது. நாங்கள் ஏழையாயும் போகமாட்டோம்" என்று சொன்னாராம். ஆகையால் நானும் அவர் வீட்டில்தான் இருக்கப் போகிறேன்.

சுலோசனைவுக்காகத் தெருவில் வண்டி காத்துக் கொண்டிருந்தபடியால் சுலோசனை புறப்பட்டாள்.

———0———

பதின்மூன்ருவது அத்தியாயம்.

கேடுகாலம் கிட்டிவிட்டது!

"கொம்புளதற் கைந்து, குதிரைக்குப் பத்துமுழம்,
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே; வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.''—நீதி வெண்பா.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பிரசித்தி பெற்ற மாசிலாமணி நாடார் பாங்கியில் சுமார் இருபது குமாஸ்தாக்கள் வேலையிலிருந்தார்கள். பாங்கியின் பெரிய கடியாரத்தில் மணி இரண்டு அடித்தது. ஆகாரஞ் செய்ய குமாஸ்தாக்கள் ஒவ்வொருவராய் வெளியே சென்றுகொண் டிருந்தார்கள். பாங்கியின் மானேஜரும் முதலாளியுமான மாசிலாமணி நாடார், தம்முடைய மேஜையின் மீதிருந்த யோஸ்ட் எலக்டிரிக் விசிறியைச் சுற்றவிட்டுச் சாவகாசமாய்ச் சிற்றுண்டி தின்று கொண்டிருந்தார். அவருக்கு வயது சுமார் நாற்பத்தைந் திருக்கலாம். சந்ததியில்லாமல், அவருடைய மனைவி அவருடைய நாற்பதாவது வயதில் தேக வியோகமடைந்தாள். பிறகு அவர் மறுபடி விவாகஞ் செய்து கொள்ளவில்லை; ஒரு அம்மாளை வீட்டு வேலைக்கு அமர்த்திக் கொண்டார். அவருடைய பிரதான சிநேகிதரான லீலாவதியின் தகப்பனார் இறந்த பிறகு, அவர் அவளை அன்புடன் தம்மிருப்பிடத்துக்கு அழைத்து வந்து, தம் புத்திரியைப்போல் வளர்த்துவர வேண்டுமென்று பிரயத்தனப் பட்டார். அதற்கு முத்துக்குமர நாடாரின் தந்தை தம் ஆயுள்பரியந்தம் இடங்கொடுக்கவில்லை முத்துக்குமர நாடாருடைய தந்தை காலஞ் சென்றபிறகு மாசிலாமணி நாடார் லீலாவதியைத் தம்மிருப்பிடத்துக்கு அழைத்துச் சென்று தம்முடைய குழந்தையைப்போல் வெகு பிரியத்துடன் வளர்த்து வந்தார். எனினும், லீலாவதி அவரிடம் சங்கோசத்தால் ஒரு மாதிரியா யிருந்தபடியால், கொஞ்ச காலம் படிக்கட்டுமென்று அவளைத் திரிசிரபுரத்து மேரிஸ்கூலுக்கு அனுப்பினர்.

லீலாவதி அடிக்கடி புதுக்கோட்டைக்கு வருவதும் போவதுமாயிருந்தாள். பள்ளிக்கூடத்தில் இருப்பதில் அவளுக்குப் பிரீதியாயிருந்ததென்று அவர் குறிப்பினு லறிந்துகொண்டு அவள் இஷ்டப்படியே அவளை அங்கு விட்டிருந்தார்.

மாசிலாமணி நாடார் தம்முடைய ஏகாந்த அறையி லுட்கார்ந்து லீலாவதியை நினைத்துக்கொண்டே சிற்றுண்டி புசித்துக்கொண்டு இருந்தபோது யாரோ ஒருவர் திடுதிடென்று மாடிப்படியிலேறித் தம் அறைக்கு உத்தரவில்லாமல் வந்துகொண்டிருந்த சப்தம் அவ

ரது செவிக்கு எட்டியது. மறுநிமிஷத்தில் ஆகாயத்திலிருந்து ஒரு கன்னிகை குதித்து வந்ததுபோல் அதிரூபலாவண்யமுள்ள லீலாவதி அவர்முன் நின்றுள். சந்தோஷம், ஆச்சரியம், மனக்கவலை, ஆகிய முக்குறிகளோடு கூடிய முகத்துடன், "அம்மா லீலா! என் கண்ணே! என்ன இப்படி வந்து நிற்கிறுய்! உனக்குத் துணை யார் வந்தது? என்ன சமாசாரம்! உன் தேகம்என் இப்படிப் பதறுகிறது? வா என் அருகே" என்று சொல்லி அவளை உச்சிமுகர்ந்து தம் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டார். மாசிலாமணி நாடார் தன்னிடம் அளவற்ற பிரியத்துடன் இருப்பதைக் கண்டு, பெற்றோர்களின் நிகரற்ற பிரியத்தை எல்லையின்றி அனுபவித்து அவ்விருவரையும் சிறு பிராயத்திலேயே இழந்த லீலாவதிக்கு அப்போது பெற்றோர்களின் ஞாபகம் வந்து கண்களில் நீர் பெருகி அருவிபோல் வடிய, "அண்ணு! அப்பா! அம்மா!" என்று சொல்லி விம்மி விம்மி அழுதாள். சந்ததி யில்லையே யென்று வெகு காலமாய் ஏங்கியிருந்து, பிறகு லீலாவதியையே தம் குழந்தையாகப் பாராட்டிவந்த மாசிலாமணி நாடார் அவளுடைய துக்கத்தைச் சகியாதவராய் "லீலா! என் கண்மணி! நீ இப்படித் துக்கித்தால் என்னுல் தாங்கமுடியுமா? குழந்தை யில்லாத பாவியல்லவா நான்; நீ வருத்தப்படாதே; என்னுல் தாங்கமுடியவில்லை. என்னுடைய உயிருக்குச் சமானமாய் இருந்தவரின் புத்திரியல்லவா நீ? உனக்கு ஏற்பட்டிருக்கிற துக்கத்தை உடனே என்னிடம் சொல்வாய். உன்தேகம் பதறப்பதற நீ தனிமையில் இப்படி வந்த காரணமென்ன? நானெருவன் இருக்க நீ துக்கப்படலாமா? என்ன சமாசாரம்? சொல் உடனே?" என்று கண்களில் நீர் வடிய அவளைக்கேட்டார். அதற்கு "அண்ணு! எனக்கு நேர்ந்திருக்கிற துன்பத்தைத் தங்களிடம் நான் எப்படிச் சொல்வேன்? என் மீது தங்களுக்கு இவ்வளவு பிரியம் இருக்கிறதென்று எனக்கு முன்னமேயே தெரிந்திருந்தால் நான் திருச்சிக்குப்போயிருக்கவே மாட்டேனே. எனக்கு ஒரு வித வியாகூலமும் நேரிட்டிராதே. தாங்கள் என் தந்தையைக் காட்டிலும் என்னிடம் பிரியமாய் இருப்பீர்கள் என்பது என்னுடைய மூட புத்திக்கு முன்னமேயே தெரியாமற் போயிற்றே! அந்தத் துரோகியை நான் பார்க்காமலே இருந்திருப்பேனே! அந்தத் துரோகி! அந்தக் கிராதகன்! எங்கள் பள்ளிக்கூடத்துப் பாட்டு உபாத்தியாயர்—துடைப்பைக் கட்டைக்குப் பட்டுக் குஞ்சலமா!— அந்த உபாத்தியாயன் தொந்தரவு செய்தான். ஐயோ! நான் அவனை விவாகஞ்செய்து கொள்ள வேண்டுமாம்! விவாகஞ் செய்து கொள்ளாவிட்டால், என்னை அவன் எளிதில் விடமாட்டானும்! நான் என்ன செய்வேன்! அதனுல்தான் திடீரென்று புறப்பட்டு நான் இங்கு வந்துவிட்டேன். அண்ணு! அந்தக் கிராதகன் என்ன செய்வானே! ஐயோ! அவன் இங்கும் வந்தால் நான் என்ன செய்வேன்? அவனை நினைத்தால் என் உடம்பு நடுங்கு

கிறதே! தாங்கள்தாம் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லிவிட்டுக்கதறினாள். சமாசாரம் தெரிந்தவுடன், மாசிலாமணி நாடாருடைய கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள் பறந்தன. அடங்காக் கோபத்துடன் "இந்தப்.....பிச்சைக்கார........பயலா உன்னை இப்படித் தொந்தரவு செய்தது! உனக்கு ஒருவருமில்லை யென்றல்லவா நினைத்து விட்டான்போ லிருக்கிறது! அப்படியா! பேஷ்! இதே க்ஷணம் நான் திருச்சிக்குப் புறப்பட்டுப்போய் அவன் உயிரை வாங்கிவிட்டு மறுவேலை பார்க்கிறேன். பிச்சைக்காரப் பயல்! இவ்வளவு தைரியமா! கேடுகாலம் கிட்டிவிட்டது! அவ் வளவுதான்" என்று தமே உரக்கச் சொல்லிக்கொண்டு அறைக்கு வெளியில் நின்றுகொண் டிருந்த வேலைக்காரனைக் கூப்பிட்டு "நான் உடனே திருச்சிக்குப் போகவேண்டும். ஒரு நிமிஷத்தில் மோட்டார் வண்டியை இங்கு கொண்டுவரச்சொல்" என்று முன்பின் யோஜியாமல் அவனிடம் கட்டளையிட்டார். இயற்கையில் மாசிலா மணி நாடார் வெகு சாந்த சுபாவமுள்ளவ ராதலாலும், லீலாவதி அவருடன் சொற்பகால மிருந்து பார்த்தவரையில் அவருக்கு அவ்வளவு கோபம் வருமென்று கனவிலும் அவள் நினைத்ததில்லை யாதலாலும், திடீரென்று அவருக்கு அப்படிக் கோபம் வந்ததைப் பார்த்து, ஒன்றுந் தோன்றாமல் திகைத்துக் கற்சிலையைப்போல் உட் கார்ந்திருந்தாள். மோட்டார் வண்டியைக் கொண்டுவரச் சொல்லும் பொருட்டு வேலைக்காரன் வெளியே சென்றபிறகு, அவருடைய கோபம் கொஞ்சங் குறைந்தது. அப்போது லீலாவதிக்குக் கொஞ் சம் தைரியமேற்பட்டு "அண்ணா!" என்று மெதுவாய் அவரைக் கூப்பிட்டு, "தாங்கள் போனால் எனக்குப் பயமாயிருக்கும். இன்னும் இரண்டுநாட்கள் கழித்துத் தாங்கள் போனால் எனக்கு சற்றுபயமில் லாமலிருக்கும். தாங்கள் போயிருக்குஞ் சமயம் அவன் இங்கு வந்தா லும் வருவான். என்னைத் தனியேவிட்டுத் தாங்கள் போய்விடா தேயுங்கள்" என்று அவரிடம் மெதுவாய்ச் சொன்னாள். "சீ! என்ன இவ்வளவு முட்டாள்தனம் எனக்கு! கோபத் தில் எல்லாவற்றையும் மறந்துவிட்டேனே. இந்த வெயிலில் வந்த உன்னை நான் கவனிக்க வில்லையே! இந்தா இதைச் சாப்பிடு முத வில்; நல்லகாலம் எல்லாவற்றையும் என் வயிற்றில் கொட்டிக்கொள் ளாம லிருந்தேனே. ஹோட்டலிலிருந்து இதோ சிற்றுண்டி தரு விக்கிறேன்" என்று மாசிலாமணி நாடார் சொன்னார்.

லீலாவதி:—பக்ஷணம் அதிக ருசிகரமாயிருக்கிறது அண்ணா! அவன் இனி எக்கேடு கெட்டால் நமக்கென்ன? தங்களைவிட்டுத் தனியே நான் இனி எங்கு செல்லப் போகிறேன்? நமது அந்தஸ்து என்ன, அவன் யோக்கியதை என்ன! தாங்கள் அவனை ஒரு பொருட்டாக மதித்து அவனிடம் போகலாமா? அந்த நாய் இனி என்னை என்ன செய்யமுடியும்?

அப்படி அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, "மேரியா மர்ட்டன் வெளியே வந்து காத்துக் கொண்டிருக்கிறார்" என்று வேலைக்காரன் மாசிலாமணி நாடாரிடஞ் சொன்னான். உடனே நாடார் எழுந்து வெளியே சென்று மேரியா மர்ட்டனை உள்ளே அழைத்து வந்தார். மேரியா மர்ட்டன் உள்ளே நுழைந்தவுடன் மிக்க ஆச்சரியப்பட்டு, "லீலாவதி! என்ன கல்லுப் பிள்ளையார்போல் இங்கு நிற்கிறாய்! அங்கே எல்லோரும் உன்னைத்தேடுகிறார்களே. தெரிவித்துவிட்டு வரக்கூடாதா? வழக்கம் போல் நான் இன்று காலையில் மேரி ஸ்கூல் பக்கமாய்ப் போய்க் கொண்டிருந்தபோது, பள்ளிக்கூடத்துப் பிரதம உபாத்தியாயர் பத்மினியம்மாள் என்னிடம் பரபரப்புடன் வந்து வெகு கவலையுடன், 'லீலாவதியைக் காணோமே! காலையிலிருந்து அவளைக் காணோம்; இரண்டு மூன்று நாட்களாகவே அவள் ஒரு மாதிரியாயிருந்தாள். ஆனதுபற்றிக் காலை முதல் அவளைக் காணாதது எங்களுக்குக் கவலையாய் இருக்கிறது. என்னிடஞ் சொல்லிக் கொள்ளாமல் அவள் இதுவரையில் பள்ளிக்கூடத்துக்கு வெளியே ஓரடியாவது எங்கும் போனது கிடையாது' என்று சொன்னாள். 'என் இருப்பிடத்துக்கும் அவள் வரவில்லையே, போய்ப்பார்க்கிறேன்' என்று அந்த அம்மாளிடம் சொல்லிவிட்டு, நான் வீட்டுக்குத் திரும்பிப் போனேன். அங்கு போனவுடன், புதுக்கோட்டைக்கு உடனே புறப்பட்டு வரவேண்டிய அலுவல் ஏற்பட உடனே புறப்பட்டு வந்தேன். அலுவல் முடிந்தவுடன், தங்களைப் பார்த்துப் போகலாமென்று வந்தேன்" என்று சொன்னார். மாசிலாமணி நாடார் தம்மிடம் லீலாவதி சொன்ன சமாசாரத்தைச் சுருக்கமாய் அவரிடஞ் சொல்லித் தாமும் அவருடன் திருச்சிக்குப் புறப்பட்டு வரத் தயாரா யிருந்ததாகச் சொன்னார். அப்போது மேரியா மர்ட்டன், அவ்வித விஷயங்களைப்பற்றி நேரிடப் பேசிக்கொள்வது சரியல்லவென்றும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தாமே செய்வதாயும் வற்புறுத்திச் சொன்னதின்பேரில் மாசிலாமணி நாடார் தம் பிரயாணத்தை நிறுத்தினார்.

மேரியா மர்ட்டன் கொஞ்சநேரம் அவர்களோடு பேசிக்கொண்டிருந்துவிட்டுத் திருச்சிக்குப் புறப்பட்டார்.

—o—

பதினைன்காவது அத்தியாயம்

போனது போகட்டும்! ஜாக்கிரதை!

"கப்பிகடவதாக் காலைத்தன் வாய்ப்பெயினுங்
குப்பை கிளைப்போவாக் கோழிபோல்—மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினுங் கீழ்தன்
மனம் புரிந்தவாறே மிகு——நாலடியார்

ஒரு நாள் சாயந்திரம் மூன்றுமணி சுமாருக்குப் புதுக்கோட்டைச் சமஸ்தானத்து ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் இராஜா மால் என்ற கட்டிடத்தை நோக்கிச் சென்றுகொண் டிருந்தார்கள். ஏனெனில், அன்றையதினம் ஸ்ரீப்ரஹதாம்பாதாஸ் ராஜா மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் பஹதூர் ராஜா அவர்களின் பட்டத்துக் குமாரர் பிறந்தநாள் உத்ஸவக் கொண்டாட்டம். பல வித்துவான்கள் தங்கள்தங்களது விற்பத்தியைக் காட்டிப் புகழ்பெற வேண்டி சமஸ்தானத்துக்கு வந்திருந்தார்கள். ஜால வேடிக்கை அப்பையா சாஸ்திரியாரவர்கள் அன்றைய சாயந்திரம் ஜால வேடிக்கை செய்யப்போவதாக விளம்பர மூலமாய் அறிக்கை செய்யப்பட் டிருந்தபடியால் எண்ணிறந்த ஜனங்கள் இராஜா மாலுக்குப் போய்க்கொண் டிருந்தார்கள். அவ்வேடிக்கையைப் பார்ப்பதற்கு லீலாவதியும் சுலோசனாவும் போயிருந்தார்கள். வேடிக்கை ஆறு மணிக்கு முடிவடைய, லீலாவதியும் சுலோசனாவும் வீட்டுக்குப் புறப்பட்டார்கள். அவர்களிருவரும் வெளியில் வர, நவமணியும், அவன் சிநேகிதர், பால் அப்பாஸாமி நாடாரும், வெளியில் நின்றுகொண் டிருப்பதைப் பார்த்தார்கள். லீலாவதியும், பால் அப்பாஸாமி நாடாரும் குறிப்பறிந்து, அவ்விரட்டையர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, தத்தம் இருப்பிடத்தை நோக்கிச் சென்றார்கள். சுலோசனாவும் நவமணியும் சமஸ்தானத்தைச் சேர்ந்த பூந்தோட்டத்துக்குச் சென்று, அங்கு வரிசையாய் வெகு நேர்த்தியாகப் போடப் பட்டிருந்த பெஞ்சிகளில் ஒன்றி லுட்கார்ந்துகொண்டு உற்சாகமாய்ப் பேசத் தொடங்கினார்கள். அங்குள்ள எல்லாப் பெஞ்சிகளும் அநேகமாய் நிறைந்தே இருந்தன. பின்னும் வெகு ஜனங்கள் வந்துகொண்டே யிருந்தார்கள்.

சுலோசனா:—என் அப்பா நவமணி! உன்னுடன் நின்றுகொண் டிருந்தவர் யார்? அவர் உன்னுடைய தோட்களின்மீது கையைப் போட்டுக்கொண் டிருந்தார்போல் தோன்றுகிறதே.

நவமணி:—அவர் பெயர் பால் அப்பாஸாமி நாடார். மிகவும் நல்லவர். நம்ம தெருவுக்குப் பின்னே யிருக்கிற தெருவில் ஒரு பங்களாவை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, இந்த சமஸ்

தானத்துப் பிரதம வித்வானிடம் சங்கீதம் கற்றுக் கொள்கிறார். வித்வானுக்கு மாதத்துக்கு 150 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார். அவருடைய சொந்த ஊர் தஞ்சாவூராம். ஏதோ ஒரு கிளப்பில் போஜனஞ் செய்துவருகிறார்.

சுலோசனு:— சங்கீதத்துக்குப் பிறப்பிடமாகிய தஞ்சாவூரை விட்டு இங்கு வந்தாரோ சங்கீதங் கற்றுக் கொள்வதற்கு! பாவம்! அங்கு ஒருவரு மகப்படவில்லேபோ லிருக்கிறது. பேஷ்! நிரம்ப நன்றாயிருக்கிறது! அவருக்கு இங்கு இதைத் தவிர வேறு வேலை ஒன்றும் கிடையாதோ?.

நவமணி:— அதையெல்லாம் யார் கண்டார்கள்? நான் இந்த ஊருக்கு வந்த இரண்டாவதுநாள் சாயந்திரம் குளத்துப் பக்கம் போய்த் திரும்பி வந்துகொண் டிருந்தபோது கண்ணுக்கு நன்றாய் இருட்டி யிருந்தது. குளத்தின் ஓரமாய் நான் போய்க்கொண் டிருந்தபோது, "ஐயோ! ஐயோ!" என்ற சப்தம் என்காதிற் பட்டது. உடனே குளத்துச் சரிவில் நான் இறங்கிப் பார்த்தபோது, இந்தப் பால் அப்பாஸாமிநாடார் ஜலத்தண்டை மூர்ச்சித்துக் கிடந்தார். நான் அவர் அருகிற்சென்று பார்க்க அவருடைய காலை ஓர் நீர்க்குறட்டை கௌவிக்கொண்டிருந்தது. உடனே நான் என்னுடைய அங்கவஸ்திரத்தை எட்டாய் மடித்து, அதைக் கையில் பக்குவமாய் வைத்துக்கொண்டு வெகு ஜாக்கிரதையாய் அப்பாம்பின் தலையைக் கெட்டியாய்ப் பிடித்திழுத்து, அதைச் சுழற்றி எறிந்தேன். பின்பு அவர் முகத்தில் தண்ணீரைத் தெளித்தேன். இரண்டொரு நிமிஷத்தில் அவருக்கு மூர்ச்சை தெளிந்தது. நான் ஒரு வண்டியை உடனே அமர்த்திக்கொண்டு, அவரை அவர் இருப்பிடத்துக்குக் கொண்டுபோய்விட்டு டாக்டரை அழைத்துக்கொண்டு போனேன். இவ்வளவுதான் நான் அவருக்குச் செய்தது. அதுமுதல் அவர் என்னிடம் தேவதா விசுவாசமா யிருக்கிறார். இந்த அற்ப உபகாரத்துக்காக அவர் என்னிடம் வைத்திருக்கிற பிரியத்தையும், மரியாதையையும் கவனித்தால், எனக்கு நிரம்ப லஜ்ஜையா யிருக்கிறது. அன்றுமுதல் அவர் என்னிடம் அடிக்கடி வந்துகொண் டிருக்கிறார். நானும் அவருடைய பங்களாவுக்கு அடிக்கடி போவதுண்டு. அதற்கு மாத வாடகை 75 ரூபாயாம். பங்களா மிகவும் நேர்த்தியா யிருக்கிறது. தகுந்த ஜவேஜுக்காரர்போல் தோன்றுகிறது. ஆனாலும் அவர் இப்படி அனாவசியமாய்ச் செலவு செய்யவேண்டாம்.

சுலோசனு:—சரி, அதைப்பற்றி நமக்கென்ன கவலை! உன்னுடைய உடம்பு என் இப்படி இளைத்திருக்கிறது? ஆனாலும் நீ இவ்வளவுதூரம் உன் மனத்தைப் புண் பண்ணிக்கொள்ளக் கூடாது.

நவமணி:—நான் இனி எப்படிப் போனுலென்ன? கொலே பாதகனென்று பட்டம் வாங்கி மானத்தை இழந்தபிறகு நான் இறப்பதே நலம்.

சுலோசன:—(அழுதுகொண்டு) நவமணி! என் காது கேட்க நீ இப்படிச் சொல்வது உனக்குத் தருமமா? நீ இனி இம்மாதிரி பேசுவாயானுல், மறு நிமிஷமே நான் என்னுயிரை மாய்த்துக் கொள்வேன். கடவுள் நம்மைக் கைவிடமாட்டார். கூடிய சீக்கிரத்தில் உண்மை வெளியாகுமென்று எனக்குத் தோன்றுகிறது.

அவர்கள் அப்படிப் பேசிக்கொண்டிருந்தபோது, அவர்களுக்குப் பின்னுலிருந்த பெஞ்சியில் ஒரு புருஷனும் ஸ்திரீயும் ஏதோ தர்க்கஞ் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் அதிகச் சப்தஞ் செய்தபடியால், வேறு இடம்போய்த் தனியே உட்காரலாமென்று நவமணியும் சுலோசனுவும் அங்குவிட்டெழுந்துபோனுர்கள்.

பின்னுலிருந்த பெஞ்சியில் உட்கார்ந்திருந்தவர்களே நாம் சற்றுக் கவனிப்போம். புருஷனுக்குச் சுமார் முப்பதும், ஸ்திரீக்குச் சுமார் பதினெட்டு வயதுமிருக்கலாம். அவர்கள் பின்வருமாறு சம்பாஷணை செய்துகொண்டிருந்தார்கள்.

புருஷன்:—நான் இவ்விடம் வந்திருக்கிற சமாசாரம் உனக்கு எப்படித்தெரியவந்தது? நான் திருச்சிக்குத் திரும்பிவரும் வரையில் உனக்குப் பொறுக்க வில்லேயோ? இவ்வளவு அவசரமாய் நீ என்னேப் பார்த்து எனக்குச் சொல்லவேண்டிய சமாசாரம் என்ன இருக்கிறதோ? அப்படிப்பட்ட விசேஷ சமாசாரம் இருப்பதற்கு ஒரு நியாயமு மில்லேயே.

ஸ்திரீ:—திருச்சியிலிருந்து நான் இவ்விடம் வரவில்லே. சில மாதங்களாக நான் இங்குதான் வசித்து வருகிறேன். நான் இங்கு இல்லாமல் டில்லியில் இருந்தாலும் தற்காலம் தங்களேக்காண நான் எப்படியும் வந்தே யிருப்பேன். இப்படிப்பட்ட விசேஷ சமாசாரம் நான் தங்களிடம் சொல்லவேண்டி வந்ததற்கு ஒரே நியாயந்தானிருக்கிறது; அதென்னவென்ருல், நியாயாதிபதி குற்றவாளியின் குற்றத்தைச் சொல்லவேண்டிய நியாயந்தான்.

புருஷன்:—என்ன தாறுமாருகப் பிதற்றுகிருய்? நியாயாதிபதி யாவது குற்றவாளியாவது? நானிங்கு வந்திருக்கிறது உனக்கு எப்படி இவ்வளவு சீக்கிரத்தில் தெரிய வந்தது?

ஸ்திரீ:—காந்த விளக்கு இருக்கு மிடத்தில் விட்டில் பூச்சி வருவது சகஜந்தானே! குட்டிச் சுவற்றில் முட்டிக் கொள்ள வெள்ளெழுத்து வேண்டுமா என்ன? ஒரு வாரத்துக்கு முன்னமேயே நான் தங்களே இங்கு எதிர்பார்த்தேன். தாங்கள் இத்தனே நாள்

தாமதித்து வந்ததே எனக்கு மெத்த ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது.

புருஷன் :—அப்படியா! என்ன புத்திசாலித்தனம்! அவசர சமாசாரத்தைச் சொல்லாமல் என்னென்னவோ புதூர் போடுகிருயே. சீக்கிரஞ் சொல்லி ஒழி; எனக்கு வேலையிருக்கிறது.

ஸ்திரீ :—அந்தச் சமாசாரத்தை இங்கு சொல்வது சரியல்ல; தனிமையில்தான் பேசவேண்டும். ஆகவே என் வீட்டுக்கு வந்தால் சொல்லுகிறேன்.

புருஷன் :—உன்னுடைய வீட்டுக்கா! இதென்ன புதுமை! வாடகை கொடுத்தா வீடு வைத்துக்கொண்டிருக்கிருய்? வாடகைக்குப் பணம் ஏது உனக்கு?

ஸ்திரீ :—மாதம் மாதம் வாடகை கொடுக்கப் பணத்துக்கு நான் எங்கு போவேன்! அது முடியாதென்று தெரிந்துகொண்டு தான் வீட்டை விலைக்கே வாங்கிவிட்டேன். ஏன் காலதாமதம் செய்கிறீர்கள்? வாருங்கள் போகலாம்.

புருஷன் :—நிஜந்தானு நீ சொல்வது? வீடு வாங்கப் பணம் உனக்கு யார் கொடுத்தார்கள்?

ஸ்திரீ:—"அகதிக்குத் தெய்வமே துணை" என்ற நீதியின்படி ஒரு புண்ணியவான் எனக்கு வீடு வாங்கிவைத்தார். ஒருநாள் தங்களிடம் பிச்சைக்கு வந்து ரூபாய் ஐந்து வாங்கிக்கொண்டு வந்தேனல்லவா? அன்றையதினம், இனிமேல் திருச்சியில் இருப்பதில்லையென்று ஒரு சபதஞ் செய்துகொண்டு உடனே புதுக்கோட்டைக்குப் புறப்பட்டு வந்து சேர்ந்தேன். தாங்கள் கொடுத்து உதவியது பத்து நாட்களில் செலவாயிற்று. வயிற்றுக்கு ஒன்றுமில்லாமல் ஒருநாள் மூர்ச்சை யுண்டாகும்போலிருக்க, ஒரு பங்களாவின் வாசல்திண்ணையில் படுத்துக்கொண்டேன். அன்றிரவு பன்னிரண்டு மணிக்கு யாரோ ஒருவர் என்னை எழுப்பினர். பசிக்கொடுமையால் ஒன்றுந்தோன்ருமல், "ஐயோ பசிக்கிறதே!" என்று அவரிடம் சொன்னேன். அவர் என்மீது அளவற்ற கருணைகொண்டு உடனே என் பசிப்பிணியைத் தீர்த்தார். அவரிடம் என்னுடைய பிறப்பு வளர்ப்பையும், தாங்கள் என்னை மோசம் செய்ததையும் விஸ்தாரமாய்ச் சொன்னேன். என்னை அவர் தம்முடைய சகோதரியைப்போல் பாவித்து எனக்கு வீடொன்று வாங்கிவைத்தார். அவர்தாம் என்னுடைய குலதெய்வம். அந்தப் புண்ணிய புருஷர் நெடுநாள் வாழவேண்டும்! உம்மிடம் அவரைப்பற்றி என்ன பேச்சு! உம்மைப் பகல் பன்னிரண்டு மணி நேரத்திலல்லவா நினைக்கவேண்டும்! தாங்கள் அவ்வளவு குளிர்ந்தவரல்லவா? வாரும், போகலாம்.

புருஷன் :—அப்படியா சமாசாரம்! உன்னை அவர் அவருடைய சகோதரிபோலவா எண்ணி யிருக்கிருர்? அதைப்பற்றி

எனக்கென்ன கவலே! எப்படியாகிலும் நீ சுகமாயிருந்தால் சரி. எனக்கிப்போது வேலேயிருக்கிறது. உன்கூட வரமுடியாது. ஆகையால் உன்னுடைய மாளிகையின் விலாசத்தைத் தெரிவித்தால், தகுந்த விருதுகளுடன் நாளேக்கு வந்து தங்களேச் சேவிக்கிறேன்.

ஸ்திரீ:—சுவர்க் கோழிபோல் அவர்கள் அருகில் இந்நேரம் ஒன்றியிருந்து கேட்டது போதாதா? சுவர்க்கோழி இன்னும் என்ன தீங்கு நினேக்கிறதோ அவர்களுக்கு! தங்களேப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு என்னவோ விட்டில் பூச்சி ஞாபகமே வருகிறது. யானேயைப்போல் மண்ணே வாரித் தலேயில் போட்டுக் கொள்ளாதேயும். இதுவரையில் அவனுக்குச் செய்ததே உமக்குக் கொடிய நரகம் கொடுக்கும்.

புருஷன்:—உனக்கு மெதுவாய்ப் பேசத் தெரியாதோ! ஏனிப்படி ஊளேயிடுகிருய்?

ஸ்திரீ :—எனக்கு இப்படித்தான் பேசத்தெரியும். அதற்காகத் தான் வீட்டுக்குக் கூப்பிடுகிறேன்.

அவ்விருவரும் உடனே வீட்டுக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் வீட்டை யடைந்து உட்கார்ந்ததும், "நம்முடைய பழைய சிநேகத்துக்காக ஒரு ஆட்டம் ரெங்கு ஆடலாம் வா. அணு மேஜை போதும்" என்று அவர் அவளிடஞ் சொன்னர்.

ஸ்திரீ :—உம்முடைய பழைய சிநேகம் வார்த்தையோடு இம்மட்டும் நிற்கட்டும். நான் இப்போது உம்மை என்னுடைய ஜன்ம விரோதியாய் நினேக்கிறேன். உம்முடைய வலேயில் நான் தவறிச் சிக்கிக்கொண்டு அனுபவித்த கஷ்டம் இன்னும் ஏழேழு ஜன்மங்களுக்குப் போதும். ஆதலால் வீண்வார்த்தை பேசாதேயும். தவறினல் மரியாதை கெட்டுவிடும். ஜாக்கிரதை! நான் நாளது தேதி வரையில் உம்மிடம் பெற்றுக்கொண்டிருக்கிற தொகை ரூபாய் 150–8–3. இதோ அதைத் தயவுசெய்து உடனே பெற்றுக்கொள்ளும்.

புருஷன்:—எனக்கு இப்போது பணம் தேவையில்லே. அவசியமேற்படும்போது வாங்கிக் கொள்ளுகிறேன்.

ஸ்திரீ:—தங்களுக்கு ஒரு நாளும் பணம் தேவையாய் இருந்ததில்லே. தவிர, தங்களுக்கு இனி என்ன குறைவு? பையன் ஐவேஜி அப்படியே கிடைத்து விட்டது. லாபத்தை உத்தேசிக்காமலா இப்படித் துணிந்து வேலே செய்வீர்கள்.!

புருஷன் :—உனக்குச் சித்தப் பிரமம்போல் இருக்கிறது. கொடு, வாங்கிக் கொள்ளுகிறேன். இவ்வளவுதானே சமாசாரம்? உனக்கு எத்தனே நாட்களாய் இப்படி இருக்கிறது ?

ஸ்திரீ :—எத்தனே நாட்களாகவா ? ஒன்னு, ரெண்டு, மூனு, நாலு, அஞ்சு, ஆறு, எழு, எட்டு, ஒம்பது, பத்து—அத்தனே தான்.

சுமார் பத்து மாதங்களாகத்தான் இப்படி இருக்கிறது. இனிமேல் நீர் அவர்களைத் தொந்தரவு செய்தால் உம்மைத் தொலைத்துவிடுவேன். போனது போகட்டும்; ஜாக்கிரதை!

புருஷன் :—அதுதான் சொல்லிவிட்டேனே உனக்குப் பிரமமென்று; எது வேண்டுமென்றாலும் சொல். சுய அறிவோடு நீ இப்போது பேசுவதாயிருந்தால், நான் உன்னை ஒரு விநாடியில் நசுக்கிவிடுவேன்.

ஸ்திரீ :—யார் யாரை நசுக்குகிறார்கள் என்பது கூடிய சீக்கிரத்தில் தெரியும். போய் வாரும்.

"உரலிலே தலையை நுழைத்துக்கொண்டால் உலக்கை சும்மா விடாது" என்றபடி என் விஷயத்தில் நீ உன் தலையை நுழைத்துக் கொண்டால் உன்தலை தப்பாது! "இது சத்தியம்" என்று அப்புருஷன் அவளிடஞ் சொல்லிவிட்டுச் சரேலென எழுந்து வெளியிற் சென்றான்.

———o———

பதினைந்தாவது அத்தியாயம்

வழியைவிட்டு ஒதுங்கும்!

"செய்யு மொருகருமந் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபஞ் சேருமே;—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல்"—நீதிவெண்பா.

மாசிலாமணிநாடாரும் லீலாவதியும் போஜனஞ் செய்துவிட்டுத் தாம்பூலம் போட்டுக்கொண்டு, தந்தையும் புத்திரியும்போல் பரஸ்பரம் அத்தியந்தப் பிரியத்துடன் பேசிக்கொண்டிருந்தபோது "அண்ணா! நான் இதுவரையில் பார்ஸி டிராமா பார்த்ததே கிடையாது; அதைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு வெகுநாட்களாய் ஆசையாயிருக்கிறது. புதிதாய்க் கம்பெனியொன்று வந்திருக்கிறதாம்; அதில் இன்றைக்குத்தான் முதல் ஆட்டமாம், நன்றாயிருக்குமாம்" என்று லீலாவதி அவரிடஞ் சொன்னாள்.

மாசிலாமணி நாடார் :—இவ்வளவுதானே! இதற்கு இவ்வளவு பூர்வபிடிகை வேண்டுமா? சரி, போகலாம்.

லீலாவதி :—சுலோசனாகூட இதுவரையில் அந்த டிராமாப் பார்த்ததில்லையாம்.

மாசிலாமணி நாடார்:—சரி, அவளுக்கும் ஒரு டிக்கெட் வாங்கி வரச் சொல்லுகிறேன்.

ஆகவே, அன்றிரவு ஒன்பதுமணி சுமாருக்கு மாசிலாமணி நாடார், லீலாவதி, சுலோசனா, ஆகிய மூவரும் பார்ஸி தியேட்டருக்குப் புறப்பட்டார்கள். ஆட்டம் அற்புதமாய் இருந்தபடியால் லீலாவதியும், சுலோசனாவும் இகபரம் புறியாமல் உற்சாகமாய் உட்கார்ந்திருந்தார்கள். பிரசித்திபெற்ற ஒரு ஆக்டர் விமரிசையாய் அபிநயத்துப் பாடிகொண்டிருந்ததை யாவரும் பார்த்துக்கொண்டிருக்கையில் திடீரென்று, "நெருப்பு! நெருப்பு!" என்ற பேரமளி ஒன்று கிளம்பிற்று; ஓரிமைப்பொழுதில், தீயானது கொட்டகையைச் சூழ்ந்து கொள்ள மூங்கில்கள் வெடித்தன. அவைகளிலிருந்த ஆணிகள் எல்லாம் அக்கினிச் சுவாலையினால் பழுக்கக் காய்ந்து நாலாபக்கமும் சிதறி வீழ்ந்தன; நெருப்பு என்ற சப்தம் மாசிலாமணி நாடாரின் காதில் விழுந்தவுடன், அவர் சரேலென எழுந்து, லீலாவதியையும் சுலோசனாவையும் உடும்புப் பிடிபோல் பிடித்து இழுத்துக்கொண்டு கூட்டத்தினுட்புகுந்து, நாலாபக்கமுமிழுக்கப்பட்டுத் தட்டித் தடுமாறி வெளியே செல்லப் பிரயத்தனப்பட்டார். தீயின் சுவாலை அதிக உக்கிரமாயிருந்தது.—நெருப்புப் பிடித்த கீத்துக் கொட்டகையிலிருந்து தப்பியோடுவது சாமானியவிஷயமா!—விழுந்தும், புரண்டும், மிதிபட்டும், ஐயோ! ஐயையோ! எந்தப்பாவியோ என்காதை அறுத்துவிட்டானே! டேய், கொடிபோனால்போகிறது, கழுத்தை விடடா! அப்பா, அப்பா! கால்போச்சு! எழவுபூட்ஸ்! என்ற பற்பல கோரமான சப்தங்கள் கிளம்பின. மாசிலாமணிநாடார் எப்படியோ அவர்களிருவரையும் இழுத்துக் கொண்டு வாசற்படியண்டை அநேகமாய் நெருங்கிவிட்டார். அப்போது ஆடி மாதத்து வெள்ளத்தையொத்த ஒரு பெருங்கூட்டம் உள்ளேயிருந்து வெளியே செல்ல யத்தனித்து வந்தது மாசிலாமணி நாடாரின் பகீரதப்பிரயத்தனம் உடனே வீண் போயிற்று. ஏனெனில் லீலாவதி அவருடைய பிடிப்பிலிருந்து நழுவி எங்கேயோ பிரிந்துவிட்டாள். மாசிலாமணி நாடார், சுலோசனா ஆகிய இருவர்மட்டும் கொட்டகைக்கு வெளியே சென்று திணறித் திணறி மூச்சுவிட்டுக்கொண்டு திகைத்து நின்றார்கள்.

பிரிந்துபோன லீலாவதி கோவென்று அலறிக்கொண்டு கீழேவிழுந்து மூர்ச்சித்தாள். அப்போது அந்த இடத்தை நோக்கித் தற்செயலாய் வந்துகொண்டிருந்த நவமணி, கும்பலைக் கொஞ்சமேனும் மதிக்காமல், அவளைத் தூக்கிகொண்டு வெளியே ஓடினான். கொட்டகைக்கு வெளியே போனவுடன், லீலாவதியின் முகத்தில் குளிர்ந்த காற்று வீச அவளுக்கு மூர்ச்சை தெளிந்து, மெதுவாய்க் கண்களைத்திறந்து, அடங்கா மகிழ்ச்சியோடு நவமணியைப் பார்த்து, "என்னை எப்படிக் காப்பாற்றினீர்கள்? நான் இதற்குத் தங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?" என்று நவமணியினிடஞ் சொன்னாள். "அதெல்லாம் ஒன்றுமில்லை. நீ இவ்வளவுதூரம் புகழ்ந்துபேசும்படி நான் உனக்கு ஒன்றுஞ் செய்துவிடவில்லை.

வண்டியொன்று மகப்படாதுபோல் தோன்றுகிறதே! கண்ணுக்கு எட்டியவரையில் வண்டியொன்றுவது காணப்படவில்லையே! நாலா பக்கமும் ஆணிகள் சிதறுகிறபடியால் நாம் இங்கு நின்றுகொண்டிருப்பது அபாயகரமானது," என்று நவமணி பதில் சொன்னான். "அக்காளும் அண்ணாவும் எங்கிருக்கிறார்களோ தெரியவில்லையே" என்று லீலாவதி சொல்லிக்கொண்டிருந்தபோது நவமணியை எங்கும் தேடிக் காணாது கடைசியில் அப்பசுகமாய் வந்துகொண்டிருந்த பால் அப்பாஸாமிநாடார் நவமணியைப்பார்த்துச் சந்தோஷத்துடன், "கவலையுடன் நான் இந்நேரம் உன்னை எங்கெங்கேயோ தேடினேன்; நல்ல வேளையாய் இங்கு இருக்கிறாயே; உன் சகோதரியும் மாசிலாமணிநாடாரும் லீலாவதியைத்தேடிவிட்டுப் பத்துநிமிஷத்துக்கு முன் தான் வீட்டுக்குச் சென்றார்கள். சரி, சரி, அப்புறம் பேசிக்கொள்ளலாம்; நான் போய் வருகிறேன். ஜாக்கிரதையாய் வீடுபோய்ச் சேர். வண்டிதான் ஒன்றுவது காணோம்" என்று நவமணியினிடஞ் சொல்லிவிட்டு இங்கிதமாய்த் தம் வழியே சென்றார்.

அவர் சென்றவுடன் "தாங்கள் சமயத்தில் வந்திராவிட்டால் நான் இந்நேரம் சவமாயிருப்பேன்; தேவர்தாம் தங்களை அப்போது அவ்விடம் கொண்டு வந்துவிட்டார்போலும்! இந்தப் பேருதவிக்கு நான் தங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேனோ!" என்று லீலாவதி மறுபடியும் நவமணியினிடஞ் சொன்னாள்.

நவமணி :—கடுகை மலையாக்கி விடுகிறாயே! புறப்படலாமா? நாழிகையாகிறது.

லீலாவதி :—தாங்கள் இப்போது செய்த பேருதவிக்கு வட்டியோ இது! என் செய்வது! துணைக்கும் தாங்கள்தாம் வரவேண்டும்போ லிருக்கிறது.

லீலாவதி அப்படிச் சொல்லிக்கொண்டிருந்த போதே, "நீ சொல்வது நியாயந்தான். ஒருமனிதனை எவ்வளவுதூரம் சிரமப்படுத்துகிறது? நவமணி போகட்டும். நான் வருகிறேன் உன்கூட" என்று சொல்லிக்கொண்டு அவர்களுக்குப்பின்னே வந்துகொண்டிருந்த அற்புதஸாமி உடையார் அவர்கள்முன் நின்றார். நவமணியும் லீலாவதியும் திடுக்கிட்டுக் கணநேரம் ஒன்றுந் தோன்றாது நின்றார்கள். "யார்கூட வரப்போகிறாய்: உன்னிஷ்டத்தைச் சொல்" என்று நவமணி லீலாவதியைக் கேட்டான்.

லீலாவதி:—அற்புதஸாமி உடையாரவாளா? இங்கு எப்போது வந்தீர்கள்? பாவம்! தங்களைத் தொந்தரவுசெய்ய எனக்குக் கொஞ்சமேனும் இஷ்டமில்லை. ஆகையால் நான் இவருடனேயே போகலாமென்று நினைக்கிறேன்.

நவமணி :—உடையாரவாள்! சரிதானே!

அற்புதஸாமி உடையார் :—இதுவிஷயமாய் அவள் சொல்லுவது பிரயோஜனப்படாது. அவள் எது வேண்டுமென்ருலுஞ் சொல்லட்டும். அவளிஷ்டப்படி நடக்க நான் தயாராயில்லை. குழந்தை, அவள் எதைக் கண்டாள்? நீயா!........நீயா!..............அவளுக்குத் துணை! பேஷ்! தகுந்ததுணை பிடித்தாள்! என்னவோ வசனம் சொல்லுவார்கள்! மறந்துவிட்டதே அது! * * *

நவமணி :—என்ன தாறுமாருய் பிதற்றுகிறீர்! அவளுக்கு நீரா ஐயா? சித்தத்தை நழுவவிடாது மரியாதை தவருமல் ஜாக்கிரதையாய்ப் பேசும்; நாழிகையாய் விட்டது; விலகி நில்லும்.

அற்புதஸாமி உடையார் :—அடே! உன்னிடம் எனக்கு அதிகப் பேச்சுத் தேவையில்லை! காவேரிப் பாலத்தின் தென்புறத்திலுள்ள சரிவைப்பற்றி ஞாபகப்படுத்திக்கொள். பிறகு உன் துணையின் பெருமை நன்குதெரியும். லீலாவதி! வா அம்மா; நாம் போகலாம்.

லீலாவதி :—மனிதருக்கு அல்லவா குறிப்பறியும் ஒருசொல்! உமக்கு அது எப்படிப் போதும்! மரியாதையாய்ச் சொன்னல் கேட்கமாட்டீர்போ லிருக்கிறது! உமது வேலையைப் பார்த்துக் கொண்டு நீர் போம். வழியைவிட்டு ஒதுங்கும். வீண்வார்த்தை வளர்க்காதேயும்.

அற்புதஸாமி உடையார் :—நிச்சயந்தானு? யோஜித்து முடிவு செய்துவிட்டாயா?

லீலாவதி:—நவமணி நாடாரே! அவருக்காக நீர் ஏன் தாமதிக்கிறீர்? அவருடைய துணை எனக்கு வேண்டாமென்று நான்தான் சொல்லுகிறேனே! அவர் சொல்லப்போகிறதை நீர் எதற்காக எதிர்பார்க்கிறீர்? உமக்கு என்கூடவர இஷ்டமில்லா விட்டால் நான் தனியே செல்லுகிறேன்.

உடனே நவமணியும் லீலாவதியும் புறப்பட்டார்கள். அப்போது அற்புதஸாமி உடையார் கோபத்துடன், "உங்களிருவருக்கும் கேடுகாலம் கிட்டிவிட்டதுபோ லிருக்கிறது" என்று சொல்லி வழியை விட்டு ஒதுங்கிப் போனர்.

—o—

பதினாறாவது அத்தியாயம்.

யாரடா அங்கே! யமராஜ்!

"நட்புப் பிரித்தல், பகைநட்டல், ஒற்றிகழ்தல்,
பக்கத்தார் யாரையு மையுறுதல்,—தக்கார்
நெடுமொழி கோரல், குணம்பிறி தாதல்,
கெடுவது காட்டுங் குறி."—நீதிநெறிவிளக்கம்.

நவமணியும், லீலாவதியும் மாசிலாமணி நாடாரின் பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். வாயிற் கதவு திறக்கப்பட்டிருக்க, அவ்விருவரும் உள்ளே நுழைந்து கூடத்துக்குச் சென்றவுடன், லீலாவதி நின்றுகொண்டு அச்சத்துடன் பின்னே திரும்பிப்பார்த்து "அந்த மனிதனும் நம்கூடவே பின்னால் வந்துகொண்டிருந்தான் என்று எனக்குத் தோன்றுகிறது" என்று நவமணியினிடம் சொன்னாள். "ஆம்: இவ்விஷயம் உனக்குத் தெரிந்திராதென்று நான் நினைத்திருந்தேன்; அவன் நம்கூடவேதான் பின்னால் மறைந்து வந்தான்" என்று நவமணி பதிற் சொன்னான். பிறகு லீலாவதி, "ஏன் தியங்கி நிற்கிறீர்கள்? உள்ளே வாருங்களேன்" என்று நவமணியினிடஞ் சொல்ல, "வேண்டாம்: நாழிகையாகிவிட்டது: நான் போய்வருகிறேன்" என்று நவமணி பதிலளித்தான்.

மேல்மாடியின் ஒரு கோடியிலிருந்து லீலாவதியின் வரவை அதிகக் கவலையுடன் எதிர்பார்த்துக்கொண் டிருந்த மாசிலாமணி நாடாரும் சுலோசனாவும் அதற்குள்ளாகக் கீழே இறங்கி ஓடிவந்து "நல்ல வேளை, வந்து சேர்ந்தாயே அம்மா!" என்று லீலாவதியைப் பரிவுடன் விசாரித்துவிட்டு, மிக்க ஆச்சரியத்துடன் நவமணியைப் பார்த்தார்கள்.

சுலோசனா:—நவமணி! நீயும் தியேட்டருக்கு வந்திருந்தாயா என்ன? எனக்குத் தெரியாதே அது! நல்ல காலம் ஜாக்கிரதையாக வந்து சேர்ந்தாயே அப்பா! சரி; நிலவுதான் நன்றாய்க் காய்கிறது; நாம் புறப்பட்டு வீட்டுக்குப் போய்விடலாம்போ லிருக்கிறதே!

மாசிலாமணி நாடார்:— இதென்ன காடா வனமா? வெகு அழகாயிருக்கிறது நீங்கள் சொல்வது! காலையில் போகலாம்.

நவமணி:—இல்லை; தயவுசெய்து அப்படிச் சொல்லக்கூடாது வீட்டில் கவலைப் படுவார்கள்: இல்லாவிட்டாலென்ன! நான் உடனே போவதுதான் நியாயம்; தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. தயவுசெய்து உத்திரவளிக்க வேண்டும்.

மாசிலாமணி நாடார் :—சரி, நீ சொல்வது உன்மட்டில் நியாயந்தான். சுலோசனுவுக்கு என்ன அவஸரம் இப்போது ?

நவமணி :—ஒன்றும் இல்லே; அவள் காலையில் வருவதுதான் சரி.

அப்படியவர்கள் பேசிக்கொண் டிருந்தபோது ஒருவரு மறியாமற் பூனைபோல் உள்ளே வந்திருந்த அற்புதஸாமி உடையார் எல்லோரும் பயந்து திடுக்கிடும்படி, "அவன் சொல்வதுதான் சரி; அவனுக்கு இங்கு என்ன வேலே?" என்று திடீரென்று சொல்லிக்கொண்டே மறைந்திருந்த இடத்திலிருந்து வெளிப்பட்டு அவர்களுக்கு எதிரேபோய் நின்ருர்.

மாசிலாமணி நாடார்:— உடையாரா ! திரிசிரபுரத்திலிருந்து இங்கு எப்போது வந்ததோ !—க்ஷேமந்தானே ? ஐயா!—க்ஷேமந்தானே! இப்போது எவருடைய அனுமதியின்பேரில் என் வீட்டில் நுழைந்து வந்திருக்கிறீர் ? திறந்து வைக்கப்பட்டிருக்கும் வீட்டில் புகுவது உம்முடைய குணமோ ? அக்குணம் மனிதப் பிராணிகளுக்கு இயற்கை யில்லேபோல் எனக்குத் தோன்றுகிறதே! வேறு ஏதோ ஞாபகமாய் இது உம்முடைய வீடென்று மதித்து வந்துவிட்டீரோ ?

அற்புதஸாமி உடையார் :—நான் வரவேண்டியது அத்தியாவசியமா யிருந்தபடியால் வந்தேன். முக்கியமான இரண்டொரு விஷயங்களேச் சொல்லிவிட்டுப் போய்விடுகிறேன். வெகு காலத்துக்குமுன்னே ஏற்பட்ட விவாக நிச்சயதார்த்தத்தை உத்தேசித்து, இவன் லீலாவதியுடன் சேரக்கூடாதென்பதைத் தங்களிடம் தெரிவிக்கும்பொருட்டு வந்தேன்.

மாசிலாமணி நாடார் :—அப்படியா! நான் சத்குரு உபதேசம் பெறவேண்டி வந்தீரா நீர் ? அடியேனே க்ஷமிக்கவேண்டும்.—ஐயோ குருவுக்குப் பீடை இல்லேயே !—பீடம் கொண்டு வருகிறேன். ஏன் பீடம் அவசியமில்லே; நான் தங்களுக்குப் பாத்திரன் அல்ல—உபதேசம்செய்யவந்தாலும்! உமது இஷ்டப்படித்தான் நாங்கள் நடந்துகொள்ள வேண்டுமோ ? சே ! உம்மிடம் ஏன் வீண் வார்த்தை ! மரியாதையாய் வெளியில் போம்.

அற்புதஸாமி உடையார் :—மரணத்தருவாயில் உம்மை வேண்டிக்கொண்ட உமது உயிர்நண்பருக்கு நீர் இப்போது துரோகம் செய்கிறீர். அவருடைய கண்போன்ற குழந்தையை ஓர் கொலேபாதகன் இச்சிக்க அதற்கு நீர் இடங்கொடுக்கிறீர்.

லீலாவதி:—சீ! இத்துடன் உன் ஊத்தை வாயை மூடு. நீ ஒரு மனிதனுயிருந்தால் கேவலம் ஒரு பெண்பிள்ளேயையா மிரட்டுவாய்? அதிலும், கேவலம் தாய்தந்தைய ரில்லாத என்னைப்போன்ற ஒரு

பெண்ணையா மிரட்டுவாய் ! உன்னிஷ்டப்படி நான் நடந்துகொள்ளா விட்டால் என்னை என்னென்னவோ செய்வாயென்று பயமுறுத்தினை யே ! எனக்கு வேண்டினவர்களை யெல்லாம் இப்போது இம்சித்து வருகிறாய். உன்னுடைய கொடிய எண்ணத்துக்கு விகாதம் ஏற் படுமோ என்று பயந்து, ஒரு பாவத்தையுமறியாத ஒரு உத்தம புருஷன்மீது ஓர் அபாண்டமான குற்றத்தைச் சுமத்தப்பார்க்கிறாய். கவனமாய்க் கேட்டுக்கொண்டு அழியாமல் இருக்கும் வழியைத்தேடு. அவ்வுத்தம புருஷரே என்னுடைய காதலர். நான் சொல்வது உன் காதில் படுகிறதா ? அவர்தாம் என்னைக் காப்பாற்றிய பிரபு. அவரைத்தாம் நான் விவாகஞ் செய்து கொள்ளப் போகிறேன். அவருடைய பெருங்குணத்துக்கு ஏற்றவள் நானோ என்பதுதான் எனக்குச் சந்தேகம். அவரைப் பற்றி இனிமேல் துர்ப்பாஷையில் பேசுவாயாகில், * * * ஜாக்கிரதை ! இவ்வளவுதான் நான் உனக்குச் சொல்ல வேண்டியது. இது என் வீடு. இதற்கு யஜமானி நான்; நீ அல்ல. இதே க்ஷணம் போ வெளியே; இல்லாவிடில் நான் உன்னை என்ன செய்வேனோ, அது எனக்குத் தெரியாது ! என் அண்ணா சும்மா யிருக்கிறீர்கள் ? அவன் இன்னும் தைரியமாய் நிற்கிறானே ! யாரடா அங்கே ! யமராஜ் ! யமராஜ் ! யமராஜ் !

மாசிலாமணி நாடார் :— ஏன் ஐயா இன்னும் நிற்கிறீர் ! உமக்குப் பைத்தியமா என்ன ? யமராஜ் வருவதற்குமுன் உயிரு டன் வெளியே செல்லும். இந்த வீட்டுக்கு லீலாவதியே யஜமானி. நான் ஒன்றும் சொல்ல வேண்டியது அவசியமில்லை.

உடனே அற்புதஸாமி உடையார் கடுங்கோபத்தால் கண்களில் தீப்பொறி பறக்க லீலாவதியைப்பார்த்து "என்னுடைய சபதத்தை நான் நிறைவேற்றாவிட்டால், நான் ஒரு புருஷனல்ல. நீ சொன்ன படியே என்னுடைய எண்ணத்துக்கு விகாதம்" * * * * என்று ஆரம்பித்து முழுதுஞ் சொல்லி முடிக்குமுன், மாசிலா மணி நாடார் சரேலென எழுந்து அற்புதஸாமி உடையாரை அணுகி அவரை வலுவாய்ப் பிடித்துக் கொண்டு, மட மட வென்று வெளியே இழுத்துச் சென்று, யமராஜனை விட்டு அவருக் குத் தண்டம் சமர்ப்பித்துக் கதவைத் தாளிட்டார்.

மாசிலாமணி நாடார் திரும்பி உள்ளே வந்து கொண்டிருந்த போது லீலாவதி விம்மி விம்மி அழுதுகொண் டிருந்தாள். அவர் அதைச் சகிக்கமாட்டாதவராய் "அம்மா ஏன் அழுகிறாய் !" என்று கேட்டுக்கொண்டே அவளைத் தம்முடைய ஏகாந்த அறைக்கு அழைத்துக் கொண்டுபோனார். லீலாவதி அங்கு போனவுடன், "அண்ணா, நான் கண்டபடி பேசிவிட்டேனே! என் மானம் போய் விட்டதே! நான் என்செய்வேன்!" என்று அவரிடம் தேம்பித் தேம்பிச் சொன்னாள்.

மாசிலாமணி நாடார் :—அம்மா! உன்னைப் போன்ற உத்தமியை நான் இதுவரை பார்த்ததே கிடையாது. நவமணியின் தற்கால நிலைமையை நீ ஒரு பொருட்டாய மதியாமல், அவனிடத்தில் உனக்குள்ள பிரியத்தை நீ இவ்வளவு தைரியமாய் வெளியிட்டதைப் பற்றி உன்னிடத்தில் எனக்கு இப்போது ஏற்படும் மனப்பூர்வமான மதிப்பை நான் என்னென்று சொல்வேன்! இது உன்னுடைய தூய்மைக் குணத்துக்கே அறிகுறியா யிருக்கிறது. எனினும் நான் உன்னை ஒன்று கேட்டுக்கொள்ள வேண்டியதா யிருக்கிறது. அதென்னவென்றால், இவ்விஷயம் இன்றைக்கு நடந்ததென்பதையே நீ கொஞ்ச நாட்களுக்கு மறந்திருக்கவேண்டும். ஏனெனில், இந்தச் சமாசாரம் பரவினால், நவமணியின்மீது பெருத்த சந்தேகத்துக்கிடமாகும். நாம் நினைக்க முடியாத பற்பல தீங்குகள் அவனுக்கு இதனால் ஏற்படக் கூடும். ஆனதுபற்றி இது விஷயமாய் நாம் சில நாட்களுக்கு மௌனமாய் இருக்கவேண்டும். பிறகு நம் இஷ்டம்போல் நாம் இருக்கலாம்.

லீலாவதி :—அண்ணா! தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. தங்களிஷ்டப்படியே நான் நடந்துகொள்ளத் தயாரா யிருக்கிறேன்.

மாசிலாமணி நாடார் :—அதுதான் நல்ல குழந்தைக்கு அடையாளம். கூடத்துக்குப்போய் சுலோசனாவை இங்கு சற்று வரச் சொல். நான் அவளிடம் தனிமையில் ஒரு சமாசாரம் பேசவேண்டும்.

உடனே லீலாவதி அவருடைய பெருங்குணத்தை நினைத்து அவருடைய இங்கிதமான குறிப்பை அறிந்து, சுலோசனாவை அவரிட மனுப்பினாள். சுலோசனா அவருடைய அறையில் நுழைந்ததும், மாசிலாமணி நாடார் கதவைத் தாளிட்டுக்கொண்டு அவளுடன் அரைமணி சாவகாசம் பேசிக்கொண்டிருந்தார். பிறகு நவமணிமட்டும் தன்னிருப்பிடத்துக்குப் புறப்பட்டான்.

—o—

பதினேழாவது அத்தியாயம்

பாட்டியம்மாள் ஹோட்டல்

"கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சி? மற் றில்லாகும் :—மண்டெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
பேரா பெரு மூச்செறிந்து."—நீதிநெறிவிளக்கம்.

அற்புதஸாமி உடையார் போஜனஞ்செய்துகொண் டிருந்த பாட்டியம்மாள் ஹோட்டல் ஆண்டார் தெருவின் கீழ்க்கோடியி லிருந்தது. சுமார் ஆறு மாதங்களுக்கு முன்கூட, அதில் அற்புத ஸாமி உடையார் ஒருவரே போஜனஞ் செய்துகொண்டும், வசித்துவர அதில் ஓர் அறை வைத்துக்கொண்டு மிருந்தார். அதில் சாப்பாடு திட்டம் வீட்டுச் சமையல் போலவும், மிகவும் ருசி காமாயும் இருந்ததென்று, அற்புதஸாமி உடையார் தமக்குத் தெரிந்த சிநேகிதர்கள் இருவரிடம் மெச்சிக்கொண்டதின் பேரில் அவர்கள் இருவரும், பின்னும் வேறு இரண்டு பேர்களும் அந்த ஹோட்டலில் போஜனஞ் செய்ய ஆரம்பித்தார்கள். பிறகு கற்பகம் என்ற பெயருடைய அந்தப் பாட்டியம்மாள் ஒத்தாசைக்கு ஒரு ஆள் நியமித்துக் கொண்டாள். பாட்டியம்மாளுக்கு வயது சுமார் ஐம்பதிருக்கும். வேடிக்கையாய், அதற்குப் பாட்டியம்மாள் ஹோட்டல் என்று பெயர் வைக்கப்பட்டது. தகுந்த சிபார்சுகள் பிடித்துக்கொண்டு பலபேர்கள் வந்து அந்த ஹோட்டலில் போஜனம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று பாட்டியம்மாளை வேண்டிக் கொண்டார்கள். அப்போது "இந்த நாலைந்து பேர்களை வைத்துக் கொண்டு சமாளிக்கவே என்னால் முடியவில்லை. ஹோட்டலையே மூடிவிடலாமென்று நான் யோஜனை செய்துகொண் டிருக்கிறேன்" என்று பாட்டியம்மாள் அவர்களிடஞ் சொல்லி, வந்தவர்களை அனுப்பிக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் சாயந்திரம் நான்குமணி சுமாருக்குப் பாட்டியம்மாள் கூடத்திலுட்கார்ந்து இரவுச் சமையலுக்குக் கொத்தவரைக்காய் ஆய்ந்து கொண்டும், தெருவில் நடக்கும் விஷயங்களை நன்றாய்க் கவனித்துப் பார்த்துக்கொண்டு மிருக்கையில், ஒரு மாட்டு வண்டி ஹோட்டல் வாயிலில் வந்துநின்றது. சுமார் நாற்பத்தைந்து வயதுள்ள ஒருவர் அதிலிருந்து இறங்கி இருமிக்கொண்டு உள்ளே நுழைந்து "இதுதானே பாட்டியம்மாள் ஹோட்டல்?" என்று பாட்டியம்மாளைக் கேட்டார்.

பாட்டியம்மாள்:—ஆம்; இதுதான் அது. என்ன விசேஷம்? பாவம் ஏன் நிற்கிறீர்கள்!. அதோ! அந்த மணையில் உட்காருங்கள்.

வந்தவர்:—பாட்டியம்மாளை நான் உடனே பார்க்கவேண்டும். இந்த ஊருக்குள்! இதுதான் முதல்தரமான ஹோட்டலென்று என் சிநேகிதர்கள் தஞ்சாவூரில் சொன்னார்கள். அந்த அம்மாள் நிரம்ப நல்லவள் என்றுஞ் சொன்னார்கள். வீட்டுச் சமையலைப் போலவே இருக்குமாமே! சரி, சரி, அந்த அம்மாள் எங்கே? தயவுபண்ணிக் கூப்பிடுங்கள்; பார்க்கவேண்டும்.

பாட்டியம்மாள்:—நான்தான் இந்த ஹோட்டலை நடத்தி வருகிறேன். நான்தான் அந்த அம்மாள்.

வந்தவர்:— அப்படியா! என் அதிருஷ்டமே அதிருஷ்டம்! எனக்கு அப்போதே கொஞ்சம் சந்தேகமேற்பட்டது. இவ்வளவு மட்டும் மரியாதையுமாய்த் தாங்கள் பேசினபோதே தாங்களாகத்தான் இருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. இந்தக் காலத்தில் யார் இவ்வளவு—தங்கள் பெருங்குணத்தைப்பற்றி என் சிநேகிதர்கள் வாயார எனக்குச் சொல்லி யிருக்கிறார்கள்; என் பெயர் நற்குண நாடார். நான் தஞ்சாவூர். ஒரு கேஸ் விஷயமாய் நான் இங்கு வந்திருக்கிறேன். இரண்டு மூன்றுமாதம் இங்கே இருக்க வேண்டும்போல் தோன்றுகிறது. அதற்குத் தாங்கள்தாம் எனக்கு ஒத்தாசை செய்யவேண்டும். ஏ அம்மா! என்ன இருமல் இது! இந்த ஊரில் எனக்கு வேண்டியவர் ஒருவருங் கிடையாது இந்த ஊரில் எனக்கு ஒன்றுமே தெரியாது. தங்கள் ஹோட்டலில் நான் சாப்பிடும்படி எனக்குத் தாங்கள் அனுமதி கொடுக்கவேண்டும்.

பாட்டியம்மாள்:—இருக்கிறவர்களை வைத்துக்கொண்டு சமாளிக்கவே என்னால் முடியவில்லை; வயதாய்விட்டதல்லவா? ஹோட்டலையே மூடிவிடலாமென்று நான் யோஜனை செய்துகொண்டிருக்கிறேன்.

நற்குண நாடார்:—ஒரே வார்த்தையில் இப்படி முடிவுசொல்லி விட்டால், நான் மறு ரயிலிலேயே தஞ்சாவூருக்குத் திரும்ப வேண்டியதுதான். ஹோட்டல் சாப்பாடு என்றால் முதலில் என் மனத்துக்கே ஏற்கிறதில்லை. மனமொத்துச் சாப்பிட்டாலும் ஹோட்டல் பதார்த்தங்களின் சுவை எனக்குப் பிடிக்கிறதேயில்லை. சுவையோடு சாப்பிடுகிறதா யிருந்தாலும் அவைகள் என் வயிற்றுக்கு ஒரு நிமிஷமேனும் ஒத்துக் கொள்ளுகிறதில்லை. அப்பா! என்ன இருமல்! இந்தப் பாழும் இருமல்! தங்களை நம்பித்தான் நானிங்கு வந்தேன். என்னுடைய சர்வ சொத்தையும் ஒரு துரோகி அபகரித்துக்கொண்டான். அவன் சௌக்கியமாய் இருக்கிறான். நான சந்தியில் நிற்கிறேன். இந்த ஊர் ஜில்லாக் கோர்ட்டில் அவன் மீது வியாஜ்ஜியம் போட்டிருக்கிறேன். அவனிடமிருந்து எனக்கு இருபதினாயிரம் ரூபாய் வரையில் வரவேண்டியிருக்கிறது. நான் ஏகாங்கி; எனக்கு ஒருவருங் கிடையாது. என்னுடைய கஷ்ட

காலத்தைக் கவனித்துத் தாங்கள் எனக்கு இப்பேருதவி செய்தால் தங்களுக்கு அளவில்லாத புண்ணியமுண்டு.

அவர் அப்படி வேண்டிக்கொண்டதும் பாட்டியம்மாள் அவருடைய ஸ்திதியைக் கவனித்து மனமிரங்கி, சாப்பாடு போடுவதாய் ஒப்புக்கொண்டதுந் தவிர, அவரிருப்பதற்குத் தம்முடைய வீட்டு மொட்டை மாடியில் ஒரு கொட்டகையும் போட்டுக் கொடுப்பதாகவுஞ் சொன்னாள். நற்குணநாடார் மிகவும் சந்தோஷப் பட்டுக் கொண்டு தம்முடைய சொக்காய்ப் பையிலிருந்து ரூ. 30 எடுத்து, சாப்பாட்டுக்கு முன்பணமாக ரூபாய் பதினைந்தும், கொட்டகை போடுவதற்கு ரூபாய் பதினைந்தும், பாட்டியம்மாளிடம் எண்ணிக் கொடுத்தார். அம்மாள் நிரம்பச் சந்தோஷப்பட்டுக்கொண்டு, அவருக்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாவற்றையுஞ் செய்வதாகவும், கொட்டகைபோடும் வரையில் அவர் ஹோட்டலிலேயே ஒரு அறையில் இருந்து கொள்ளலா மென்றும், சொன்னாள். அவர்கள் அப்படிப் பேசிக்கொண் டிருந்தபோது வெளியே போயிருந்த அற்புதஸாமி உடையார் உள்ளே நுழைந்து நற்குண நாடாரை உற்றுப் பார்த்தார். நடந்த விஷயத்தைப் பாட்டியம்மாள் அவரிடஞ் சுருக்கமாய்ச் சொன்னாள்.

அற்புதஸாமி உடையார்;—மாடியில் கொட்டகை போடுவதென்றால் சிலவு அதிகமாகுமே; மேலும் கொட்டகைபோடுவது அவ்வளவு சரியென்று எனக்குத் தோன்றவில்லை. சாப்பாடுமட்டில் இவர் இங்கே வைத்துக்கொண்டு, பாக்கி விஷயங்களுக்கு வேறு எங்கேயாவது ஏற்பாடு செய்துகொண்டால் சௌகரிய மாயிருக்கும்.

நற்குணநாடார் :—நான் தங்களுக்கு ஒரு விதத்திலும் இடைஞ்சலாயிருக்க மாட்டேன். அநேகமாய் நான் படுக்கைக்குத்தான் இங்கு வருவேன். ஏதோ தங்கள் புண்ணியத்தால் நான் இங்கே சாப்பிட்டுக்கொண்டு கோர்ட்டு வேலையைப் பார்த்துவிட்டு இரண்டொரு மாதங்களில் போய்விடுகிறேன் தாங்கள் தயவுசெய்து எனக்கு இடையூறு ஒன்றும் கொண்டுவராதேயுங்கள்.

அற்புதஸாமி உடையார்:—தங்கள் சௌகரியம்போல் செய்யுங்கள். அதைப்பற்றி எனக்கென்ன ! தங்கள் சௌகரியத்தை உத்தேசித்துத்தான் நான் இதையுஞ் சொன்னேன். வேறொன்றும் வித்தியாசமாய் நினைத்துக் கொள்ளாதேயுங்கள்.

அற்புதஸாமி உடையார் அப்படிச் சொல்லிவிட்டுத் தம்முடைய அறைக்குட் சென்று, வேண்டிய ஏதோ சிலசாமான்களை எடுத்துக் கொண்டு வெளியே சென்றார். அவர் வெளியே போனவுடன், “ பாவம்! நிரம்ப நல்ல மனிதன்; நாலைந்து வருஷங்களாக அவர் என் வீட்டில்தான் போஜனஞ் செய்து வருகிறார். படுக்கை முதலியவைகளையும் இங்குதான் வைத்துக்கொண்டிருக்கிறார். ஆறுமாதங்களுக்கு

முன்தான் பாக்கிப்பேர்கள் வந்தார்கள். அவருடைய சகோதரி பிள்ளையின் மூலமாய் அவருக்குக் கஷ்டம் ஏற்பட்டது. அது முதற் கொண்டு அவருடைய நடை உடை பாவனை எல்லாம் மாறிவிட்டன. ஏதோ பித்துக்கொண்டவர்போல் இருக்கிறார். சொந்தக் குழந்தையைப்போல் அவனை அவர் வளர்த்துவந்தார். துக்கம் அதிகமாய்த் தானேயிருக்கும். பாவம்!

நற்குண நாடார் :—ஏதாவது பெரிய கஷ்டம் வந்ததோ அவருக்கு! பையன் சொல்லிக் கொள்ளாமல் எங்கேனும் அக்கரைச் சீமைக்கு ஓடிவிட்டானோ ?

பாட்டியம்மாள்:—அப்படியிருந்தால்தான் எவ்வளவோ நலமாயிற்றே ! அவனை யாரோ கொலை செய்துவிட்டார்கள்.

நற்குண நாடார் :—கொலையா ! என்ன சொன்னீர்கள் ? கொலையா செய்யப்பட்டான் ?

பாட்டியம்மாள் :—ஆமாம். கொலைதான் செய்யப்பட்டான். பையனுவது பையன் ! பதினெட்டுவயதுக்காளை ! என்ன புத்திசாலி! என்ன பெருங்குணம்! ஆச்சு ; ஏறக்குறைய பத்துமாதமுமாச்சு அவனிறந்து இப்போது ; சென்னைப் பட்டணத்தில் படித்துக்கொண்டிருந்தான். அவனுடைய மாமனிடத்தில் அவனுக்கு தேவதா விசுவாசமுண்டு. ஆகையால் மாதத்துக்கு ஒரு முறை அவனிங்கு வருவது வழக்கம் ; ஒவ்வொரு சமயத்தில் நாலைந்து நாட்கள்கூட அவருடன் அவன் இங்கு தங்கிவிடுவான். இந்தக் கஷ்டத்தால் அவருக்கு ஏக்கம் பிடித்துவிட்டது.

நற்குண நாடார் :—அவ்வளவு சிறிய பையனிடம் எவனுக்குத்தான் அவ்வளவு துவேஷமிருக்கக்கூடும் ? ஆச்சரியமாயிருக்கிறதே! அவனை யார் கொன்றார்களாம் ?

பாட்டியம்மாள் :—அதுதான் ஏற்படவில்லை ; நவமணியென்ற மற்றொரு சிறுவன் கொன்றதாக அற்புதஸாமி உடையார் மனப்பூர்வமாய் நினைக்கிறார். இந்த நவமணிக்கும் வயது பதினெட்டுத்தான் இருக்கும். அவனும் நல்ல பையன்தான். ஏதோ மனஸ்தாபத்தால் அவன் கொன்றுவிட்டதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அதன் உண்மை கடவுளுக்குத்தான் தெரியும்.

நற்குணநாடார் :—நெருப்பில்லாமல் புகை கிளம்புமா ! இது என்ன அற்பவிஷயமா ! கொலைபாதகம் என்ற குற்றத்தை ஒருவர் மேல் அபாண்டமாய்ச் சுமத்துவது எளிதா ? அப்படிச்சுமத்த யார் தாம் துணிவார்கள்? அற்புதஸாமி உடையார் சாமானிய மனிதராய்த் தோன்றவில்லையே. நல்ல புத்திமான்போலிருக்கிறதே ! தீர்க்கமாய் யோஜனை செய்யாமல் இவ்விதம் அபிப்பிராயப் படுவாரா ? தகுந்த சாக்ஷியங்களால் ருசுப்படுத்த முடியாதென்று தோன்றினல் அதை

இப்படி வெளியிடுவாரா? தகுந்த சாக்ஷியங்கள் இருக்கக்கொண்டு தான் இப்படி அபிப்பிராயப்படுகிறார்.

பாட்டியம்மாள் :—அதென்னவோ? அது ஏற்பட்டதுமுதல் அவருக்கு ஒருவிதமான பிரமம் ஏற்பட்டிருக்கிறது. சரிவர ஆகாரம் நித்திரை ஒன்றும் அவருக்கு இப்போது கிடையாது. ஆகையால் அவரைப்பற்றி எனக்கு அதிகக் கவலையாயிருக்கிறது.

நற்குண நாடார்:—அந்தப் பையனுக்கு ஏதாவது சொத்திருந்ததோ?

பாட்டியம்மாள் :—ஏதாவது சொத்தா! அவன் ஒரு பெரிய மிட்டேதாரின் பிள்ளை. காசு என்பது அவனுக்குத் திரணமாத்திரம். தவிர, அந்த முத்துக்குமரன் ஒரு பெரிய ஜமீன்தாரின் மகளை விவாகஞ் செய்து கொள்வதாக ஒரு ஏற்பாடு இருந்தது. ஆகவே, அவர்களிருவருடைய ஆஸ்தியையும் சேர்த்தால் இந்த ஜில்லாவையே விலைக்கு வாங்கிவிடலாம்.

நற்குண நாடார் :— அற்புதஸாமி உடையாருக்கு இன்னும் விவாகம் ஆகவில்லையோ? வயதாய்விட்டதுபோ லிருக்கிறதே!

பாட்டியம்மாள் :—ஏதோ அமிர்தம் என்ற ஒரு பெண்ணை அவர் விவாகஞ் செய்துகொள்ளப் போகிறதாக முன்னே ஒரு பிரஸ்தாபமிருந்தது. இப்போது அதைப்பற்றி ஒன்றும் காதிற் படவில்லை. அவருக்கு என்ன அப்படி வயதாகிவிட்டது! முப்பது தானிருக்கும். அது ஒரு வயதா என்ன?

நற்குண நாடார் :—எந்த ஊர்ப் பெண்ணோ?

பாட்டியம்மாள் :— பத்தாய்க் கடைச்சந்தில் யாரோ ஒரு பெண்ணாம். அதை யார் கண்டார்கள்? இதென்ன இப்படிப் பேசிக்கொண் டிருந்துவிட்டேன். நாழிகை ஆகிவிட்டதே!

பாட்டியம்மாள் அப்படிச் சொல்லிவிட்டு எழுந்திருக்க நற்குண நாடாரும் உடனே எழுந்து மாதாக் கோயிலுக்கு மெதுவாய்ச் சென்றார்.

—o—

பதினெட்டாவது அத்தியாயம்

கோஷா ஸ்திரீ

சத்தியத்தை வெல்லா தசத்தியந்தான் ; நீள் பொறையை
மெத்திய கோபமது வெல்லாது ;—பக்திமிகு
புண்ணியத்தைப் பாவமது வெல்லாது ; போரரக்கர்
கண்ணனைத்தான் வெல்லுவரோ காண்.''—நீதிவெண்பா.

"நற்குணநாடாரைப் போல் நல்லவர் பூமியிலே கிடையாது. தங்கமானவர்," என்று அவர் வந்து நான்குநாட்களுக் குள்ளாகப் பாட்டியம்மாள் மனப்பூர்வமாய் எல்லோரிடமும் சொல்ல ஆரம்பித்தாள். ஹோட்டலிலிருந்த யாவரும், அற்புதஸாமி உடையாரும் அவரிடம் பிரியம் பாராட்டிவந்தார்கள். இருமல் வியாதியால் அவர் வாய் ஓயாமல் அடிக்கடி இருமுவார். அதைப்பார்த்து எல்லோரும் வருத்தப்பட்டார்கள். மொட்டை மச்சில் கொட்டகை போட்டும் அது நற்குண நாடாருக்குப் பிரயோஜனப்படவில்லை. கொட்டகையி லிருந்தபடியால் பனி தாக்கி அவருக்கு இருமல் அதிகரித்தது. அதைக் கவனித்துப் பாட்டியம்மாளும், ஹோட்டலிலிருந்தவர்களும் ஏகோபித்து அற்புதஸாமி உடையாரை வேண்டிக்கொண்டதின் பேரில், அற்புதஸாமி உடையார் தம்முடைய அறையைக் காலிசெய்து நற்குண நாடாருக்குக் கொடுத்துவிட்டுத் தாம் கொட்டகைக்குப் போனார். அதுவிஷயமாய் நற்குண நாடாருக்கு அற்புதஸாமி உடையாரிடம் அதிக விசுவாஸ முண்டாயிற்று. "இவ்வளவு தங்கமானவருக்கு இவ்வித கஷ்டம் வரலாமா?" என்று அற்புதஸாமி உடையாரைக் குறித்து எல்லோரிடமும் நற்குண நாடார் சொல்லுவார். ஒருநாள் சாயந்திரம் நான்குமணி சுமாருக்கு ஹோட்டலிலுள்ள யாவரும் வெளியே போயிருந்தபோது நற்குண நாடார் வாய் ஓயாமல் இருமிக்கொண்டு தம்முடைய அறையில் உட்கார்ந்துகொண் டிருந்தார். பாட்டியம்மாள் மிக்க பரிதாபத்துடன் சிற்றறத்தைத் துண்டொன்றை அவரிடங் கொண்டு போய்க் கொடுத்து " என்ன இப்படி இருமுகிறது ? என்ன கஷ்டம் இது ! இதையாவது வாயில் அடக்கிக்கொண்டு பாருங்கள்! என்ன உபத்திரவம் இது !" என்று சொல்லி வருத்தப்பட்டாள்.

நற்குண நாடார் :—தங்கள் குணமே குணம். இப்போது எனக்கு ஒன்று தோன்றுகிறது. என்னவென்றால், தஞ்சாவூரிலுள்ள என்னுடைய வீட்டை விற்றுவிட்டுத் தங்கள் வீட்டிலேயே என் ஆயுள்பரியந்தம் இருக்கலாமென்பதுதான். ஏ அப்பா ! என்ன இருமல் !

பாட்டியம்மாள் :—தங்களிஷ்டப்படியே செய்யுங்கள். எனக்கு அதில் மிக்கச் சந்தோஷந்தான். என் அந்தியகாலத்தில் என் அருகில் இருந்து எனக்கு ஒத்தாசையா யிருப்பீர்கள்.

நற்குண நாடார்:—அதுதான் சந்தேகம். தாங்கள்தாம் எனக்கு ஒத்தாசையா யிருப்பீர்கள். ஒரு விசேஷம் சொல்ல மறந்துவிட்டேனே! நமது அற்புதஸாமி உடையாராவது! என்ன பாட்டுப் பாடுகிறார்! என்ன சாரீரம்! அவர் குரலுக்கும் பெட்டிவாத்தியத்துக்கும் வித்தியாசமே தெரியவில்லையே! அவர் இவ்வளவு புத்திமானென்று நான் நினைக்கவேயில்லை. இங்கு வந்தால்தான் அவர் ஒரு விதமாய் இருக்கிறார். ஒரு விதமென்ன! தாங்கள் நினைக்கிறது போலவே சித்தப் பிரமம் கொண்டவர் போல்தாம் இருக்கிறார். மேலும் அவர் அவருடைய அறைக்குள் இருந்துவிட்டு வெளியே வரும்போது கண்கள் பஞ்சடைந்துபோய் தடுமாறிக்கொண்டு வருகிறார். என்ன விஷயமோ தெரியவில்லை!

பாட்டியம்மாள் :—விஷயமென்ன! அவரிடத்தில் இரண்டு கெட்ட வழக்கங்கள் இருக்கின்றன. அவைகளை ஒழிக்கவேண்டுமென்று அவரும் தம்மாலியன்றமட்டும் பிரயத்தனப் படுகிறார். பாவம், முடியவில்லை! கஞ்சா சதுரங்கம் இரண்டிலும் அவருக்குப் பைத்தியம். இளம் பிராயத்தில் துர்வழக்கங்களை அப்பியாசித்துவிட்டுப் பிறகு விடுவதென்றால் எளிதாயிருக்கிறதா?

நற்குண நாடார் :—அப்படியா? சரிதான். நாழிகை யாகிவிட்டது. மாதாக் கோயிலுக்குப் போய்வருகிறேன்.

* * *

நற்குண நாடார் மாதாக்கோயிலுக்குப்போய் வெளிவாசற் படிக்குச் சமீபத்தில் ஒரு பெஞ்சியில் ஒதுக்குப்புறமாக உட்கார்ந்தார். அவர் உட்கார்ந்து இரண்டொரு நிமிஷத்துக்குப் பிறகு, கோஷா ஸ்திரீயைப்போல் ஆடை யணிந்துகொண் டிருந்த ஒரு ஸ்திரீ அவரது வலது பக்கத்திலிருந்த பெஞ்சியில் தனிமையாக உட்கார்ந்தாள். கிறிஸ்துவ ஜாதியில் கோஷா வழக்கம் கிடையாதானபடியாலும், அவள் எல்லோருடனும் சேர்ந்து உட்காராமல் ஒதுக்குப் புறத்திலுட்கார்ந்த படியாலும், நற்குண நாடார் வேறொன்றையும் கவனிக்காமல் அவளையே உற்றுப்பார்க்கத் தொடங்கினார். அவர் பெரிய வம்புக்காரராதலால் கடவுளைக்கூடத் தியானிக்காமல், வம்பையே பிரதானமாகக் கருதி, “இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது! நம்ம ஜாதியில்கூட கோஷா வழக்கம் உண்டா என்ன? இதென்ன புதுமை! இவள் எதற்காகத் தனியே உட்கார வேண்டும்?” என்று மனத்தில் பலவாறு யோஜித்துக்கொண்டிருந்தார். ஆனால் அற்புதஸாமி உடையார் வெகு நன்றாகப் பாடிக்கொண் டிருந்தபடியால், அவர் அதிலும் கொஞ்சம் புத்தியைச் செலுத்தினார். நாடார் தம்முடைய

புத்தியையும், கண்களையும் மாற்றி மாற்றி அற்புதஸாமி உடையா
ரிடத்திலும், அந்த கோஷாஸ்திரீ யிடத்திலும் செலுத்திக் கொண்
டிருந்தபடியால், தம்மைப் போலவே அவளும் கண்கொட்டாமல்
அற்புதஸாமி உடையாரையே பார்த்துக்கொண்டிருந்ததைக் கவனித்
தார். பூஜை முடிந்தவுடன், அவள் வெகு பரபரப்பாய் எழுந்திருந்து,
தான் அங்குவந்தது ஒருவருக்கும் தெரியக்கூடாதென்ற எண்ணங்
கொண்டவள்போல் வெளியே செல்ல யத்தனித்தாள். அப்போது
அவளுடைய கெட்ட காலத்தால், அவளுடைய கோஷாத்துணியின்
நுனி நற்குணநாடாரின் காலில் மாட்டிக்கொண்டு, அவள் தடுக்கிக்
கீழேவிழ இருந்தாள். "இழவு! வயதானால் இப்படித்தான்! கால் கை
கள்கூடச் சொன்னபடி கேட்கிறதில்லை; அம்மா! துணி கிழிந்துவிட்
டதோ? நீ கீழே விழாமல் இருந்தது நல்ல காலந்தான்" என்று
மிகுந்த வருத்தத்துடன் நற்குண நாடார் அவளிடஞ் சொன்னார்.
அப்படி அவர் துக்கிப்பதைப்பார்த்து, அவள் "அதெல்லாம் ஒன்று
மில்லை, தாதா! வருத்தப்படாதேயுங்கள்" என்று அவளிடஞ்சொல்லி
விட்டுப் புறப்பட யத்தனிக்கையில், நற்குண நாடார்—சாதாரண
மானவரா! பெரிய வம்புக்காரராச்சே, பேசுவதற்கு யாராவது
ஒருவர் அகப்பட்டு விட்டால், சாப்பாட்டைக்கூட இலக்ஷியஞ்
செய்யமாட்டாரே! அப்படியிருக்க அந்த ஸ்திரீயை எளிதில் விட்டு
விடுவாரா?—வழியின் குறுக்கே நின்றுகொண்டு, "நான் செய்
தது நிரம்ப மௌட்டியத்தனம்; அதைப்பற்றி எனக்கு மிகவும்
வருத்தமாயிருக்கிறது. நான் என் செய்வேன்! துணி கிழிந்து
விட்டதே! இந்த ஊருக்கு நீ புதிதுபோல் தோன்றுகிறதே! நான்
கூட இந்த ஊருக்குப் புதிதுதான். நான் இந்த ஊருக்கு வந்து
ஏழெட்டு நாட்கள்தாம் ஆகின்றன; கேட்டாயா அம்மா! அவர்
பாடின பாட்டை! பாட்டென்றால் எல்லாம் பாட்டாகுமா? பாக்கிப்
பாட்டெல்லாம் சாப்பாடுதான். உடையாரவாள் பாட்டே பாட்டு.
இந்த மாதிரிப் பாட்டு நான் என் ஜன்மத்திலும் கேட்டது கிடை
யாது" என்று அவளிடஞ்சொன்னார். "நன்றாய்த்தான் பாடுகிறார்"
என்று அவள் தன்னுடைய முகத்தைச் சுளித்துக்கொண்டு பதிற்
சொல்லிவிட்டுத் தன்வழியே செல்ல யத்தனித்தாள். அவள் எந்த
ஊரென்று தெரிந்துகொள்ளும்பொருட்டு, நற்குணநாடார் அவளுக்
குச் சமீபத்தில் போய், "என்னம்மா! அவருடைய பாட்டின் மகி
மையை இரண்டு வார்த்தைகளில் அடக்கிவிட்டாய்?" என்று பின்
னும் கேட்டார். அப்போது அவளுடைய தேகம் பதறிக்கொண்
டிருந்தது. "தாதா! வழியில் நின்றுகொண்டு என்ன இப்படித் தர்க்
கம் செய்கிறீர்? நாழிகை யாகிவிட்டது; நான் போகவேண்டும்; வழி
யை விடும்" என்று அவரிடஞ் சொல்ல, நற்குண நாடார் வழியை
விட்டு நகர்ந்தார். அந்த ஸ்திரீயும் சரேலென வெளியே சென்றாள்.
ஆனால் அவள் மாதாக்கோயிலைவிட்டு வெளியே சென்று பத்தடி

தூரம்போவதற்குள் அவர் "அம்மா! அம்மா! இந்தக் கைக்குட்டை உன்னுடையதுதானா? இதோபார்!" என்று கூக்குரலிட்டுக்கொண்டு அவளுக்குப் பின்னாலேயே ஓடினார். அந்த ஸ்திரீ நின்று அதைப் பெற்றுக்கொண்டு "தாதா! இதற்காக நீங்கள் இவ்வளவுதூரம் சிரமமெடுத்துக்கொண் டிருக்கவே வேண்டாம்," என்று அவரிடஞ் சொன்னாள். அப்போது நற்குண நாடார் "உடையாரை உனக்கு நன்றாகத் தெரியும்போ லிருக்கிறதே! உன் பெயர் அமிருதந் தானே" என்று அவளைக் கேட்க, அவள் "அதெல்லாம் உமக் கென்ன தாதா? அவரை எனக்கு உபாயமாய்த் தெரியும்" என்று சொல்லிக் கொண்டே முன்பின் பார்க்காமல் ஓட்டமும் நடையுமாகத் தன்னிருப்பிடத்தை நோக்கிச் சென்றாள்.

———o———

பத்தோன்பதாவது அத்தியாயம்

பாழ் அடைந்த கிணறு

"வஞ்சித் தொழுகு மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்!—வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு."—நீதிநெறிவிளக்கம்.

திரிசிரபுரத்து மாதாக்கோயிலைச் சேர்ந்த மேரி பள்ளிக்கூடத்தில் சாயந்திரம் மணி ஏழுக்குச் சாப்பாடு மணி அடிக்கப்பட்டது. அந்நேரத்தில் சுமார் இருபதுவயதுள்ள ஒரு பெண்மணி வாய்க்காலைத் தாண்டி அப்பாலுள்ள கழனிகளையும், வயல்களையுங் கடந்து, சொக்கட்டான் திடலுக்குப் போய்ச் சேர்ந்தாள். அங்கு வெகு ஜாக்கிரதையாக நாலாபக்கமும் கண்ணுக்கு எட்டினவரையில் சுற்றிப் பார்த்துவிட்டு, அந்தத் திடலில் இருந்த ஒரு பாழுங் கிணற்றை உற்றுப்பார்த்தாள். அவள் அந்நிலைமையில் இருந்த போது, அவளுக்குப் பின்னால் ஏதோ காலடிச் சப்தம் அவளது செவிக்கு எட்ட அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். பத்தடிக்கு அப்பால் ஒருவர் அத்திடலையே நோக்கி வந்துகொண்டிருந்ததாக அவளுக்குத் தெரிந்தது. ஒன்றுந் தோன்றாமல் அவள் திகைத்து நின்றாள். அவள் திரும்பிப் பார்த்தவுடன், வந்துகொண்டிருந்தவர் கொஞ்சநேரம் அங்கேயே நின்றுவிட்டு, பிறகு வேகமாய் வந்து அவளை யணுகி, "யாரம்மா நீ? இந்நேரத்தில் இங்குவந்து நிற்கிறாய்?" என்று அவளைக்கேட்டார். அவர் சுமார் முப்பது வயதுள்ள ஒரு பிராமணன். அவர் கொஞ்சநேரம் பதிலொன்றுஞ் சொல்

லாமலிருந்து பிறகு "ஸ்டேஷனுக்குப் போகவேண்டும்; வழி தெரியவில்லை" என்றாள். அவர் "சரிதான், நான் நினைத்தது போலத்தானிருக்கிறது. வழிதானே தெரியவில்லை ? இப்படியே இந்த வாய்க்கால் வழியாகக் கிழக்குமுகமாகப் போனால் அங்கு ஒருவாய்க்கால் இருக்கும். அதில் ஆழங்கிடையாது. அதைத் தாண்டிப் போனால் புலிவார்ட் ரோடு இருக்கிறது. அதுதான் வழி! அதோ பார்!" என்று கையால் சுட்டிக் காட்டிவிட்டு, அவள் கொஞ்ச தூரம் போனபிறகு "இப்பொழுது கிணற்றை அவள் ஏன் உற்றுப் பார்க்கவேண்டும்? தவிர, இந்த இருட்டுவேளையில் அந்தஸ்துள்ள ஒரு பெண் ஏன் இதைப் பார்க்க வரவேண்டும்?" என்று நினைத்து, "எதற்கும் நாமும் அதைப் பார்க்கலாமே" என்று தீர்மானங் கொண்டு அக்கிணற்றை உற்றுப் பார்த்தார். அக்கிணற்றின் நாலா பக்கங்களிலும் ஆலமரங்க ளிருந்தபடியால், அக்கிணற்றில் காய்ந்த இலைகள் நிரம்பிக்கிடந்தன. கிணற்றில் ஜலமிருக்குமோ வென்று சந்தேகித்து அவர் ஒரு பெரிய செங்கல்லை அதில் போட்டார். பிறகு தண்ணீர் இல்லையென்பதை நிச்சயித்துக்கொண்டு அவர் அதில் ஜாக்கிரதையாய் இறங்கி ஒரு குச்சியால் காய்ந்த இலைகளைக் கிளறினார். அதில் அழுக்கடைந்த ஒரு கைக்குட்டை கிடந்தது. அதன் ஓரத்தில் சிவப்பு மையால் "அமிர்தம்" என்று எழுதப்பட்டிருந்தது. அவர் அதைத் தம்முடைய ஷர்ட்டின் ஜேபியில் ஜாக்கிரதையாய் வைத்துக் கொண்டு, இலைகளைப் பின்னும் நன்றாய்க் கிளறிப் பரிசோதித்தார். இருட்டி விட்டபடியால் பரிசோதிக்க முடியாதென்று வருத்தப்பட்டுக்கொண்டு வெளியே வந்து, சின்னக்கடைத் தெருவிலிருந்த தம் இருப்பிடத்துக்கு வேகமாய்ச் சென்றார். மிட்டாய்க் கடைச் சந்தில் பத்தாவது நம்பர் வீடாகிய தம்பிருப்பிடத்து வாசற்படியில் ஒரு தந்திச் சேவகன் நின்று கொண்டு, அவரைப் பார்த்து "ஸார்! தாங்கள்தாமே இந்த வீட்டில் இருக்கிறீர்கள்? இது பத்தாவது நம்பர் வீடுதானே? இதில் இராமஸ்வாமி ஐயர் என்று யாராவது இருக்கிறார்களோ?" என்று அவரை விஜாரித்தான். "இராமஸ்வாமி ஐயரா? ஆம், நான்தான் அவர். என்ன விசேஷம்?" என்று இராமஸ்வாமி ஐயர் பதிலளிக்க, அவன் அவரிடம் ஒரு தந்தியைக் கொடுத்துவிட்டுப் போனான். இராமஸ்வாமி ஐயர் தம் வீட்டினுள் நுழைந்து, அதைப் படித்துப் பார்த்துவிட்டு ஏதோ தமக்கு வேண்டிய சில சாமான்களை எடுத்துக் கொண்டு வெகு வேகமாய்த் திருச்சிக் கோட்டைஸ்டேஷனை நோக்கிச் சென்றார்.

———o———

இருபதாவது அத்தியாயம்

நீர்ப் பிசாசங்கள்

*"கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅ மைவல்லதே யொற்று."—திருக்குறள்.*

இராமஸ்வாமி ஐயர் ஸ்டேஷன் வளவுக்குள் நுழைந்துகொண்டிருக்கையில் "ஓராள்! ஓராள்! ஓராள்! புதுக்கோட்டைச்கு ஓராள்!" என்று மோட்டார் வண்டிக்காரன் ஒருவன் கூச்சலிட்டுக் கொண்டிருந்தான். இராமஸ்வாமி ஐயர் அவ்வண்டிக்குச் சமீபத்தில் போனவுடன் "ஸாமி! புதுக்கோட்டைக்கு ஸ்பெஷல் போகிறது" என்று வண்டிக்காரன் அவரிடம் சொன்னான். இராமஸ்வாமி ஐயர் நகைத்துக்கொண்டு வண்டியை நிமிர்ந்துபார்த்து "ஆமாப்பா! ஸ்பெஷல் வேகமாய்த்தான் போகும். எனக்கும் புதுக்கோட்டைக்குத்தான் போவேண்டும். இப்போதே நாழிகை அதிகமாய் விட்டதே என்றுதான் மயங்குகிறேன். இந்நேரங்கழித்துக்கூடப் புதுக்கோட்டைக்கு வண்டிவிடுவது உண்டா என்ன? புதுக்கோட்டை ரோடு மார்க்கம் கொள்ளைக்காராது சமஸ்தானமாயிற்றே யென்று பயப்படுகிறேன்" என்று சொன்னார். "இந்நேரங்கழித்து விடுவது வழக்க மில்லையென்று தாங்கள் சொல்வது உண்மைதான். இந்நேரத்துக்கு விடுவது இன்று ஸ்பெஷலாகத்தான். ஆனால் தங்களுக்கு அணுவளவு பயமும் வேண்டாம். நடுநிசியில் போனாலும் பயம் கிடையாது. ஏனெனில், இதோ உட்கார்ந்திருக்கும் போலீஸ்காரர்களுக்காகவே நான் இப்போது ஸ்பெஷல் விடுகிறேன். நான்கு பேர்களும் கத்தி துப்பாக்கியுடன் இருக்கிறார்கள். தங்களுக்குக் கொஞ்சமேனும் பயம் வேண்டாம். ஏறி உட்காருங்கள்; சீக்கிரம் போகலாம்" என்று அவன் அவரிடஞ் சொன்னான். அப்போதுதான் தஞ்சாவூர் ஷடில் ஸ்டேஷனில் வந்து நின்றது. "இந்த ரயிலில் என் சிநேகித ரொருவர் தஞ்சாவூரி லிருந்து வருகிறார். அவரைப் பார்த்துவிட்டு ஐந்து நிமிஷத்தில் நான் வந்து விடுகிறேன். தயவு செய்து சற்று இரு" என்று இராமஸ்வாமி ஐயர் அவனிடம் கேட்டுக்கொண்டு ஸ்டேஷனுக்குட் சென்று, தாம் எதிர்பார்த்த சிநேகிதரைக் கண்டு, மூன்றும் வகுப்புப் பிரயாணிகளுக்கு ஏற்பட்ட கட்டிடத்தில் ஆட்டு மந்தையை யொத்த ஜனங்களுக் கிடையேபோய் ஓரிடத்தில் நின்றுகொண்டு அவருடன் பேச ஆரம்பித்தார்.

* * * *

ஐந்து நிமிஷத்தில் திரும்பி வருவதாகச் சொல்லிப் போன இராமஸ்வாமி ஐயருக்காக மோட்டார் வண்டிக்காரன் ஐம்மூன்று

பதினைந்து நிமிஷம் காத்துப்பார்த்தான். அவஸரவேலையாகப்போக வேண்டியிருந்த போலீஸ்காரர்கள் அவனை மிரட்ட ஆரம்பித்தார்கள். பணம் நஷ்டமாய்ப் போகிறதேயென்று வருந்திய வண்டிக்காரன் பின்னுங் கொஞ்ச நேரம் காத்துக்கொண்டிருக்க யத்தனித்தான். நல்ல வேளையாய் அந்தச் சமயத்தில் வயதுசென்ற ஒரு கிழவர் வண்டிச்சருகில் போய் "மோட்டார் எங்கு போகிறது?" என்று கேட்டார். மோட்டார் வண்டிக்காரன் புதுக்கோட்டைக்கு ஸ்பெஷலாகப் போகிறதென்றும், ஒரு ஆள் தேவையென்றுஞ் சொன்னவுடன், கிழவர் பணத்தைக் கொடுத்து டிக்கெட் வாங்கிக் கொண்டு வண்டியிலேறித் தம்முடைய இனத்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்துவப் பெண்மணியின் பக்கத்தில் உட்கார்ந்தார். அவ்விதம் ஆரோக்கியஸாமி உடையார் உட்கார்ந்தவுடன் மோட்டார் வண்டி புறப்பட்டது. ஆரோக்கியஸாமி உடையார் அப்பெண்மணியினிடம் பேச ஆரம்பித்தார்.

ஆரோக்கியஸாமி உடையார் :—என்ன அம்மா! இந்நேரத்தில் புறப்பட்டாய் புதுக்கோட்டைக்கு? காலையில் போகக் கூடாதோ? உன்னைப் போன்ற தகுந்த பெண்மணிகள் இந்த இரவில் தனியே செல்லலாமோ?

பெண்மணி :—அவஸரக் காரியம் ஒன்று ஏற்பட்டது. என்ன பண்ணுகிறது!

ஆரோக்கியஸாமி உடையார்:— புதுக்கோட்டை ரோடு அவ்வளவு பந்தோபஸ்து இல்லாத படியால் சொன்னேன். வேறொன்றுமில்லை. தேர்த் திருவிழாப் பார்த்து விட்டுத் திரும்பி வருகிறாயோ? இந்துக்களின் தேர்கூட இவ்வளவு அற்புதமாயிராது. என்ன விமரிசை! என்ன வாண வேடிக்கை! என்ன அற்புதம்! "அற்புதம்" என்றவுடனல்லவா எனக்கு ஞாபகம் வருகிறது. அந்த அற்புதஸாமி உடையார்தாம் என்ன அற்புதமாய்ப் பாடினார்! முகத்தை ஏன் இப்படி வைத்துக்கொள்ளுகிறாய்? அவர் பாடினது உனக்கு இனிமையாக இல்லையா என்ன? ஆனால் அது போகட்டும். இவ்வளவு விமரிசையாய் உற்சவம் கொண்டாடப் படுகிறதை நான் எங்கும் இதுவரை பார்த்ததே யில்லை. கோயிலாவது கோயில்! சாமானியமா யிருக்கிறதா! பிரும்மாண்டமாயல்லவோ இருக்கிறது. இவ்வளவு பெரிதாக இருக்கிறது போதாதென்று கோயிலுக்குப் பின்பாகத்தில் இருக்கும் நஞ்சை நிலங்களிற் பத்துக்காணி விஸ்தீரண பூமியை விலைக்கு வாங்கி இருக்கிறார்களாம்.

பெண்மணி:—பத்துக்காணி விஸ்தீரணம் என்றால் சொக்கட்டான் திடலைக்கூட வாங்கி யிருப்பார்களோ?

ஆரோக்கியஸாமி உடையார்:—அதைத்தானே நான் இப்போது சொல்ல இருந்தேன். திடல் உள்படத்தான் வாங்கியிருக்கிறார்களாம்.

அதில் ஒரு பாழுங் கிணறிருக்கிறது. அது பழைய காலத்துக் கிணறு; எனக்குக் கிட்டத்தட்ட இப்போது ஐம்பதுவயதாச்சு. நான் சிறு பிள்ளையா யிருக்கையில் அந்தக் கிணற்றுக்குப் பக்கத்தில் ஒரு நாகமரமிருக்கும். அதிலிருந்து பழம் கணக்கில்லாமல் அந்தக் கிணற்றில் விழுந்து கிடக்கும்; என்னைப்போன்ற சிறு பிள்ளைகள் எல்லோரும் அதில் இறங்கிப் பழத்தை யெடுத்துத் தின்பது வழக்கம். அக் காலத்தில் ஒரு நாள் அக்கிணற்றில் துர் நாற்றம் கிளம்பிற்று. அது செத்தைகள் விழுந்த துர் நாற்றத்தைப்போலிராமல், பிணம் அழுகிய நாற்றத்தை ஒத்திருந்தது. இந்தச் சமாசாரம் போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரியவர, அவர்கள் கிணற்றைப் பரிசோதித்துப் பார்த்தார்கள். அதில் அழுகிய பிணமொன்று கிடந்தது. அவர்கள் தங்களாலியன்றமட்டும் விஜாரணை செய்தும், துப்பு ஒன்று மகப்படவில்லை. அதுமுதற்கொண்டு அக்கிணற்றண்டை ஒருவருமே போவது கிடையாது. ஏனென்றால், அதில் நீர்ப் பிசாசுகள் அலறுகின்றனவாம். இந்தக் காலத்தில்கூடப் பேய் பிசாசங்களில் நம்பி யிருக்கிறார்களே! என்ன முட்டாள்தனம்! பேய் பிசாசங்களைப் பார்க்கவேண்டுமென்று எனக்கும் வெகு நாட்களாய் ஆசையா யிருக்கிறது; அதற்குச் சமயம் இன்னும் வாய்க்கவில்லை. இரவில் அக்கிணற்றண்டை போனால் பார்க்கலாமென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். ஒரு நாள் இரவு அங்கு போகலாமென்று நான் நினைத்திருக்கிறேன். ஏன், அம்மா! இப்படி நடுங்குகிறாய்? உனக்குக்கூடப் பயமாக இருக்கிறதா என்ன?

பெண்மணி—தாதா! அந்தக்கிணற்றுப் பேச்சு இனி வேண்டாம். அதைப்பற்றி எனக்கும் பயந்தான்.

ஆரோக்கியஸாமி உடையார்:—என்ன ஆச்சரியம்!—ஆச்சரியமென்ன? மேரியா மர்ட்டனுக்கே அதுவிஷயமாய்ப் பயமிருக்கிறதென்றால் உனக்கு இருக்கிறதில் என்ன ஆச்சரியம்? அக்காலத்தில் அகப்பட்டதைத் தவிர பிறகு அதில் வேறு ஏதாவது அகப்பட்டதோ? அதைப்பற்றிப் பயப்படுகிறாயோ? ஆகா! என்ன அற்புதம்! அந்த அற்புதஸாமி உடையார் தாம் என்ன பாட்டுப் பாடினார்! இதென்ன இப்படிப் பயப்படுகிறாய் அவரைப்பற்றிப் பேசினால்! உனக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்? எப்போதாவது அவர் உன்னைத் தொந்தரவு செய்தாரோ? ஆம்; இப்போதுதான் ஞாபகம் வருகிறது. உன் பெயர் அமிர்தந்தானே? சரிதான், சரிதான். சில நாட்களுக்குமுன், நீ அவரை விவாகஞ் செய்து கொள்வதாக இருந்தாயல்லவா? அது கிடக்கட்டும். இதுவிஷயம் உனக்குத்தான் தெரியும். இந்த அற்புதஸாமி உடையாருக்கும் முத்துக்குமாரனுக்கும் என்ன பாந்தவியம்?

அமிருதம் :—தாதா! இந்தப் பேச்சுத்தான் எனக்கு வேண்டாமென்று சொன்னேனே. நிறுத்துமே.

ஆரோக்கியஸாமி உடையார் :—இனி அதைப்பற்றி ஒரு சமாசாரந்தான் பாக்கி; அந்தக் கிணற்றில் முத்துக்குமாரனுடைய பிரேதம் அலறுகிறதாமே !

ஆரோக்கியஸாமி உடையார், "முத்துக்குமரனுடைய பிரேதம்" என்று சொல்லி வாய்மூடுமுன், அமிருதம் மூர்ச்சித்துக் குப்புறச் சாய்ந்தாள். பிறகு பத்து நிமிஷத்தில் மோட்டார் வண்டி புதுக்கோட்டைக்குப் போய்ச் சேர்ந்தது. ஆரோக்கியஸாமி உடையார் அமிருதத்துக்குச் சயித்திய உபசாரம் செய்து, மூர்ச்சை தெளிவித்து, அவளைக் கீழே இறக்கிவிட்டு, "எந்தத் தெருவுக்கு அம்மா போகவேண்டும்? வண்டி அமர்த்தட்டுமா?" என்று அவளைக் கேட்டார். அதற்கு, "அரண்மனைக்காரத் தெருவுக்குத்தான் போகவேண்டும்; அது பக்கத்துத் தெருவுதானே: ஆகையால் வண்டி வேண்டாம்" என்று சொல்லிவிட்டு, அவரிடம் வேறொன்றுஞ் சொல்லாமல், அவள் வேகமாய்ச் செல்லத் தொடங்கினாள். அப்போது அற்புதஸாமி உடையார், "நானும் அந்தத் தெருவுக்குத்தான் அம்மா வரவேண்டும்; உனக்குத் துணையாக நானும் உன்கூட வருகிறேனே. அதில் உனக்கு ஆக்ஷேபணை ஒன்றுமில்லையே?" என்று அவளைக் கேட்டார்.

அமிருதம் :—நீங்கள் என்ன வேண்டுமென்றாலும் செய்யுங்கள் தாதா !

அமிருதம் அப்படிச் சொன்னவுடன் ஆரோக்கியஸாமி உடையார், அமிருதத்துக்குத் துணையாகப் போய், அவள் 54-ம் நெம்பர் வீட்டில் நுழைந்தவுடன், தம்வழியே சென்றார்.

—o—

இருபத்தோராவது அத்தியாயம்

கல் சுரங்கம்

"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்." —திருக்குறள்.

மாதாக் கோயிலுக்குச் சென்ற நற்குண நாடாரின் வரவைப் பாட்டியம்மாள் அன்றிரவு மிக்கக் கவலையுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தபோது சுமார் ஒன்பது மணிக்கு ஒருவர் ஹோட்டலுக்கு வந்து, பாட்டியம்மாள் அருகிற் சென்று, நற்குண நாடார் ஏதோ கேஸின் விஷயமாய்த் திடீரென்று புறப்பட்டுத் தஞ்சாவூருக்குப்

போய்விட்டதாகவும், சொல்லிக் கொள்ளாமல் போனதைப் பற்றி மன்னிக்கும்படி தாம் அம்மாளைக் கேட்டுக் கொண்டதாகவும், மறு நாள் சாயந்திரத்துக்குள் திரும்பி வந்து விடுவதாகவும் சொல்லும் படிக்குத் தம்மிடம் கேட்டுக்கொண்டதாகச் சொல்லிவிட்டுப் போனார்.

சொன்னபடியே மறுநாள் சாயந்திரம் நான்கு மணிக்கு நற்குண நாடார் ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தார். அவர் உள்ளே நுழைந்ததும், சமையல் அறையிலிருந்த பாட்டியம்மாள் பரபரப்புடன் கூடத்துக்கு வந்து, "என்ன தந்தி! என்ன சமாசாரம்? விசேஷமொன்று மில்லையே?" என்று அவரை விஜாரித்தாள். "விசேஷம் ஒன்றுமில்லை; கவலைப் படுவீர்களென்று எனக்கு உள்ளூரப் பயந்தான்; கேஸின் விஷயமாய்த்தான் போயிருந்தேன்" என்று அவர் அவளுக்குப் பதிலளித்துத் தம்முடைய கையிலிருந்த பத்து மலைப் பழம், கொஞ்சம் முந்திரிப் பருப்பு, 200 குட மிளகாய் ஆகிய சாமான்களை எடுத்துப் பாட்டியம்மாளிடங் கொடுத்தார். பாட்டியம்மாள் அளவற்ற சந்தோஷத்துடன் அவைகளைப் பெற்றுக் கொண்டு, அவரைப் புகழ்ந்து பேசி, "தங்களுக்கு அதிக இளைப்பாயிருக்கிறதுபோ லிருக்கிறதே; உள்ளே போய்க் கொஞ்சம் காப்பி வைத்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று ஐந்துநிமிஷத்தில் காப்பியுடன் வெளியேவந்தாள். நற்குண நாடார் காப்பியைக் குடித்துவிட்டு வெளியே சென்றார். ஹோட்டலுக்கு அவர் திரும்பிவந்தபோது, கூடத்தில் எல்லோரும் சாப்பிட்டுக்கொண் டிருந்தார்கள். உடனே நற்குண நாடாரும் உட்கார்ந்து போஜனத்தை முடித்துக்கொண்டு "எங்கள் ஊரிலிருந்து ஒருவர் என் கூடவந்தார்; பக்கத்துத் தெருவில் அவர் அவருடைய சொந்தக்காரர் வீட்டில் தங்கி யிருக்கிறார். கேஸின் விஷயமாய் நான் அவரிடம் சில சமாசாரங்கள் பேசவேண்டி யிருக்கிறது. ஆனபடியால் நான் அவர் இருப்பிடத்துக்குச் சென்று அங்கேயே இராத்திரித் தங்கிவிட்டுக் காலையில் வருகிறேன்" என்று பாட்டியம்மாளிடஞ் சொல்லிவிட்டு வெளியே சென்றார்.

* * * *

நற்குண நாடாரை அவருடைய சிநேகிதர் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, "ஐந்து நிமிஷத்தில் வருகிறேன்" என்று புதுக் கோட்டைக்குப் போக இருந்த மோட்டார் வண்டிக்காரனிடஞ் சொல்லி, ஸ்டேஷனுக்குட் சென்ற இராமஸ்வாமி ஐயரின் யோக க்ஷேமத்தை நாம் சற்று விஜாரிப்போம். முன்னே சொன்னபடி, தந்தியைப் பெற்றுக்கொண்டு, தம்முடைய வீட்டில் நுழைந்து, சில சாமான்களை எடுத்துக்கொண்டு அவர் ஸ்டேஷனுக்கு விரைந்து சென்றாரல்லவா? அவர் அன்றிரவு தம்முடைய வீட்டுக்குத்

திரும்பி வராமல், எங்கேயோ ஜோலியாய்ப் போயிருந்து, அதைப் பார்த்துக்கொண்டு, மறுநாள் இரவுதான் மிட்டாய்க்கடைச் சந்திலிருந்த தம்மிருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தார். ஆனால் வீட்டில் நுழைவதற்குமுன், வெற்றிலே பாக்குக் கடையொன்றில் புகுந்து இரண்டொரு நிமிஷம் அங்கே தாமதித்துப் பிறகு தம்மிருப்பிடஞ் சென்றார். அவர் தம்முடைய சொக்காயிலிருந்த சாவியை யெடுத்துக் கதவைத் திறந்து, உள்ளேபோய், பெரிய கம்பளிச் சொக்காய் ஒன்றைப் போட்டுக்கொண்டு, ஏதோ சிற்சில சாமான்களை யெடுத்துக்கொண்டு, மணி பத்து அடித்தவுடன் கதவைப் பூட்டிவிட்டுச் சொக்கட்டான் திடலுக்குச் சென்றார். அங்கு போனவுடன், அவர் தம்முடைய ஜோபியிலிருந்த ஒரு சிறிய காந்த விளக்கை ஏற்றிப் பாழுங்கிணற்றின் அடியை ஜாக்கிரதையாய்க் கவனித்துப் பார்த்து அதில் மெதுவாய் இறங்கினார். இறங்கி அதிலிருந்த இலைச் சருகுகளை யெல்லாம் தாம் கொண்டு போயிருந்த ஒரு கோணியில் போட்டுக் கோணியின் ஒரு மூலையில் கெட்டியான கயிற்றின் ஒரு நுனியைக் கோத்துக் கட்டி, ஒரு நுனியைத் தம்முடைய பெல்டின் வளையத்தில் வலுவாகக் கட்டிக்கொண்டு, மெதுவாய் வெளியே ஏறிக் கோணிப் பையைத் தூக்கிச் சருகுகளை வெளியில் போட்டார். அவ்விதம் இரண்டு மணி சாவகாசம் அவர் மிக ஊக்கமாய் வேலைசெய்து குப்பையெல்லாவற்றையும் வெளிப்படுத்தின பிறகு கிணற்றின் அடியில் வெள்ளேலென்று சுண்ணும்பு காணப்பட்டது. அதன்மீது நாடாவைப்போல் ஏதோ ஒன்று புதைந்து கிடந்தது. அதை அவர் பரிசோதித்துப் பார்த்தபோது, அது நீண்ட மஞ்சள் நிறமான கழுத்துப்பட்டையாக இருந்தது. அதன் மீது, இரத்தக்குறிகளும் சில இடத்தில் காணப்பட்டன. அவர் அதைத் தம்முடைய சொக்காய் ஜோபியில் ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டு, சுண்ணும்பை வாரி வாரி முன்போல் வெளிப்படுத்தினார். சுண்ணும்பு அப்புறப்பட்டவுடன், பூமியில் பளிச்சென்று ஏதோ ஜோதி மயமாய்ப் பிரகாசித்தது. அவர் அதை யெடுத்துப் பார்த்தபோது, அது மிகவும் விலையுயர்ந்த வைரக்கல் பதிக்கப் பெற்ற ஒரு தங்கமோதிரமாகக் காணப்பட்டது; அவர் தம்முடைய ஜோபியிலிருந்த ஒரு சிறிய சீசாவை யெடுத்து, அதிலிருந்த தண்ணீரால் அதைத் தேய்த்துக் கழுவினார். "முத்துக்குமரன்—லீலாவதி" என்ற வார்த்தைகள் அதில் வெட்டப்பட்டிருந்தன. அதையும் அவர் பத்திரமாய் வைத்துக்கொண்டு, காற்றோட்டத்துக்காக வெளியே போனார். இரண்டொரு நிமிஷம் வெளியே உலாவினபிறகு, மறுபடியும் கிணற்றில் இறங்கி எங்கும் தட்டிப்பார்த்தார். ஓரிடத்தில் மாத்திரம் இரும்புச் சப்தம் கேட்டது. அப்போது அவர் தம்முடைய கைக்கடப்பாரையை யெடுத்து, அவ்விடத்தைப் பலமாய்த் தட்டினபோது, அவ்விடத்திலிருந்து மண்கட்டிகள் வீழ்ந்

தன். மனத்தில் உற்சாகங்கொண்டு, அவர் தம் முழுபலத்தையும் கொண்டு கடப்பாரையால் பலமாய் இடித்தார். திடீரென்று ஒரு இரும்புக் கதவு அவருடைய முகத்தில் மோதி விழுந்தது. இராமஸ்வாமி ஐயர் கதவுக்கும் சுவருக்கும் மத்தியிலகப்பட்டுக்கொண்டார். கதவின் இடி பொறுக்கமாட்டாமல் இராமஸ்வாமி ஐயர் மூர்ச்சித்தார். பிறகு அவருக்குப் பிரக்ஞை வந்தவுடன், எங்கேயோ மணி இரண்டடித்தது. பிறகு அவர் வலுவாய் அந்தக் கதவைத் தள்ளி ஒரு பக்கத்தில் சாத்தி வைத்தார். கிணற்றுக்குக் கீழ்ப்புறத்தில் சுவரினூடே ஒரு சுரங்கம் காணப்பட்டது. அதன் வழியே அவர் தவழ்ந்து சென்றார். அச் சுரங்கமானது ஏற்கனவே யுள்ள மட்டத்தை விடச் சுமார் மூன்றடி உயர்ந்திருக்க வேண்டுமென்று நிச்சயித்தார். அவர் அப்படித் தவழ்ந்து சுரங்கத்தின் வழியே அரை பர்லாங்கு தூரம் போனவுடன் அவ்விடம் செம்பாறைக் கல்லால் தளம் போடப் பட்டிருந்தது. அப்போது அவர் காதுக்குக் கள கள வென்ற நீரோட்டத்தின் சப்தம் எட்டியது. பிறகு பத்தடிக் கப்பாலிருந்த ஒரு இரும்புக் கதவைத் தம்முடைய இரும்புக் கடப்பாரையால் எளிதில் தள்ளிவிட்டார், என்ன ஆச்சரியம்! அவர் காலடியில் வண்ணான் வாய்க்கால் சுமார் இரண்டடி மட்டத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அவர் அதில் இறங்கி முகத்தைக் கழுவிக்கொண்டு, மறுபடியும் சுரங்கத்தினுட்சென்று முன்போல் கதவைமூடி அதற்கு அண்டையில் ஒரு பெரிய கல்லை வைத்துவிட்டு உட்புறமாகச் சென்றார். கொஞ்சதூரம் போனவுடன், பூமியில் ஒரு துணி கிடந்தது. அவர் அதை யெடுத்துப் பரிசோதித்துப் பார்த்தபோது அது ஜரிகைக்கரையுள்ள ஒரு பட்டுக் கைக்குட்டையாக இருந்தது. அதன் ஒரு மூலையில் "முத்துக்குமரன்" என்று சிவப்பு மையால் எழுதப்பட்டிருந்தது. இராமஸ்வாமி ஐயர் அதை வெகு ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டு, கிணற்றினுள் நுழைந்து, சுண்ணாம்பையும், செத்தையையும் ஒரு தூசி விடாமல் அதிலேயே வாரிப்போட்டு, கிணற்றைப் பழைய ஸ்திதியில் வைத்துவிட்டுச் சுண்ணாம்பின் சுவடில்லாமல் பூமியைத் தம் வஸ்திரத்தால் துடைத்துவிட்டுத் தம்மிருப்பிடஞ் சென்றார். அப்போது மாதாக் கோயிலில் மணி நாலு அடிக்கப்பட்டது.

—o—

இருபத்திரண்டாவது அத்தியாயம்

சதுரங்க ஆட்டம்

"தீயசெயல் செய்வா ராக்கம் பெருகினும்
தீயன தீயனவே, வேறல்ல ;—தீயன
நல்லன வாகாவாம் : நாவின் புறநக்கிக்
சொல்லுங் கவயமா போல்."—நீதிநெறிவிளக்கம்.

நற்குண நாடார் மிகவும் பக்திமானுதலால் ஒருநாட்கூடத் தவறுமல் மாதாக் கோயிலுக்குப் போய் வந்தார். தினம் சாயந்திரம் ஆறுமணிக்கு அவரை மாதாக் கோயிலில் பார்க்கலாம். சங்கீதத்தில் அவருக்கு அதிகப் பிரீதியானபடியால், அற்புதஸாமி உடையார் பாடும்போதெல்லாம் அவரையே கவனித்துக்கொண் டிருப்பார். அவரும் அற்புதஸாமி உடையாரும் நகமுஞ் சதையும்போல் பரஸ்பரம் அதிகப் பிரியம் பாராட்டி வந்தார்கள். ஒருநாள் சாயந்திரம் கோயிலில் பூஜை முடிந்தவுடன், அற்புதஸாமி உடையாரும், நற்குண நாடாரும் கோயிலிலிருந்து வீட்டுக்குச் சேர்ந்து போனுர்கள். அப்போது "சதுரங்கம் விளையாடி வெகு நாட்களாயின ; இந்த ஊருக்கு வந்ததுமுதல் ஆடவேயில்லை. இந்த ஊரில் சீட்டுக் கச்சேரிதான் பலமாக இருக்கிறது. ஒருவருக்கும் சதுரங்கம் ஆடத் தெரியாதுபோ லிருக்கிறது. இதற்கு என்ன செய்கிறது?" என்று நற்குண நாடார் அற்புதஸாமி உடையாரைக் கேட்டார். "அப்படியா ! சதுரங்கத்தில் எனக்கும் கொஞ்சம் பைத்தியமுண்டு. ஒருவரும் அகப்படவில்லையே என்றுதான் நானும் வெகு நாட்களாய் மயங்கிக்கொண்டிருந்தேன்; இனி அந்த ஏக்கம் நீங்கி விட்டது. தங்களுக்குச் சௌகரியப்பட்டால், சாப்பிட்டவுடன் இன்றைக்கே ஆடலாம்" என்று அற்புதஸாமி உடையார் பதில் சொன்னுர்.

போஜனம் முடிந்தவுடன், அற்புதஸாமி உடையார், நற்குண நாடார் அறைக்குப் போக, நற்குணநாடார் தம்முடைய கைப் பெட்டியிலிருந்து சதுரங்கப் பலகையையும் காய்களையு மெடுத்து, அவைகளைக் கிரமமாய் வைத்தவுடன் இருவரும் உற்சாகத்துடன் ஆட ஆரம்பித்தார்கள். முதல்மூன்று ஆட்டங்களிலும் அற்புதஸாமி உடையார் கெலித்தாலும், நற்குண நாடார் சரியான ஆட்டக்காரர் என்று அற்புதஸாமி உடையாருக்குத் தெரியவந்தது. நற்குண நாடார் அறையில் காற்ருேட்ட மென்பதில்லாம லிருந்தபடியால், கொஞ்சநேரங் கழித்து அவ்விருவரும் கொட்டகைக்குச் சென்றுர்கள். அங்குபோய் முதலாட்டம் ஆடும்போது, காய்களுடன் மடக்கி ஒரு சிறிய பெட்டிபோல் சொக்காய்ப் பையில் போட்டுக்கொள்

ளும்படியாகச் சிறிய துண்டுப் பலகைகளால் வெகு நூதனமாய்ப் பொருத்தப்பட்ட அப்பலகையிலிருந்து இரண்டு கீல்கள் நழுவிச் சிதறி விழுந்தன. வெகு சுவாரஸ்யமான நடு ஆட்டத்தில் காய்கள் கலைந்துவிட்டபடியால், அவர்களிருவரும் பரபரப்புடன் அதைச் சரிப்படுத்த முயன்றார்கள். ஒன்றும் பயன்படாமற் போக அற்புத ஸாமி உடையார் தம்முடைய சிறிய பீரோவைத் திறந்து வெகு நேரம் தேடிப்பார்த்துக் கடைசியில் தம்முடைய கழுத்துப் பட்டையைக் கொண்டுவந்தார். நற்குண நாடார் அதைப் பார்த்து "என்ன இது வெகு நேர்த்தியாயும் உறுதியாயு மிருக்கிறது?" என்று அற்புதஸாமி உடையாரிடம் அதை மெச்சிப் பேசினர்.

அற்புதஸாமி உடையார் :—பனிகாலத்தில் எனக்கு நெஞ்சுக் கட்டும் இருமலும் அடிக்கடி வந்துவிடும். என் தேகத்துக்குக் கொஞ் சங்கூடப் பனி ஒத்துக்கொள்கிறதில்லை. அதற்காகக் கழுத்தில் கட்டிக்கொள்ளப் பட்டினல் இதை ஸ்பெஷலாகப் போடச் சொன் னேன். இது உறுதியாயும், பனிக்கு அடக்கமாயிருப்பதோடு இலேசாயு மிருக்கிறது.

நற்குண நாடார் :—ஆமா! ஆமா! இது வெகு இலேசாய்த்தா னிருக்கிறது. பின்னப்பட்டிருக்கிற விதமும் வெகு அற்புதமாகத்தா னிருக்கிறது.

அற்புதஸாமி உடையார் :—இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் ஜப்பான் தேசத்திலிருந்து ஒரு வியாபாரி இங்கு வந்து இவ் வித சாமான்களை ஏராளமாய் வியாபாரஞ் செய்தும், அவரவர்களிஷ் டப்படி வேண்டியவைகளை அப்போதைக்கப்போது பின்னியுங் கொடுத்தார்; நான் அவரை இதுமாதிரி யொன்று போட்டுக் கொடுக்கச் சொன்னேன். அதனுல்தான் இது இவ்வளவு நேர்த் தியாக இருக்கிறது.

நற்குண நாடார் :—ஏ அப்பா, எவ்வளவு உறுதியாயிருக்கிறது! சுருக்குப்போட்டு ஆஸாமியைக்கூட ஒழித்துவிடலாம்போல் அவ் வளவு உறுதியாயிருக்கிறதே. இதனுடைய நிறந்தான் நன்று யில்லை. இந்துக்கள் பிணத்துக்கல்லவோ மஞ்சள் நிறமான துணி யைப் போர்த்துவார்கள். என்னவோ மஞ்சள் துணியைப் பார்க் கும்போதெல்லாம் சாவு ஞாபகந்தான் எனக்கு வருகிறது. நான் யிருந்தால் மஞ்சள் நிறமுள்ள துணியை உயிருடன் ஒருநாளும் உப யோகப்படுத்தமாட்டேன்.

அந்தக் கழுத்துப்பட்டையைக் கொண்டு தலை குனிந்தபடி சதுரங்கப் பலகையைச் சரிப்படுத்திக்கொண்டிருந்த அற்புதஸாமி உடையார் "சாவு" என்ற வார்த்தையைக் கேட்டவுடன் திடுக்கிட்டு, முகம் வெளுத்து நற்குண நாடாரை உற்றுப் பார்த்து "இதென்ன, உமக்கு இந்தக் கழுத்துப்பட்டையின்பேரில் இவ்வளவு துவேஷம்?

இதைப்பற்றி என்ன கதை கதையாகப் பேசுகிறீர் ? எனக்கு வேடிக்கையாக இருக்கிறதே ! எல்லோருக்கும் ஒரு சாமானிடத்திலேயே பிரியமேற்பட்டுவிட்டால், உலகம் எப்படி நடக்கும் ?" என்று கடு கடுப்பாக நற்குண நாடாரிடஞ் சொன்னார்.

நற்குண நாடார் :—சரி, சரி ; உமக்கேன் இதைப்பற்றி இவ்வளவு கோபம் ! வேடிக்கையாகப் பேசினால் இவ்வளவு கோபம் வருகிறதே ! கழுத்தில் சுருக்குப்போட்டு நீரே ஆஸாமியை ஒழித்ததாகச் சொன்னால்கூட உமக்கு இவ்வளவு கோபம் வராதுபோலிருக்கிறதே. நல்ல கழுத்துப்பட்டைதான் இதுக்; கெட்டதென்று எவர்தாம் சொல்லுவார்கள் ? வாங்கி இரண்டு வருஷங்கள்தாம் ஆயினவென்று சொன்னீர்கள்போலிருக்கிறதே. இவ்வளவு சீக்கிரத்தில் இது எப்படிக் கிழிந்தது ? கழுத்தில் கட்டிக்கொண்டால் இம்மாதிரி கிழியுமா என்ன? தாம்புக் கயிற்றுக்குப் பதிலாக இதைக் கிணற்றில் கட்டிவிட்டீரோ ?

அற்புதஸாமி உடையார் :— உம்முடைய கற்பனா சக்தியே சக்தி ! சிவகுமாரன், தாக்ஷாயணி, ஹாஸ்ய ரத்னாவளி, பராங்குசம் முதலிய தமிழ் நாவல்களை எழுதியிருக்கிறவர்களுக்குக்கூட இவ்வளவு கற்பனா சக்தி இராதுபோலிருக்கிறதே ! குயுக்தியாய் என்னென்னவோ தோன்றுகிறதே உமக்கு ! எங்கேயோ மாட்டிக்கொண்டு கிழிந்துவிட்டது.

நற்குண நாடார் :—சரிபாதியாய்க் கிழிந்திருக்கிறதே! மாட்டிக்கொண்டால் இப்படியா கிழியும் ? இது நான்குமுழ மிருக்கிறது. பாக்கி சரிபாதி எங்கே ?

அற்புதஸாமி உடையார் :— உமக்கு ஜோஸியங்கூடத் தெரியும்போலிருக்கிறதே. சரிபாதி கிழிந்ததென்று என்ன அவ்வளவு கணக்காய்ச் சொல்லுகிறீர் ?

நற்குண நாடார் : —குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்து வேண்டுமாவென்ன ? நீரே இதோ பாரும். இரண்டு துண்டுகளை ஒன்றாய்ச் சேர்த்து மூட்டப்பட்டிருக்கிற பின்னல் நன்றாகத் தெரிகிறது. இதைக் கண்டுபிடிப்பதற்கு ஜோஸ்யம் தெரிய வேண்டிய அவசியமே இல்லை. இரண்டு துண்டுகள் மூட்டப்பட்டிருந்தபடியால் சரிபாதியாய்க் கிழிந்திருக்கிறது என்று சொன்னேன். நான் சொல்வது சரிதானே ?

அற்புதஸாமி உடையார் :—ஓய்! உம்முடைய மூளை சாமானியமான தல்ல. அபார சக்தியுள்ளது. சரி, சரி, நிரம்ப நாழிகையாய் விட்டது. இனிக் கண் விழித்தால் நான் நாளைக்கு வேலைக்குப் போகமுடியாது. எழுந்திருக்கலாம்.

நற்குண நாடார் :—அப்படியானால் சரி. நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். ஏதோ இன்றைய தினம் நான் தோல்வியடைந்தேன்; அதனால் நான் உம்மைத் தோற்கடிக்க முடியாதென்று நினைத்து விடாதேயும். எந்தக் காரியத்தில் நான் மனம் வைத்தாலும் அதை நான் எப்படியும் சாதித்துக்கொள்வேன்.

அற்புதஸாமி உடையார் :—அப்படியா ? பார்க்கலாம்.

நற்குண நாடார் :—பார்க்கலாம். வாயினால் சொன்னால் வெட்டிப் பேச்சாய் விடும். காரியத்தில் காட்டுகிறேன்—பாரும் : அப்பா, அப்பா, என்ன இருமல் இது ! நாழிகை நிரம்பத்தானாகிவிட்டது. நானும் போய்ப் படுத்துக்கொள்கிறேன். சூதாட்டமே இப்படித் தான். நாழிகையானதே தெரிகிறதில்லை.

அப்படிச் சொல்லிவிட்டு அவர் தம் அறைக்குப் படுக்கச் சென்றார்.

———o———

இருபத்துமூன்றாவது அத்தியாயம்

துப்பனும் கைதியும்

"தானே புரிவினையாற் சாரு மிருபயனுந்
தானே யனுபவித்த றப்பாது;—தானூறு
கோடிகற்பஞ் சென்றாலுங், கோதையே ! செய்தவினை
நாடிநிற்கு மென்றார் நயந்து."—நீதிவெண்பா

நவமணியும், பால் அப்பாஸாமி நாடாரும் அணுவளவும் வித்தியாசம் பாராட்டிக்கொள்ளாமல், சகோதரர்களைப்போல் பரஸ்பரம் பிரியமுள்ளவர்களா யிருந்தார்கள். பால் அப்பாஸாமி நாடாருக்கு நவமணியின் மூலமாய் மாசிலாமணி நாடாரிடத்தும், லீலாவதியினிடத்தும் அதிகப் பரிச்சய முண்டாயிற்று. பால் அப்பாஸாமி நாடாரின் பிரியத்தால், நவமணி தன்னுடைய மனக்கவலையைச் சற்று மறந்து காலங்கழித்துக்கொண்டு வருகையில், ஒருநாள் அப்பாஸாமி நாடார் "தந்தி வந்திருக்கிறது; அவஸர ஜோலியாய் நான் உடனே புறப்பட்டுச் சென்னப்பட்டணம் போகவேண்டியிருக்கிறது. நீயும் என்கூட வருவாயாகில் எனக்கு நிரம்ப ஒத்தாசையாயிருக்கும்; என்ன சொல்லுகிறாய்?" என்று நவமணியைக் கேட்க, "உன்னை விட்டுப் பிரிவதென்றால் எனக்கும் வருத்தமாகத் தானிருக்கிறது. ஆயினும் நான் என்ன செய்வது ? என் நிலைமை உனக்குத் தெரியாதது அல்ல. தற்காலம் நான் தூரத்துப் பிரயாணம் வைத்துக்கொண்டால் என்பேரில் மெத்தச் சந்தேகத்துக் கிடமாகும்." என்று நவமணி

பதிற் சொன்னான். "சரி ; நான் போய்க் காரியத்தைப் முடித்துக் கொண்டு, கூடிய சீக்கிரத்தில் திரும்பி வருகிறேன்; உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்; அதிகமாகக் கவலைப்படாதே; உன் பெயரில் பாங்கியில் பதினாயிரம் ரூபாய் போட்டிருக்கிறேன்; வேண்டியதைச் செலவுக்கு எடுத்துக்கொள். போய்ச் சீக்கிரம் திரும்பி வந்துவிடுகிறேன்; ஜாக்கிரதையாய் இரு; போய்வருகிறேன்" என்று பால் அப்பாஸாமி நாடார் நவமணியினிடஞ் சொல்லிவிட்டுத் துக்கம் தாங்கமாட்டாமற் சரேலென வெளியிற் சென்றார். அவர் போய் இரண்டு நாட்களுக்குப் பிறகு, மாசிலாமணி நாடாரும் லீலாவதியும் ஏதோ காரியமாகச் சேலத்துக்குப் புறப்பட்டுப் போனார்கள். அவர்களை விட்டுப் பிரிந்தது நவமணிக்கும் சுலோசனாவுக்கும் ஏக்கத்தை யுண்டாக்கிற்று.

"ஆனைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்றபடி நவமணியின் மனத்தில், கெட்ட காலத்தின் அறிகுறியாகக் கொஞ்ச நாட்களாகத் துக்கம் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஒருநாள் சாயந்திரம் சுலோசனாவுக்கு ஏதோ சாமான்கள் வாங்கவேண்டிச் சுலோசனாவும், நவமணியும் கடைப்பக்கஞ் சென்று வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு, ஆறுமணி சுமாருக்கு வீட்டுக்குத் திரும்பி வந்துசேர்ந்தார்கள். மாடியில் அவர்களுடைய அறைக்கு எதிரேயிருந்த கைபிடிச் சுவரில் யாரோ ஒருவர் அவர்களுடைய வரவையே எதிர்பார்த்துக்கொண் டிருந்ததுபோல் உட்கார்ந்திருந்தார். நவமணி அவரை யணுகி "நீர் யார் ? இங்கு எதற்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறீர் ? என்னிடத்தில் ஏதாவது அலுவலுண்டா ?" என்று அவரைக் கேட்டான். "நவமணி நாடார் என்ற ஒருவருக்காக நான் இங்கு வெகுநேரமாய்க் காத்துக்கொண்டிருக்கிறேன். தாங்கள்தாமோ அவர்?" என்று அவர் நவமணியைக் கேட்டவுடன், "ஆம் : நான்தான். என்ன விசேஷம் ? வாருங்கள் உள்ளே போகலாம்" என்று நவமணி சொன்னான்.

அவர்கள் உள்ளே போனவுடன், வந்தவர் அவ்வறையிலிருந்த எல்லாச் சாமான்களையும் உற்றுப் பார்த்தார். நவமணி அதைக் கவனித்து வந்த மனிதர் எவரா யிருக்கவேண்டுமென்று ஊகித்தறிந்து, மூலையில் கிடந்த ஓர் நாற்காலியை அவருக்கு எடுத்துப் போட்டு "தாங்கள் யார் ? என்ன விசேஷம் ?" என்று மறுபடியும் அவரைக் கேட்டான். "என் பெயர் குப்புஸாமி நாயுடு; நான் ஒரு துப்பன்; இதோ பாருங்கள் இந்த உத்தரவை ! எழெட்டு மாதங்களுக்கு முன் விஜாரிக்கப்பட்ட முத்துக்குமர நாடாரின் கொலைக் கேஸின் சம்பந்தமாகத் தங்கள் அறையிலுள்ள சாமான்களை யெல்லாம் ஒன்றுவிடாமல் பரிசோதிக்கும்படி எனக்கு உத்தரவு; அதற்குத் தாங்கள் தடையொன்றுஞ் செய்யமாட்டீர்களென்று நம்புகி

றேன்" என்று குப்புஸாமி நாயுடு நவமணியினிடஞ் சொல்லிவிட்டு, அவருடைய ஜோபியிலிருந்து ஊது ஒன்றை யெடுத்து மெதுவாய் ஊதினார். உடனே ஒரு போலீஸ்சேவகன் உள்ளே நுழைந்தான்.

துக்கம் மிக்க அதிகரித்து ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்த சுலோசனை வெகு கோபத்துடன் நாயுடுவைப் பார்த்துக்கொண்டு, "நவமணி! இதற்கும் நீ இடங்கொடுக்கப் போகிறாயா என்ன? பட்ட ஹிம்ஸையெல்லாம் போதாதா?" என்று நவமணியைக் கேட்டாள். "தடை செய்வதில் என்ன பிரயோஜனம்? மடியில் கனம் இருந்தால் அல்லவோ நாம் பயப்படவேண்டும்! எல்லாம் நம்முடைய தேவர் செயல்! நாயுடு அவர்கள் எதை வேண்டுமென்றாலும் பரிசோதித்துப் பார்த்துக்கொள்ளட்டும்" என்று நவமணி பதிற் சொல்ல, "இதுவும் அந்தக் கிராதகன் வேலையாய்த்தா னிருக்கும். இன்னும் எவ்வளவுகாலம் நம்மை இவ்விதம் ஹிம்ஸை செய்யப் போகிறானோ! அது தெரியவில்லையே!" என்று சுலோசனை சொல்லித் துக்கித்தாள். "அதைப் பற்றிச் சந்தேகமென்ன? எல்லாம் அவனுடைய வேலைதான். இத்தனை நாட்கள் நீ தைரியமா யிருந்து எனக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தாய்; இப்போது நீயே இப்படி வருத்தப்படலாமா?" என்று சுலோசனையைத் தேற்றிவிட்டுத் துப்பனைப் பார்த்து, "தங்கள் வேலையைப் பாருங்கள்" என்று நவமணி சொன்னான்.

குப்புஸாமி நாயுடு வெகு நேரம் எல்லாவற்றையும் பரிசோதித்துப்பார்த்தும் கேஸின் சம்பந்தமாய் ஒன்றுமகப்படாமற் போக, கடைசியாகப் பலவிடங்களில் உடைந்தும், அழுக்கடைந்து மிருந்த நவமணியின் மேஜையின்மேல் கையை வைத்தார். சகோதரர் இருவர் கண்களினின்றும் நீர் மாலை மாலையாய் பெருகி வழிந்தது. அவ்விருவரும் தாங்கள் எங்கு சென்றாலும் அதைமட்டும் அதிகப் பிரியத்துடன் கையுடன் கொண்டு போய்க்கொண் டிருந்தார்கள். அவர்களுடைய தந்தையின் ஞாபகத்துக்காக அவர்கள் அதை வெகு ஜாக்கிரதையாய் உபயோகித்து வந்தார்கள். தவிர, அவர்களுடைய தகப்பனாரின் நண்பரும், படையார் பாளையத்து ஜமீந்தாருமான கிருபாகர நாடார் "இந்த மேஜை உங்களுடைய தகப்பனாருடையது; நீங்கள் அவரை எவ்விதம் பாராட்டுவீர்களோ அந்த வாஞ்சையுடன் இம்மேஜையைப் பாதுகாத்து வரவேண்டும் நீங்கள், என்று உங்களிடம் சொல்லும்படி உங்கள் தகப்பனார் என்னிடம வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். ஆகையால் மேஜையை ஜாக்கிரதையாய் வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லியிருந்தபடியாலும், அவர்கள் இருவரும் கண்ணீர் விட்டார்கள். எனினும், நவமணி அதன் சாவியைத் துப்பனிடங் கொடுத்தான். துப்பன் அதைத் திறந்து பார்க்க, அதில் பல கடிதங்களும், பேனாவும், மைக்கூடும்

வேறு சாதாரணமான பல சாமான்களும் இருந்தனவே யொழிய வேறொன்று மகப்படவில்லை. அப்போது, "உங்களுக்கும் எனக்கும் அனுவசியமாய்ச் சிரமந்தான் ஏற்பட்டது. நானென்ன செய்கிறது? உத்தரவுப்படி நான் நடக்கவேண்டியிருக்கிறது" என்று குப்புஸாமி நாயுடு சொல்லிவிட்டு, "ஆகா! ஒன்று மறந்துவிட்டேனே! அதோ! அதோ! மேஜைக்கு அடிப்பாகத்தில் மற்றொரு டிராயர் மறைந்து இருக்கிறதே!" என்று உரக்கச் சொல்லிக் கொண்டு மறுபடியும் மேஜையின் அருகிற் சென்று மேஜையின் கால்களை உற்றுப்பார்த்தார். அவைகள் ஒவ்வொன்றிலும் வார்னிஷ் எண்ணெய் தடவப்பட்ட ஒவ்வொரு திருகு ஆணி இருந்தது. குப்புஸாமி நாயுடு உற்சாகத்துடன் தம்முடைய ஜோபியிலிருந்த ஒரு கத்தியை எடுத்து அதனால் அந்தத் திருகு ஆணிகளைத் திருகி யெடுக்க, மேஜையிலிருந்து திடீரென்று மற்றொரு டிராயர் விழுந்தது. நவமணியும் சுலோசனாவும் ஆச்சரியப்பட்டார்கள். அந்த டிராயரின் அடியில் காகிதத்தால் அடக்கமாய்ச் சுற்றப்பட்டு நூலால் கட்டப்பட்டிருந்த இரண்டு பொட்டணங்கள் (Packets) இருந்தன. ஒரு பொட்டணத்தில் இரத்தப் புள்ளிகளோடு கூடியதும், நான்கு ஓரங்களிலும் ஜரிகைக் கோடு போட்டும், சிவப்பு மையால் "முத்துக்குமரன்" என்று பெயர் எழுதப்பட்டதுமான ஒரு கைக்குட்டை யிருந்தது. மற்றொன்றில் முத்துக்குமரனது டயரியும், அந்த டயரியின் உட்பையில் "முத்துக்குமரன்" என்ற பெயர் வெட்டப்பட்ட உயர்ந்த பச்சைக்கல் மோதிரமு மிருந்தன. சுலோசனாவும் நவமணியும் திடுக்கிட்டு நின்றார்கள். பிறகு நவமணி இடிவிழுந்த மரம் போற் கீழே சாய்ந்து மூர்ச்சை யடைந்தான். மடமடவென்று சுலோசனா மெத்தையை விட்டுக் கீழே யிறங்கி, குளிர்ந்த ஜலம் கொண்டுவந்து நவமணியின் முகத்தில் தெளித்து, அவனைத் தன் மேல் சாத்திக்கொண்டு, கோவென்று கதறினாள். அந்த வீட்டுக்காரர்களெல்லோரும் அன்றையதினம் ஏதோ ஒரு கலியாணத்துக்குச் சாப்பிடப்போயிருந்தபடியால், சுலோசனாவுக்குத் தேறுதல் சொல்ல வீட்டிலொருவருமில்லை. சுலோசனா உரக்க அழுதவுடன், நவமணிக்குப் பிரக்ஞை வந்தது. பிறகு அவன் கொஞ்சம் ஜலத்தைப் பருகிவிட்டு, சுலோசனாவுக்குத் தேறுதல் சொல்ல ஆரம்பித்தான். அப்போது, "சுலோசனா! இதற்கென்ன அர்த்தம்?" என்று நவமணி சுலோசனாவைக் கேட்க, "அர்த்தமா! தெரியாதா? முத்துக்குமர நாடாரின் கொலைக்கும், உமக்கும் நிரம்பச் சம்பந்தமிருக்கிறதென்று தெரியவருகிறது. வேறு ஒன்றுமில்லை. நாழிகையாகிவிட்டது. வாரும், ஸ்டேஷனுக்குப் போகலாம்" என்று துப்பன் நவமணிக்குப் பதிலளித்து அவனை ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றான்.

இருபத்துநான்காவது அத்தியாயம்

கொலைக்கேஸ் விஜாரணை

"சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
வுறுகாலத் தூற்றாகா வாமிடத்தே யாகுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனா
லிறுகாலத் தென்னை பரிவு?"—நாலடியார்

நவமணியின் மேஜையிலிருந்து துப்பனால் கண்டெடுக்கப்பட்ட சாமான்களாகிய புதிய சாக்ஷியங்களின்பேரில், கொலைக் கேஸ் மறுபடியும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் புனர்ப் பிரதம விஜாரணைக்கு வந்தது; நவமணி குற்றவாளியென்று அந்தக் கோர்ட்டார் அவர்கள் அபிப்பிராயப்பட்டபடியால், நவமணி அடுத்த ஸெஷனுக்குக் கமிட் செய்யப்பட்டான்.

ஆகவே, கேஸ் ஸெஷன்ஸ் விசாரணைக்கு வந்தது. "நவமணி நாடார் என்ற நீ, 1900௵ எப்ரல்மீ 19உ இரவில் முத்துக்குமர நாடாரைக் கொலை செய்தாயென்றும், ஆனபடியால் இந்தியன் பீனல் கோடு 302வது ஸெக்ஷனில் விதிக்கப்பட்டிருக்கிற தண்டனையின் குற்றத்தைச் செய்திருக்கிறாயென்றும், உன்னை நாம் இப்போது சார்ஜ் செய்கிறோம்: மேற்படி குற்றத்தின் விஷயமாய் நாம் இப்போது விசாரணை நடத்தப்போகிறோம்" என்று ஜட்ஜ் அவர்கள் குற்றப் பத்திரிகை படித்துவிட்டு 'நீ குற்றவாளியா, அல்லவா?" என்று நவமணியைக் கேட்டதும், "நான் குற்றவாளியல்ல" என்று நவமணி பதிற் சொன்னான்.

பிறகு அற்புதஸாமி உடையார் கூட்டிலேறிப் பின்வருமாறு வாக்குமூலங் கொடுத்தார்:— "முத்துக்குமர நாடார் என்னுடைய சகோதரியின் குமாரன். அவனுடைய தந்தையாகிய காசினி மிட்டேதாரும், லீலாவதியின் தகப்பனாகிய இந்திரபுரி ஜமீன்தாரும் இனிய நண்பர்கள். அவ்விரு நண்பர்களும் பரஸ்பரம் பிரியத்தின் மேலீட்டினால், லீலாவதியும், முத்துக்குமாரனும், காதலன் காதலியாக ஆக வேண்டுமென்று தீர்மானித்து, முத்துக்குமாரனுக்கு ஏழு வயதும், லீலாவதிக்கு ஐந்து வயதுமாயிருந்தபோது; அவ்விரு குழந்தைகளுக்கும் விவாக நிச்சயதார்த்தம் செய்துவைத்தார்கள். மேற்படி ஏற்பாடு நடந்து சிலமாதங்களில் லீலாவதியின் தந்தை தேகவியோகமடைய, லீலாவதி தன்னுடைய காலஞ்சென்ற தகப்பனாரின் இஷ்டப்படி காசினி மிட்டேதாரின் இருப்பிடஞ் சென்று வசித்துவந்தாள். லீலாவதி அங்குபோன ஒரு வருஷத்துக்குள், காசினி மிட்டேதார் மரணமடைய, அவள் மாசிலாமணி நாடாரின் இருப்பிடம் போய்ச் சேர்ந்தாள். தற்காலம் மாசிலாமணி நாடார் ஒருவர்தாம் லீலா

வதியின் போஷகர். முத்துக்குமரனுக்கு நான் போஷகன். மேற்படி நிச்சயதார்த்தம் நடந்து, சுமார் பதினைந்து வருஷங்களாயின. சுமார் பத்து மாதங்களுக்குமுன் ஒருநாள் சாயந்திரம் நவமணிக்கும் முத்துக்குமனுக்கும், லீலாவதியைப்பற்றி வாக்குவாதமேற்பட்டு, நவமணி முத்துக்குமரனை அறைந்துவிட்டு ஓடிப்போனான். லீலாவதியையே எவ்விதத்திலும் விவாகஞ் செய்துகொள்வதாக நவமணி நிச்சயம் செய்திருந்தபடியாலும், அவனுடைய கெட்ட எண்ணத்துக்கு முத்துக்குமரன் தடையாக இருந்தபடியாலும், ஆகவே முத்துக்குமரனைத் தன்னுடைய வழியிலிருந்து விலக்கும்பொருட்டும், ஆனால் அப்படிச் செய்வதினால் ஏற்படக்கூடிய குற்றம் தன்மீது சுமராதிருக்கும்படியான ஒரு வழியைக் கண்டுபிடிக்க ஆலோசித்துக்கொண்டிருந்தான். மேரியா மார்ட்டன் முத்துக்குமரனைத் தம் வீட்டுக்குப் போஜனத்துக்கு அழைத்தபோது நவமணிக்குச் சரியான சமயம் வாய்த்தது. அன்றைய தினம், அதாவது, 1900-ஞு எப்ரல்மீ 19உ, முத்துக்குமாரனிடம் நவமணி மெத்த நேசமுள்ளவன்போல் நடித்து, முத்துக்குமரனைக் காவேரியாற்றுக்குச் சூதான எண்ணத்துடன் அழைத்துக்கொண்டு போய்க் கொலைசெய்துவிட்டு வீட்டுக்கு ஓடிப்போனான். முதலில் பிரதம விசாரணை கோர்ட்டார் அவர்கள், தகுந்த சாக்ஷியங்களில்லையென்று கேஸைத் தள்ளுபடி செய்தார்கள். பிறகு பெயர்பெற்ற ஓர் துப்பனைச் சென்னையிலிருந்து நான் தருவித்தேன். அவர் பெயர் குப்புஸாமி நாயுடு. அதோ நிற்கிறாரே அவர்தான்! அவர் தம்முடைய நுட்ப புத்தியை நன்றாகச் செலுத்தி, நவமணியின் மேஜையிலிருந்து, கொலை செய்யப்பட்ட முத்துக்குமாரனின் மோதிரம், டயரி, கைக்குட்டை ஆகிய மூன்று சாமான்களைக் கண்டெடுத்தார்."

அற்புதஸாமி உடையார் முடித்தவுடன், நவமணியின் வக்கீல் எழுந்து, "கொலை செய்தவன், அக்கொலைக்கு அறிகுறியாக உள்ளவைகளைக் கண்டுபிடிக்காவண்ணம் அடக்கஞ் செய்யாமல், வெளியில் கிடக்கும் ஒரு உடைந்த மேஜையில் வைப்பானென்று உம்முடைய துப்பனுக்கு எப்படித் தெரிந்தது?" என்று அற்புதஸாமி உடையாரைக் கேட்டபோது "அதுதான் துப்பன் திறம். எப்படித் தெரிய வந்ததென்று கேட்டால் நான் என்ன பதில் சொல்லுவது?" என்று அவர் பதில் சொல்லிக் கூட்டைவிட்டு வெளியே சென்றார்.

பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் இராமன் நாயர் கூட்டிலேறிப் பின்வருமாறு வாக்குமூலங் கொடுத்தார் :—1900ஞு எப்ரல்மீ 20உ காலையில், அற்புதஸாமி உடையார் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து, பிரதம விசாரணைக் கோர்ட்டின்முன்பு கொடுத்திருக்கிற வாக்குமூலத்தின் விஷயத்தை என்னிடம் சுருக்கமாய் எழுதிவைத்து

நவமணி நாடாரை அரெஸ்ட் செய்யச் சொன்னார். அப்படியே நவமணி நாடாரை நான் அரெஸ்ட் செய்து அவரை ஸ்டேஷன் பந்தோபஸ்தில் வைத்துவிட்டு, நானும் அற்புதஸாமி உடையாரும் காவேரியாற்றுக்குச் சென்றோம். காவேரியாற்றின் தெற்குக் கோடியில் ஆற்றிலிறங்கும்படியான மணற்சரிவுக்குப் பக்கத்திற் போடப்பட்டிருக்கிற இரும்புக் கிராதியில் இரத்தக் குறிகளும் இருவர் கைகலந்து சண்டை செய்ததுபோல் அம்மணற் சரிவில் காலடிச் சுவடுகளும் காணப்பட்டன. மேலும் மேற்படி கிராதி அதிகமாய் வளைந்திருந்தது. நவமணி நாடாரின் ஷர்ட்டிலும், வேஷ்டியிலும் இரத்தக்கறையிருந்த விஷயம் ஏற்கனவே நான் கவனித்ததுதான். நவமணி நாடாரை அரெஸ்ட் செய்து ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டுபோனபோது அவைகளையும் நான் கைப்பற்றிச் சென்றேன். பிறகு நான் அங்கிருந்து புறப்பட்டு ஊருக்குட் சென்று மேரியாமர்ட்டலை நன்றாய் விசாரித்ததில், முத்துக்குமர நாடாரும் நவமணி நாடாரும் முதல்நாளிரவு காவேரியாற்றுக்குச் சென்றார்களென்றும், அவ்விருவரும் முன்னே மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருந்தார்களென்றும், ஆனால் அந்த மனஸ்தாபம் 19உ இரவில் நீங்கிவிட்டதென்பது அவருக்கு நிச்சயமாய்த் தெரியுமென்றும் அவர் சொன்னார். நவமணி நாடாரிடத்தில் ஏற்கனவே எனக்கு அதிகமாகச் சந்தேகமிருந்தபடியால் அவரை அரெஸ்ட் செய்தது சரிதானென்று நான் நிச்சயித்தேன். காவேரியாற்றுக்கு நானும் அற்புதஸாமி உடையார் மட்டிலுந்தான் போயிருந்தோம். கொலை நடந்த இடத்துக்குக் காலதாமதம் செய்யாமல் உடனே போவதுதான் சரியென்று எனக்குத் தோன்றினபடியால் கிராம முன்சீபை எதிர்பாராமல் நான் மட்டுஞ் சென்றேன்."

பிறகு நவமணியின் வக்கீல் அவரைக் கிராஸ் செய்தார். சண்டை செய்ததுபோல் காலடிச் சுவடுகள் காணப்பட்டனவென்று சொல்லுகிறீரே? அது உமக்கு எப்படித் தெரிந்தது? அந்த இடத்துக்கு நீர் காலை எட்டு மணிக்குமேல்தானே போயிருக்க முடியும்? நீர் அங்கு போய்ப்பார்ப்பதற்குமுன் பலபேர்கள் அங்கு போயிருப்பார்களே! காலை வேளையில் அங்கு வெகுபேர்கள் போவதுண்டே. அவர்களுடைய அடிச் சுவடுகளுக்கும் நவமணி நாடார் முத்துக்குமர நாடார் ஆகிய இருவரும் சண்டை செய்து கொண்டதுபோல் காணப்பட்ட சுவடுகளுக்கு முள்ள வித்தியாசம் உமக்கு எப்படித் தெரிய வந்தது? நிரம்ப ஆச்சரியமாயிருக்கிறதே! இரும்புக் கிராதி வளைந்திருந்ததற்குக் காரணம் நவமணி நாடார் தாமோ! அவ்வழியில் அடிக்கடிப் போகும் பிரயாணிகள் அழுத்தி அது வளைந்திருக்கக் கூடாதோ? இவைகளையெல்லாம் பெரிய சாக்ஷியங்களாகக் கருதி நாடாரை அரெஸ்ட்

செய்தீரோ? நீர் இந்த உத்தியோகத்துக்கு வந்து எத்தனை நாட்களாயினவோ!

போலீஸ் இன்ஸ்பெக்டர் :— இரண்டு வருஷங்களுக்குமேல் ஆயின.

நவமணியின் வக்கீல்:—கொலை நடந்து சுமார் ஒரு வருஷமாயிற்றே. பிரேதத்தைக் கண்டு பிடித்தீரா? எவரோ ஒருவரை அரெஸ்ட்டு செய்தவுடன், உம்முடைய வேலை முடிந்துவிட்டதென்று நினைத்தீரோ?

போலீஸ் இன்ஸ்பெக்டர் :—நாங்கள் கூடுமான வரையில் இன்வெஸ்டிகேஷன் செய்தும் பிரேதம் அகப்படவில்லை.

நவமணியின் வக்கீல்:—முத்துக்குமர நாடாரைக் கடைசியில் பார்த்தது யார்? எப்போது?

போலீஸ் இன்ஸ்பெக்டர்:—முத்துக்குமர நாடாரோடு கடைசியிலிருந்தது நவமணி நாடார். 19-ம் தேதி இரவு சுமார் 11 மணிக்கு நவமணி நாடார் முத்துக்குமர நாடாரைக் காவேரியாற்றில் கடைசியாகப் பார்த்திருக்க வேண்டும்.

நவமணியின் வக்கீல்:—இதற்குச் சாக்ஷிகளுண்டா? அல்லது, உம்முடைய ஜோதிட சாஸ்திரந்தானோ?

போலீஸ் இன்ஸ்பெக்டர்:—சாக்ஷிகள் இல்லை; காவேரி யாற்றிலிருந்து அவர்கள் திரும்பி வந்ததை ஒருவரும் பார்க்கவில்லை.

நவமணியின் வக்கீல்:—அப்படியானால் அவர்கள் காவேரியாற்றுக்குப் போய் மணற்சரிவி லிறங்கிச் சண்டை போட்டுக்கொண்டதைப் பார்த்தவர்க ளிருக்கிறார்களோ?

"இல்லை" என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் விடையளிக்க, "இப்படியிருக்க, முத்துக்குமர நாடார் கொலை செய்யப் படாமலே எங்கேனும் உயிருட னிருக்கலாம். சில நாட்கள் கழித்துத் திரும்பவும் வரலாம்" என்று நவமணியின் வக்கீல் சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

பிறகு மேரியா மர்ட்டன் கூட்டிலேறி "நவமணியை எனக்கு நன்றாகத் தெரியும். கொலை நடந்ததாகச் சொல்லப்படும் இரவு பத்துமணி வரையில் நவமணியும் முத்துக்குமரனும் உற்சாசமாய்ப் பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்களுடைய மனஸ்தாபம் அன்றைக்கே நிவர்த்தியாகி விட்டதென்று நான் மனப்பூர்வமாய் நம்புகிறேன்" என்று வாக்குமூலங் கொடுக்க, "கடியாரமும் சங்கிலியும் உமக்கு எங்கு அகப்பட்டன?" என்று கோர்ட்டார் அவர்கள் அவளைக் கேட்க, "மணற் சரிவின் சமீபத்திலுள்ள சதுப்பு நிலத்தில்

புதைந்து கிடந்தன; தற்செயலாய் நான் அவைகளைப் பார்த்தேன்" என்று பதிற் சொல்லிக் கூட்டுக்கு வெளியே சென்றார்.

பிறகு துப்பன் குப்புஸாமி நாயுடு பின் வருமாறு வாக்கு மூலங் கொடுத்தார்:— "இந்தக் கேஸின் விஷயமாய் விஜாரித்துத் துப்புக் கண்டு பிடிக்கும்படி சுமார் இரண்டுமாதங்களுக்கு முன் என்னை அற்புதஸாமி உடையார் அமர்த்திக் கொண்டார். ஒரு மாதகாலம் நான் சிரமப்பட்ட பிறகு, முத்துக்குமர நாடாரின் சில சாமான்கள் நவமணி நாடாருடைய மேஜையிலகப்பட்டன. அவைகளை ஏற்கனவே நான் கோர்ட்டில் தாக்கல் செய்திருக்கிறேன்."

நவமணியின் வக்கீல்:—மேற்படி சாமான்கள் அந்த மேஜையிலிருக்குமென்று உமக்கெப்படித் தெரிந்தது?

குப்புஸாமி நாயுடு:—அவைகள் அங்கிருக்கக் கூடுமென்று முதலில் அற்புதஸாமி உடையார் சந்தேகித்தார். பிறகு எனக்கும் சந்தேகமேற்பட்டது.

பிறகு சுலோசனை வாக்குமூலங் கொடுத்தாள்:— "என் சகோதரன் நவமணிக்கு லீலாவதியின் பேரில் காதலிருந்தது உண்மைதான். சாதாரணமாய் அவன் என்னுடன் பேசின விஷயத்துக்கு அற்புதஸாமி உடையார் விகற்பமான அர்த்தங் கொடுத்ததற்குக் காரணம் ஆண்டவனுக்குத்தான் தெரியும்."

ஸர்க்கார் பக்கத்துச் சாக்ஷிகள் எல்லோரும் மேற்கூறியபடி வாக்குமூலங் கொடுத்து முடிந்தவுடன், "வாக்கு மூலங்களைக் கேட்டீரா? உமக்குச் சொல்ல வேண்டியவைகள் ஏதாவது உண்டா?" என்று கோர்ட்டாரவர்கள் நவமணியைக் கேட்க, "பிரதம விஜாரணையில் நான் ஏற்கனவே சொல்லி யிருக்கிறதைத் தவிர நான் சொல்ல வேண்டியது வேறொன்றுமில்லை" என்று நவமணி விடையளித்தான்.

கோர்ட்டு:—உம்முடைய மேஜையில் இந்தச் சாமான்கள் அகப்பட்டதற்குக் காரணமென்ன?

நவமணி:—அவ்விஷயம் என்னுடைய நாதனுக்குத்தான் தெரியும். அதன் காரணத்தை நான் அறியேன்.

கோர்ட்டு:—இந்தியன் பீனல்கோடு 302-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற குற்றத்தை நீர் செய்ததாக ஏற்படுகிறது. நீர் அக்குற்றத்தைச் செய்யவில்லையென்று நிரூபிக்க உமக்குச் சாக்ஷிகளிருக்கிறார்களா?

நவமணி:—இருக்கிறார்கள்.

நவமணி அப்படிச் சொன்னவுடன், கடியாரம் மணி ஐந்து அடித்தது. அப்போது மாசிலாமணி நாடார் ஒரு தந்தியை நவமணியின் வக்கீலிடங் கொடுத்து, அவரிடம் இரகசியமாய் ஏதோ சொன்னார். உடனே நவமணியின் வக்கீல் எழுந்து, "நவமணி நாடார் குற்றஞ் செய்யவில்லையென்று நிரூபிக்கும்படியான இரண்டு சாக்ஷிகள் தற்காலம் சென்னைப் பட்டணத்திலிருக்கிறார்கள். அவர்களிரண்டு பேர்களும் நாளைய இரவு புறப்பட்டு அடுத்தநாட் காலையில் இங்கு ஆஜராவதாகத் தந்தி கொடுத்திருக்கிறார்கள். ஆகையினால் இந்தக் கேஸை ஒருநாள் தள்ளி விஜாரிக்க உத்தரவு செய்யப் பிரார்த்திக்கிறேன்" என்று கோர்ட்டாரைக் கேட்டுக்கொள்ள, கோர்ட்டாரவர்கள் அப்படியே உத்தரவு செய்து எழுந்தார்கள்.

—o—

இருபத்தைந்தாவது அத்தியாயம்

சத்தியமே ஜயம்!

"மறை வழிப் பட்ட பழமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப் பரக்கும்;—கழிமுடைப்
புன்புலா றற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து."—நாலடியார்.

சென்னை புரசவாக்கத்தில், இராஜகிரி ஜமீந்தாரின் பங்களாவில் ஒரு அழகிய கட்டிலில் மோஹன்லிங்கு படுத்துக்கொண்டிருந்தார். அக்கட்டிலுக்குச் சமீபத்தில் போடப்பட்டிருந்த பற்பல விசித்திரமான நாற்காலிகள் இரண்டில், இராஜகிரி ஜமீந்தார் ஒன்றிலும், மற்றொன்றில் அமிருதமும் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது, "உடம்பு இவருக்குச் சௌகரியமாக வில்லை யென்று தாங்கள் எனக்குத் தந்தியடித்திருந்தால், நான் வரமாட்டேனா என்ன? தங்களுக்கு உடம்பு சௌகரிய மில்லையென்று ஏன் தந்தி யடித்தீர்கள்?" என்று அமிருதம் இராஜகிரி ஜமீந்தாரைக் கேட்டாள்.

இராஜகிரி ஜமீந்தார்:—நீ வருவாயோ மாட்டாயோ என்ற சந்தேகத்தினால்தான் அப்படி அடித்தேன்.

அமிருதம்:—காரணம் ஒன்றுமே சொல்லாமல் தாங்கள் என்னை வரும்படிச் சொல்லியிருந்தாலும் நான் வரக் கடமைப்பட்டவளல்லவா? கேவலம் ஒரு அநாதையைக் காப்பாற்றின பிரபு வல்லவா தாங்கள்? எனக்கு நன்றி கிடையாதா? அனாவசியமாய்த் தாங்கள் எனக்கு அதிகத் துக்கத்தை உண்டாக்கினீர்கள். தந்தி வந்தவுடன் எனக்குப் பற்பல யோஜனைகள் தோன்றிவிட்டன. நாளைய தினம் நாம் புறப்படலாமல்லவா? ஒரு பாவத்தையு மறியாத நவமணி

நாடார் ஜெயிலிலிருப்பது எனக்குப் பொறுக்கவில்லை. என்மேல் தான் தப்பு. நான் இனி என்ன செய்வது! அந்தப் பாவத்தை நான் எப்படித் தொலைப்பேன்!

இராஜகிரி ஜமீந்தார்:— இராத் தூக்கமில்லாமல் ரயிலில் வந்ததனுல் உனக்குப் பித்தம் அதிகமாக இருக்கிறதுபோல் எனக்குத் தோன்றுகிறது. என்ன தாறுமாறாய் ஏதோ சொல்லுகிறாய்? உன்மேல் என்ன தப்பு?

அப்படி ஜமீந்தார் அவளைக் கேட்டவுடன் "என் மனத்தினுள்ளேயே வைத்துக்கொண்டு நான் என் இன்னும் மறுகவேண்டும்? இதோ சொல்லுகிறேன், கேளுங்கள். அற்புதஸாமி உடையாரை எனக்கு இரண்டு வருஷகாலமாய்த் தெரியுமென்ற விஷயத்தையும், நாங்களிருவரும் விவாகஞ் செய்துகொள்வதாகக்கூட நினைத்திருந்த விஷயத்தையும், நான் தங்களிடம் ஏற்கனவே சொல்லி இருக்கிறேனல்லவா? தாங்கள் என்னைப் பார்த்து ஐந்தாறு மாதங்களுக்கு முன், எனக்கும் அவருக்கும் மனஸ்தாப முண்டாயிற்று. மனஸ்தாபமேற்பட்ட பிறகு கூட, அதாவது தாங்கள் கிருபை கூர்ந்து என்னை இரக்ஷிக்கத் தொடங்கின நாள் வரையில் என்னுடைய கால வித்தியாசத்தின் கொடுமையால், நான் அவரிடமிருந்து அடிக்கடி பணம் பெற்றுக்கொண் டிருந்தேன். அக்காலத்தில் ஒரு நாள் அதாவது, 1900 ஸ்ரீ ஏப்ரல் மீ 19-ம் உ இரவு," என்று மேலே சொல்ல ஆரம்பித்தபோது பங்களாவின் வெளியில் ஒரு மோட்டார் வந்து நின்றது. அதிலிருந்து யாரோ இருவர் இறங்கிப் பங்களாவை நோக்கி வந்துகொண் டிருந்ததை ஜன்னல் வழியாக ஜமீந்தார் பார்த்தார். அவர்கள் சமீபத்தில் வந்தவுடன், ஜமீந்தார் எழுந்து வந்தவர்களை உற்சாகத்துடன் எதிர்கொண்டுபோய், "மாசிலாமணி நாடார்! வரவேணும்! வரவேணும்!" என்று நல்வரவளித்து, மற்றொருவரைப் பார்த்து "என் நிற்கிறீர்கள்? தயவு செய்து வாருங்கள், உள்ளே போகலாம்" என்று சொன்னார். ஆகவே அம்மூவரும் உள்ளே சென்றவுடன், மாசிலாமணி நாடாரும், மற்றொருவராகிய வீரசிங்க நாடாரும், படுத்துக்கொண்டிருந்த மோஹன்ஸிங்கு யோக க்ஷேமத்தை விஜாரித்துச் சந்தோஷப் பட்டார்கள். பிறகு சமையற்காரன் அவர்களுக்குப் பலகாரமும், காப்பியுங் கொண்டுபோய் வைக்க அவர்கள் சாப்பிட்டார்கள். பிறகு மாசிலாமணி நாடார் மோஹன்ஸிங்கைப், பார்த்து "நீ உன்னுடைய சரித்திரத்தைச் சொல்லாத வரையில் எனக்கு ஒன்றும் ஓடாது. சொல், கேட்கலாம்" என்று அவனைக் கேட்க, "அமிருதம் ஏதோ சொல்லவேண்டுமென்கிறாள். முன்னே அதைக் கேளுங்கள்; பிறகு நான் சொல்ல வேண்டியதைச் சொல்லுகிறேன்" என்றான். அமிருதம் வெகு நேரம் தியங்கி விட்டுப் பிறகு பின்வருமாறு சொன்னாள்:- 1900 ஸ்ரீ

ஏப்ரல் மீ 19-ம் வ இரவு ஏழுமணிச்கு, அற்புதஸாமி உடையார் சாப்பிட்டு வருகிற பாட்டியம்மாள் ஹோட்டலுக்கு நான் சென்றேன். என்னுடைய செலவுக்குப் பணம் வாங்கிக்கொள்ளும்பொருட்டுப் போயிருந்தேன்.

மாசிலாமணி நாடார் :— பணத்துக்கு நீ அவரிடம் போவானேன்? உனக்கு அவரை முன்னாலேயே தெரியுமோ?

இராஜகிரி ஜமீந்தார்.— தெரியுமோ, தெரியாதோ, அதைப் பற்றி நமக்கென்ன? அவள் சொல்லுகிறதுபோல் சொல்லட்டும்.

அமிருதம்:—அவரிடம் என் வருத்தப் படுகிறீர்கள்? இதோ சொல்லுகிறேன். அவரை எனக்கு இரண்டு வருஷங்களாகத் தெரியும். நாங்களிருவரும் விவாகஞ் செய்துகொள்வதாகக் கூட நிச்சயித்திருந்தோம். பிறகு எங்களிருவருக்கும் மனஸ்தாப மேற்பட்டது. ஆகையால் அவ் விவாகம் நின்றுவிட்டது. பாட்டியம்மாள் ஹோட்டலுக்குப் போயிருந்தேன். அங்கு போய் அவரை விஜாரித்ததில், அவர் எங்கேயோ வெளியிற் சென்றிருந்ததாகவும், திரும்பி வர நாழிகை யாகுமென்றும், பாட்டியம்மாள் என்னிடஞ் சொன்னாள். ஹோட்டலுக்கு எதிரே யிருக்கிற லாந்தற் கம்பத்தில் சாய்ந்துகொண்டு, அவருடைய வரவை எதிர் பார்த்து வெகுநேரம் காத்துக்கொண்டிருந்தேன். மணி அப்போது பன்னிரண்டடித்தது. தாமதிப்பதிற் பயனில்லையென்று நான் திரும்பி என் வழியே சென்றேன். நாகநாதஸ்வாமி கோவில் வாயிலண்டை நான் போய்க்கொண்டிருந்தபோது, அற்புதஸாமி உடையாரும், முத்துக்குமார நாடாரும் எனக்குப் பின்னே பேசிக் கொண்டு வந்தார்கள். உடனே நான் திகில் கொண்டு கிழக்கு முகமாக ஒதுங்கிக் கோயிலுக்கு எதிரேயுள்ள சந்தில் மறைந்துகொண்டேன். அவர்கள் கொஞ்ச தூரம் சென்றவுடன் நானும் அவர்கள் பின்னாலேயே செல்ல ஆரம்பித்தேன்.

வீரசிங்க நாடார்:—அவ்வளவு நாழிகைக்கு மேல் நீ அவர்களைப் பின் தொடர்ந்து போவானேன்?

இராஜகிரி ஜமீந்தார்:— அதுதான் சொன்னேனே, அவளை அதிகமாய் ஒன்றுங் கேட்க வேண்டாமென்று.

அமிருதம்:—என் வீண்வார்த்தை யாடுகிறீர்கள்? கேட்டதனால் என்ன? சொல்லுகிறேன் கேளுங்கள். "எனக்குக் கால்வாய்க்குப் போக வேண்டும்; ஆனபடியால் நான் வண்ணான் வாய்க்காலுக்குப் போய் வருகிறேன். நீ ஜாக்கிரதையாப் வீட்டுக்குப் போ; நான் சீக்கிரம் திரும்பி வந்து விடுகிறேன்" என்று அற்புதஸாமி உடையார் முத்துக்குமார நாடாரிடம் பேசிக்கொண்டு எனக்குப் பின்னாலேயே வந்துகொண்டிருந்தார். "நல்ல நில வாய்த்தா

ணிருக்கிறது. நானும் வருகிறேன் மாமா!" என்று முத்துக்குமர நாடார் அப்போது அவரிடஞ் சொன்னார். ஆகவே அவ்விருவரும் வண்ணான் வாய்க்காலை நோக்கிச் சென்றார்கள். அங்கிருந்து அற்புதஸாமி உடையார் வேறெங்கேனும் போய்விட்டால், நான் என்னுடைய பசிக்கொடுமையை நிவர்த்தி செய்து கொள்ள முடியாதே என்று அச்சங் கொண்டு, நானும் அவர்களுக்குப் பின்னாலேயே சென்றேன்.

மோஹன்ஸிங்கு:— அற்புதஸாமி உடையாரைப் பார்த்த போதே அவரிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளாமல், நீ அவர்கள் கூடப் போவானேன்?

அமிருதம்:—அவர் முகத்தில் நான் விழிக்கக்கூடாதென்று அவர் ஏற்கனவே என்னிடம் பல தடவை சொல்லியிருந்தார். ஆகையினால் அவருடன் வேறு ஒருவர் இருக்கும்போது நான் அவரிடம் பேசினால், அவர் என்னை என்ன செய்வாரோ என்று பயந்து, அப்போது அவரிடம் பேசவில்லை. அவர்களிருவரும் சொக்கட்டான் திடலுக்குச் சென்றார்கள். வாய்க்காலைத் தாண்டி அவர்கள் கொஞ்சதூரஞ் சென்றவுடன், புலிவார்டு ரோட்டுக்கு அருகிலுள்ள கொடுக்காப்புளிச் செடிகளுக்குப் பின்னே நான் மறைந்து நின்றேன். அங்கு நான் சுமார் கால் மணி சாவகாசம் நின்றபிறகு திடலில் அவ்விருவரும் ஏதோ வாக்குவாதஞ் செய்துகொண்டிருந்த சப்தம் எனக்குக் கேட்டது. பிறகு இரண்டு நிமிஷம் கழித்து "ஐயோ செத்தேன்!" என்று முத்துக்குமர நாடார் அலறினார். அடுத்த நிமிஷம் அற்புதஸாமி உடையார் மட்டும் வெகு வேகமாய் ரோட்டை நோக்கி ஓடிவந்தார். அவர்களிருவரும் அந்த வாக்குவாதஞ் செய்து கொண்ட சப்தத்தையும் "ஐயோ செத்தேன்!" என்ற சப்தத்தையும் அற்புதஸாமி உடையார் மட்டும் திரும்பி வந்ததையும் ஒட்டிப்பார்த்தேன். உடனே என் வயிறு பகீர் என்றது! பிறகு எனக்கு ஒன்றுந் தோன்றாது, முன்பின் யோஜிக்காமல் மடமடவென்று நான் ஓடித் திருச்சிக் கோட்டை ஸ்டேஷனில் போய்நின்றேன். "முத்துக்குமர நாடார் கொலை" என்று மறுநாள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு ஊரெங்கும் அமளியாயிருந்தது. அப்போது நான் பட்ட துயரத்தை என்னால் சொல்ல முடியாது.

மாசிலாமணி நாடார்:—இந்தச் சமாசாரத்தை உடனே தெரிவித்திருந்தால் நவமணி இவ்வளவு கஷ்டத்துக்கு ஆளாயிருக்க மாட்டானே!

அமிருதம்:—எப்படியும் நான் பெண்பிறப்புத்தானே. அவர் எனக்குப் பலதடவைகளில் பணம் கொடுத்து உதவிசெய்திருந்த

படியால் என் மூலமாய் அவருக்குத் தீங்கு ஏற்படுவது என் மனத்துக்கு ஏற்கவில்லை. உண்மை எப்படியும் வெளியாகுமென்று நினைத்தேன். ஆனால் அற்புதஸாமி உடையாரைமட்டும் நான் பல சமயம் சந்தித்து, நவமணியை இம்சித்தால் அவரைத் தொலைத்துவிடுவேனென்று சொல்லியிருக்கிறேன். மேலும், மேற்படி சமாசாரம் எனக்குத் தெரிந்ததாக அவர் சந்தேகித்தால் அவர் என்னை என்ன செய்வாரோ என்றும் நிரம்பப் பயந்தேன். இவ்விஷயத்தை நான் ஏற்கனவே சொல்லியிருந்தால் நவமணிக்கு ஒரு துன்பமும் ஏற்பட்டிராது. இவ்விஷயமாய்த்தான் என் மனம் துன்பப்படுகிறது.''

அவ்வாறு சொல்லி, அமிருதம் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். இராஜகிரி ஜமீந்தார் அதைச் சகிக்கமாட்டாதவராய் அவளுக்குத் தேறுதல் சொல்லி அவளைச் சமாதானப்படுத்தினர்.

பிறகு அங்கிருந்த எல்லோரும் வீரசிங்க நாடாரை மெச்சிப் பேசி, அவர் செய்ததை ஒன்றுவிடாமல் அவர்களிடஞ் சொல்லும்படி வேண்டிக்கொள்ள, வீரசிங்க நாடார் ''சுமார் இரண்டு மாதங்களுக்குமுன், மாசிலாமணி நாடார் என்னைச் சென்னையிலிருந்து வரவழைத்தார். கொலையின் விஷயமாய் அவரை நான் விசாரித்தேன். முதல்நாள் இரவு எட்டு மணிக்குச் சிநேகிதன் வீட்டுக்குப் போயிருந்த இருபது வயதுப் புருஷனொருவன் மறுநாட் காலை ஏழுமணிக்கு வீட்டுக்குத் திரும்பிவராததைக் குறித்துக் குடிகெட்டுவிட்டதுபோல் அற்புதஸாமி உடையார் நூதனமாய்க் கவலைப்பட்டதனாலும், அப்படியே நவமணி நாடார் முத்துக்குமர நாடாரைக் கொலை செய்திருந்ததாக வைத்துக்கொண்டாலும், கொலை நடந்தனெபதையும் மற்ற விஷயங்களையும் அற்புதஸாமி உடையார் பொழுது விடிவதற்குமுன் கண்டுபிடித்ததாலும், கொலையின் விஷயம் அற்புதஸாமி உடையாருக்குத்தான் முதலில் தெரிந்திருக்க வேண்டுமென்றும், மேற்படி கொலை அற்புதஸாமி உடையாருக்கு எப்படித் தெரியவந்தது என்று கீழ்க்கோர்ட்டார் அவரைக் கேட்டபோது, துர்ச்சொற்பனம் கண்டதாக அவர் பதில் சொன்னதிலிருந்தும், அற்புதஸாமி உடையாரே கொலைக்குக் காரணமாயிருக்கக் கூடுமென்றும் நான் சந்தேகித்தேன். பிறகு அற்புதஸாமி உடையாரைக் கவனிக்கும் பொருட்டுப் பாட்டியம்மாள் ஹோட்டலில் நான் போஜனம் வைத்துக்கொண்டேன். சமயோசிதமாய் உருமாற்றிக்கொள்ளும் பொருட்டும், வேறு பற்பல சௌகரியங்களை யுத்தேசித்தும் பத்தாய்க் கடைச் சந்திலுள்ள பத்தாவது நம்பர் வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டேன். பத்தாவது நம்பர் வீட்டின் சம்பந்தமாய் இராமஸ்வாமி ஐயரென்று வேறு பெயர் வைத்துக்கொண்டு, ஹோட்டலைப் பொரு

த்தமட்டும், நற்குண நாடாரென்று பெயர் வைத்துக்கொண்டேன். அற்புதஸாமி உடையார் அமிருதத்தை விவாகஞ் செய்துகொள்வதாகக் கொஞ்சநாட்களுக்குமுன் பிரஸ்தாபம் ஒன்று இருந்ததென்பதையும், அந்தப் பிரஸ்தாப மேற்பட்ட காலத்தில் பத்தாய்க் கடைச் சந்தில் அமிருதம் வசித்து வந்தாளென்பதையும், தற்காலம் அவள் புதுக்கோட்டையில் வசித்து வருகிறாளென்பதையும் பாட்டியம்மாளிடமிருந்து தெரிந்து கொண்டேன். கலியாணப் பிரஸ்தாபமிருந்து விவாகம் நடக்காததால், அவ்விருவருக்கும் மனஸ்தாபமேற்பட்டிருக்கக் கூடுமென்றும், அமிருதத்தைக் கண்டு விசாரிக்கும் பக்ஷத்தில், மனஸ்தாபத்தால் அவள் அற்புதஸாமி உடையாரின் நடவடிக்கைகளைச் சொல்லக்கூடுமென்றும் மனதில் திடங்கொண்டேன். உடனே பத்தாய்க் கடைச் சந்துக்குப்போய் விசாரித்ததில், அமிருதம் ஏதோ காரியமாய் அன்றையதினந்தான் திருச்சிக்கு வந்திருந்ததாகவும், அப்போது அவள் மாதாக்கோயிலுக்குப் போயிருந்ததாகவும் தெரிந்துகொண்டு, அங்குபோய் அவளைக் கண்டுபிடித்தேன். அங்கு அவள் உடையாரை உற்றுப் பார்த்ததால் அவளிடம் எனக்குச் சந்தேக மதிகரித்து அவளைப் பின் தொடர்ந்து இராமஸ்வாமி ஐயாராகச் சொக்கட்டான் திடலுக்குச் சென்று அங்கு நடந்தவைகளிலிருந்து கிணற்றில் ஏதோ விசேஷமிருக்கவேண்டுமென்பதை அறிந்துகொண்டு, பின்னும் அவளைத் தொடர்ந்து ஆரோக்கியஸாமி உடையாரென்ற பெயருடன் புதுக்கோட்டைக்குச் சென்றேன். நான் கிணற்றைப்பற்றி அவளிடம் பேச, அவள் பயப்பட்டதிலிருந்து கிணற்றில் ஏதோ ஒரு பெரிய இரகசிய மிருக்கவேண்டு மென்று உடனே நிச்சயித்தேன். அன்றைய இரவில் கிணற்றிலிறங்கி அதைப் பரிசோதித்தபோது, அதில் சுரங்கமொன்று காணப்பட்டது. அச்சுரங்கத்தின் வழியில் முத்துக்குமார நாடாருடைய மோதிரமும், கைக்குட்டையும், அற்புதஸாமி உடையாருடைய கழுத்துப்பட்டையு மகப்பட்டன. அற்புதஸாமி உடையாரின் அறையைப் பரிசோதிக்கவேண்டியே, அவரைச் சதுரங்கத்துக்கிழுத்து, பிறகு காற்றில்லை யென்ற காரணத்தைக் கொண்டு, அவருடைய அறைக்குச் சென்று சதுரங்கமாடினபோது, பலகையின் கீல்விட, அதைச் சரிப்படுத்த அற்புதஸாமி உடையார் கழுத்துப்பட்டையின் பாதியைக் கொண்டு வந்தார். அதைப் பற்றிப் பேச அவர் நடுங்கினதிலிருந்து சந்தேகம் நிவர்த்தியாகி மறுநாட்காலையில் அவர் வெளியே சென்றிருந்தபோது அவருடைய அறையில் புகுந்து கழுத்துப்பட்டையின் பாதியைக் கைவசப்படுத்திக் கொண்டு, அந்தப் பீரோவைச் சோதனை செய்தேன். பீரோவின் அடியிலிருந்த ஒரு டிராயரில் "என்னுடைய செல்வக் குழந்தைகள், நவமணிக்கும், சுலோசனாவுக்

கும்'' என்று கம்பீரமாய் எழுதப்பட்டிருந்த ஒரு பெரிய கவர் அகப்பட்டது. அதைத் திறந்து பார்த்தபோது, அதில் ஒரு பெரிய கடிதமிருந்தது. படித்துப் பார்க்க, நவமணி நாடாரின் தந்தையான உண்மையப்ப நாடார் மதராஸ் பாங்கியில் ரூ. 50,000 வட்டிக்குப் போட்டிருந்ததாகவும், நவமணி நாடாருக்கும், சுலோசனாவுக்கும் இருபது வயது நிறைந்தவுடன், அந்தப் பாங்கியின் மானேஜர் அப்பணத்தின் மர்மத்தை லெடர் மூலமாக அவர்களுக்குத் தெரிவிப்பாரென்றும், பிறகு அவர்கள் சென்னைக்குப் போனால் மேற்படி முதலையும், கூடிய வட்டியையும் அவர் சமமாய்ப் பாகித்து அவர்களிடங் கொடுப்பாரென்றும், மேற்படி பண விஷயத்தை அவ்வளவு காலம்வரையில் அவர் இரகசியமாய் வைத்திருந்ததற்குக் காரணம் அதேபாங்கியில் தாம் கொடுத்து வைத்திருக்கிற ஸீல்டு கவரிலிருந்து தெரியவருமென்றும் எழுதப்பட்டிருந்தது. அற்புதஸாமி உடையார் தம்பேரில் குற்றம் சுமராமலிருக்கும் பொருட்டு, முத்துக்குமார நாடாரோடு கடைசியாகச் சேர்ந்திருந்த நவமணி நாடாரின்பேரில் குற்றத்தைச் சுமத்த, பிரதம விஜாரணைக் கோர்ட்டார் கேஸைத்தள்ளிவிட, உடையார்பயந்து மறுபடியும் நவமணியின் மீது குற்றத்தைச் சுமத்தச் சமயம்பார்த்து நவமணி நாடாரிருப்பிடஞ் சென்று முத்துக்குமாரநாடாருடைய சாமான்களை நவமணி நாடாரின் மேஜையில் வைக்க யத்தனிக்கையில், அம் மேஜையிலிருந்த இரகசிய டிராயர் அவருக்குத் தற்செயலாய்த் தெரியவந்தது. அவர் அதைத் திறந்துபார்க்க, அதில் இந்தக் கவர் அவருக்கு அகப்பட்டிருக்க வேண்டும். அவர் அதை எடுத்துக்கொண்டு, தாம் கொண்டுவந்திருந்த சாமான்களை அவ்விரகசிய டிராயரிலேயே வைத்திருக்கவேண்டும் அந்தச் சாமான்கள் நவமணி நாடாருடைய மேஜையிலிருக்கு மென்று அற்புதஸாமி உடையார் தன்னிடஞ் சொன்னதாக அவருடைய துப்பனே கோர்ட்டில் ஒப்புக்கொண்டதி லிருந்து, அற்புதஸாமி உடையார்தாம் அந்தச் சாமான்களை நவமணி நடாரின் மேஜையில் வைத்திருக்க வேண்டும். அற்புதஸாமி உடையாரின் கழுத்துப் பட்டையின் துண்டு கிணற்றில் அகப்பட்ட விஷயமும், அந்தக் கவர் அவருடைய அறையிலிருந்த விஷயங்கள்மட்டுமே, அற்புதஸாமி உடையாரைக் குற்றவாளியென்று நிரூபிக்கும்'' என்று சொல்லி முடித்தார். பிறகு மோஹன்ஸிங்கு வீரசிங் நாடாரைப் பார்த்து ''எப்படியாவது அற்புதஸாமி உடையாரையும் இதிலிருந்து தாங்கள் தப்புவிக்க வேண்டும். கோர்ட்டில் வந்து சாக்ஷிசொல்ல எனக்கு அவ்வளவாக இஷ்டமில்லை. நான் வாரமலிருக்கும்படி கூடியமட்டும் பிரயத்தனஞ் செய்யுங்கள். தீராமல் போனால் நான் சாக்ஷிசொல்லுகிறேன்'' என்று அவரிடஞ் சொன்னார்.

வீரசிங்க நாடார் :—தாங்கள் வராமல் முடியாதென்று எனக் குத்தோன்றுகிறது. ஆனாலும் பார்க்கலாம். இராஜகிரி ஜமீந்தார் சாக்ஷியே அநேகமாய் போதும்.

ஆகவே, கொலைக் கேஸிலிருந்து நவமணியை விடுவிக்க, மோஹன்லிங்கு, இராஜகிரி ஜமீந்தார் ஆகிய இரண்டு பிரதானசா க்ஷிகளை அழைத்துக்கொண்டு, அமிருதத்தோடு, மாசிலாமணி நாடாரும், வீரசிங்க நாடாரும், திருச்சிக்கு அன்றிரவு போட் மெயிலில் புறப்பட்டார்கள்.

—o—

இருபத்தாறுவது அத்தியாயம்

நவமணியின் விடுதலை

"அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத்துணை."—திருக்குறள்

முத்துக்குமார நாடாரின் கொலைக்கேஸ் இரண்டாவது நாள் விசாரணைக்கு வந்தது. கொலை செய்யப்பட்டவர் ஒரு பெரிய மிட்டேதாரானபடியாலும், குற்றவாளி மிகவும் நற்குணம் வாய்ந்தவன் என்று பலர் மதித்தபடியாலும், கோர்ட்டுத் தாங்கமுடியாமல் கூட்டம் நிறைந்திருந்தது. ஜட்ஜ் அவர்கள் கோர்ட்டுக்கு வருவதற்கு ஒரு மணி சாவகாசத்துக்கு முன்னாலேயே ஜனங்கள் வந்துநிறைந்திருந்தார்கள். "நவமணியைப்போன்ற யோக்கியமான வேறொரு பையனை நான் இதுவரை பார்த்ததே கிடையாது ; அவனாவது கொலைசெய்யவாவது!" என்று சிலரும், "அற்ப மனஸ்தாபத்தால் ஒருவன் கொலை செய்வானா ! அப்படியும் ஒரு முட்டாளிருப்பானா ! நவமணி கொலை செய்திருக்கவே மாட்டான்" என்று சிலரும், என்ன இழவோ, யார் கண்டார்கள் ?

"என்னே! இரேதத் திரேணுகையே கூற்றுவனும் ;
தன்னேர் திரேதத்திற் சானகியே ;—பின்யுகத்திற்
கூடுங் திரௌபதியே கூற்றாம் ; கலியுகத்தில்
வீடுதொறுங் கூற்றுவனாமே."—(நீதிவெண்பா) என்றபடி,

இதிலேயோ விவாகமாகாத ஒரு சிறு பெண் சம்பந்தப்பட்டிருக்கிறாள். அவளை இச்சித்து நவமணி கொலைசெ திருக்கக் கூடாது என்று என்ன நிச்சயமிருக்கிறது?" என்று தாங்கள் அதிகமேதாவிகளென்று நினைத்திருந்த சிலரும், "முத்துக்குமார நாடார் சாமானிய மானவரா! தங்கக்கம்பி! என்ன தாராளம்! என்ன தர்மசிந்தை ! அவரைக் கொன்றானே இந்தப்பாவி!" என்று

சிலரும், "தானே தெரிகிறது இன்னும் கொஞ்ச நாழிகையில்! இதைப்பற்றி என்ன விவகாரம்!" என்று பலரும், கும்பல் கும்பலாக நின்று பேசிக்கொண்டிருந்தபோது, ஜட்ஜ் அவர்கள் ஆஸனத்திலமர்ந்தார். "உஸ் பேசாதே! உஸ்! ஸைலென்ஸ்! உஸ் பேசாதே," என்று கோர்ட்டுச் சேவகர்கள் உத்தரவிடச் சப்தம் அடங்கிற்று.

"உமது சாக்ஷிகள் யார்? தயாராயிருக் கிறார்களா?" என்று, ஜட்ஜ் அவர்கள் நவமணியின் வக்கீலைக் கேட்க, "பால் அப்பாஸாமி நாடார், முதற்சாக்ஷி" என்று வக்கீல் பதிலளிக்கக் கோர்ட்டுச் சேவகன் "பால் அப்பாஸாமி நாடார்!" என்று சேவல்போல் உறக்கக் கூவினான். உடனே பால் அப்பாஸாமி நாடார் கூட்டிலேறிப் பின்வருமாறு வாக்குமூலங் கொடுத்தார்:— "என் பெயர் பால் அப்பாஸாமி நாடார். என் ஜீவனம் சுக ஜீவனமே. ஒரு வாரத்துக்கு முன்னால் நான் சென்னையிலிருந்து புறப்பட்டு பர்மாவுக்கு என்னுடைய கப்பலில் போய்க்கொண்டிருந்தேன். அப்போது சமுத்திரத்தில் வெகு தூரத்துக்கப்பால் ஒரு பெரிய கப்பல் எறிந்து கொண்டிருந்தது. அதற்குக் கொஞ்ச தூரத்தில் ஒரு சிறிய படகொன்றில் ஒருவர் நின்றுகொண்டு ஏதோ சமிக்கை செய்தார். நான் என்னுடைய கப்பலை அந்த உடனே செலுத்தச் சொன்னேன். அங்கு போய்ப் பார்த்ததில் அந்தப் படகில் மோஹன்ஸிங்கு இருந்தார். அவரை என்னுடைய கப்பலிலேற்றிக் கொண்டேன்.

அற்புதஸாமி உடையாரின் வக்கீல்:— தில்லைக்குப் போகும் வழி எதென்று கேட்டால் கொட்டைப்பாக்கு நூறு அரைக்கால் ரூபாய் என்று பதில் சொல்லுகிறீரே! பேஷ்! உமக்குச் சித்தம்...

பால் அப்பாஸாமி நாடார்:—நிறுத்தும்! இது கோர்ட்டென்று ஞாபகமில்லாமல் என்ன தாறுமாறாய்ப் பிதற்றுகிறீர்? ஜாக்கிரதையாகத் தகுந்தபடி நடந்துகொள்ளும். அந்த மோஹன்ஸிங்குதாம் முத்துக்குமர நாடார்.

அப்போது, கோர்ட்டிலிருந்தவர்களெல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள். பால் அப்பாஸாமி நாடாருக்குச் சித்தம் சுவாதீனத்திலில்லை யென்று சிலர் மதித்தார்கள். அற்புதஸாமி உடையாரின் வக்கீலுள்பட மற்றுஞ் சிலர், நவமணியின் சினேகிதரான அவர் அவனைத் தப்புவிக்க வேண்டுமென்று அந்த உபாயம் செய்திருக்கிறார் என்று கருதினார்கள். அற்புதஸாமி உடையாரின் வக்கீலெழுந்து "காகம் வெளுப்பென்று சொன்னால் கேட்பவர்களுக்கு மதியில்லையா என்ன? என்ன இப்படிக் கண்டபடி பிதற்றுகிறீர்? முத்துக்குமர நாடார் நடு சமுத்திரத்திலேபா

அகப்பட்டார்? ஏன் இருக்கலாம்! அவர் பெயர் முத்துக்குமர நாடாராயு மிருக்கலாம். ஆனால் இந்தக் கேஸில் சம்பந்தப்பட்ட அந்த முத்துக்குமர நாடாராய் மட்டும் இருக்கமுடியாது: அவ்வளவு தான். உம்மிடத்தில் எனக்கு மெத்தச் சந்தேகமேற்படுகிறது. நீர் எக்காரணத்துக்காக இவ்விதம் சாக்ஷியஞ் சொல்லுகிறீரோ? உம்முடைய வாக்குமூலத்தைக் கோர்ட்டார் அவர்கள் நம்பவேண்டு மென்றால் நீர் இப்போதே இரண்டிலொன்று செய்ய வேண்டும். அவை என்னவென்றால் சமுத்திரத்திலிருந்து தப்புவித்ததாகப் பிரஸ்தாபிக்கும் மனிதனைக் கோர்ட்டில் நீர் உடனே ஆஜர் செய்ய வேண்டும். இல்லாவிடில் நீர் தகுந்த மனிதரென்று ருசுப்படுத்த வேண்டும். அந்த மனிதனை நீர் உடனே ஆஜர் செய்யாவிட்டால், உம்மீது சட்டப்படிப் பொய்ச் சாக்ஷியத்துக்குத் தொடர நான் தயாராயிருக்கிறேன் கண்டபடி பேத்தாதேயும். உம்முடைய சொந்தக் கப்பலென்று சொன்னீர்? பேஷ்! சொந்தக் கப்பலா!

பால் அப்பாஸாமி நாடார் :—இது கோர்ட்டான படியினால், நீர் இப்போது அவமரியாதையாய்ப் பேசினதற்குத் தக்கபடி நான் உமக்குத் தகுந்த சிக்ஷை செய்யாமல் விடுகிறேன். ஜாக்கிரதை! நான் தகுந்த மனிதனென்று ரூபிக்க வேண்டும்? நான்தானே! நான் இராஜகிரி ஜமீந்தார். நான் என் பெயரைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அது எல்லோருக்குந் தெரிந்த விஷயம். வேடிக்கையாகச் சில காலமாய்ப் பால் அப்பாஸாமி நாடார் என்று நான் பெயர் வைத்துக் கொண்டிருந்தேன்.—ஜட்ஜ் அவர்களுக்கு என்னைத் தெரியவில்லைபோல் இருக்கிறதே!

அப்படி இராஜகிரி ஜமீந்தார் சொல்லி வாய்மூடுமுன், ஜட்ஜ் அவர்கள் ஜமீந்தாரை உற்றுப் பார்த்து, அடையாளங் கண்டுபிடித்துக்கொண்டு, உடனே தம்முடைய ஆஸனத்திலிருந்து இறங்கி, எல்லையற்ற தனத்துக்கு அதிபதியாகவும், அக்காரணத்தினால் கோடிப் பிரபு என்று சகஜமாகப் பெயர் வழங்கப்பட்டு வந்த இராஜகிரி ஜமீந்தாரிடஞ் சென்று, அவருக்கு வந்தனமளித்து, அவரை ஓர் தகுந்த ஆஸனத்திலமர்த்திப் பிறகு விசாரிக்க ஆரம்பித்தார். பால் அப்பாஸாமி நாடார் என்பவர் கோடிப் பிரபு இராஜகிரி ஜமீந்தார் என்று வக்கீலுக்குத் தெரிந்தவுடன் அவர் நடுநடுங்கி, அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். பிறகு அவ வக்கீலைப் பார்த்து "உம்முடைய இஷ்டப்படியே பின்னும் நட கொள்ளத் தயாராயிருக்கிறேன். நான் தகுந்த மனிதன் என் நிரூபிக்க நல்ல வேளையாய் மற்றொரு ஜமீந்தார் கோர்ட்டி இருக்கிறார். அவர் பெயர் மோஹனலிங்க கூப்பிடச் சொ கள்" என்று அவர் சொன்னார்.

கோர்ட்டுச்சேவகன் "மோஹன்லிங்கு" என்று கூப்பிட்டவுடன், மூலையிலிருந்த ஒருவர் எழுந்து சாக்ஷிக்கூட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவருடைய தேகம் மிகவும் மெலிந்தும், அவருடைய முகம் பிரேதம்போல் வெளுத்து மிருந்தது. கோர்ட்டிலுள்ள ஜனங்களெல்லோரும் இரண்டொரு நிமிஷம் பிரமித்து நின்று, பிறகு "முத்துக்குமர நாடார்! முத்துக்குமர நாடார்! முத்துக்குமர நாடார்!" என்று, கோர்ட்டு என்பதைக்கூட மறந்து, உறக்கக் கத்திக்கொண்டு, அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். அற்புதஸாமி உடையார் குப்புற விழுந்து மூர்ச்சித்தார். கோர்ட்டானது சந்தைக் கடையை யொத்திருந்தது. பிறகு போலீஸ்காரர்கள் வெகு சிரமப்பட்டுக் கும்பலை விலக்கிக் கூச்சலை நிறுத்த, முத்துக்குமர நாடார் கூட்டிலேறினார். எள் வீழ்வதற்குக்கூட இடமில்லாமல் ஜனத்தால் நிறைந்திருந்த கோர்ட்டு உடனே நிர்சப்தமாகிவிட்டது. முத்துக்குமர நாடார் பின் வருமாறு வாக்குமூலங் கொடுத்தார்:—"என் பெயர் முத்துக்குமர நாடார்; நான் காசினிமிட்டேதார். என் சம்பந்தமாய் நவமணி நாடார் கொடுத்திருக்கிற வாக்குமூலத்தில் அணுவளவேனும் பிசகு கிடையாது. நானும் அவனும் பிறிந்த பிறகு, என்னுடைய மாமனுக்குத் தெரிவிக்காமல் நான் உடனே ரங்கூனுக்குப் போகவேண்டிய அலுவலொன்று எனக்கு ஏற்பட்டது. நான் அங்குபோய் இருந்தபோது தற்செயலாய் ஒருநாள் தமிழ்ப் பத்திரிகை ஒன்றைப் பார்க்கலானேன். நவமணியினால் நான் கொலை செய்யப்பட்டதாகவும், அக்குற்றத்துக்காக நவமணி மரண தண்டனைக்குட்படுவான் என்றும் கேஸ் விஷயமாகச் சமாசாரம் விவரமாய் அதில் அச்சிடப்பட்டிருந்தது. உடனே நான் சென்னைக்குப் புறப்பட்டேன். நடுவழியில் கப்பல் தீப்பற்றிக்கொண்டு, நான் மட்டும் பிழைத்தேன். என்னைக் காப்பாற்றின பிரபு எனது உயிர் நண்பர் இராஜகிரி ஜமீந்தாரே. சென்னைக்கு நான் வந்தவுடன், எனக்குச் ஜுரம் கண்டது. ஆகையினால் ஒருநாள் தாமதித்து இன்றைக்கு வந்து சேர்ந்தேன்."

முத்துக்குமர நாடார் வாக்குமூலங் கொடுத்தவுடன், நவமணி விடுதலை செய்யப்பட்டான். 19உ இரவிலிருந்து உண்மையிலேயே பரஸ்பரம் மனப்பூர்வமான பிரியம் பாராட்ட ஆரம்பித்த இரு நண்பர்களாகிய முத்துக்குமாரனும், நவமணியும்,

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு"—(திருக்குறள்) என்றபடி,

அதிகரித்து உயிரும் உடலும்போல் சேர்ந்து, உற்சாக பேசிக்கொண்டு வெளியே சென்றார்கள்.

4167

இருபத்தேழாவது அத்தியாயம்

கொலைக்கேஸ் மர்மம்

"கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
யிடித்துநீர் கொள்ளினு மின்சுவைத் தேயாகும்
வடுப்படவை திறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூறார் தம்வாயிற் சிதைந்து."—நாலடியார்.

நவமணி விடுதலை செய்யப்பட்டவுடன், நவமணி, லீலாவதி, இராஜகிரி ஜமீந்தார், சுலோசனா, மாசிலாமணி நாடார், வீரசிங்க நாடார், படையார் பாளையத்து ஜமீந்தார், ஆகிய ஏழுபேர்களும் ஒரு மோட்டார் வண்டியிலும், பிரக்ஞையிழந்திருந்த அற்புதஸாமி உடையார், முத்துக்குமரன், டாக்டர் ஆகிய மூவரும் பின்னே மற்றொரு மோட்டாரிலும் புறப்பட்டுப் புதுக்கோட்டைக்குச் சென்றார்கள். இரு வண்டிகளும் கொஞ்சதூரம் போனவுடன், முத்துக்குமரன், அற்புதஸாமி உடையாருடன் இருப்பது உடையாருடைய பிராணனுக்கு ஹானி விளைவிக்குமென்று டாக்டர் சொல்ல, முத்துக்குமரன் அதிலிருந்து இறங்கி முன்னே சென்ற மோட்டாரில் ஏறி உட்கார்ந்து தன்னுடைய விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாய்ப் பின்வருமாறு சொன்னான்.

" அன்றிரவு நானும் நவமணியும் காவேரியாற்றுக்குப் போயிருந்தோம். அவன் வாக்குமூலங் கொடுத்திருக்கிறபடியே, நானும் அவனும் ஆண்டார் தெரு முக்கத்தில் பிரிந்தவுடன், நான் கிழக்கு முகமாகத் திரும்பிப் பாட்டியம்மாள் ஹோட்டலுக்கு போனேன். நான் கொஞ்சதூரம் போனவுடன், என்னுடைய மாமன் எனக்கு எதிரே வந்துகொண்டிருந்ததைப் பார்த்துச் சற்று நின்றேன். 'ஏனப்பா, இவ்வளவு நேரமாக்கி விட்டாய்? உன்னைத் தேடிக்கொண்டுதான் நான் வருகிறேன்' என்று அவர் என்னிடஞ் சொன்னார். நானும் நவமணியும் ஆற்றுக்குச் சென்றதையும், நவமணி கால் தவறி ஆற்றில் விழுந்த விபரத்தையும் நான் அவரிடஞ் சொன்னேன். நாங்கள் அப்படிப் பேசிக் கொண்டே, நாகநாதஸ்வாமி கோயில் வாயிலுக்கு வந்து விட்டோம். அப்போது 'மாமா! பேச்சுப்பிராக்கில் நாமிங்கு வந்துவிட்டோமே; வீட்டுக்குத் திரும்பலாமா?' என்று நான் அவரைக் கேட்டேன். "எனக்குக் கால்வாய்க்குப் போகவேண்டும்; சொக்கட்டான் திடலுக்கு நான போய்ச் சீக்கிரம் வந்து சேருகிறேன். ஜாக்கிரதையாய் நீ வீடு போய்ச் சேரு" என்று அவர் என்னிடஞ் சொன்னார். சந்திரன் பரிபூரணமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தபடியால், வேடிக்கையாக நானும் அவருடன் திடலுக்குச் சென்றேன். பிறகு நாங்கள் அங்கிருந்து திரும்புஞ் சமயத்தில், அவர் எதைப்பற்றியோ

ஆலோசித்துக் கொண்டு, ஒரு விதமாய் இருந்ததாக எனக்குத் தோன்ற, 'என்ன மாமா! ஒருவிதமாக இருக்கிறீர்கள்?.' என்று நான் அவரைக் கேட்டேன்—இதெல்லாம் இன்றைக்கு நடந்தது போல் எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது;—'என்னுடைய ஸ்திதியை நினைத்துப் பார்த்துக் கொண்டேன்; வேறொன்றுமில்லை. என்னுடைய ஜீவனம் என்ன ஜீவனம்! என்ன பிழைப்பு இது! இது ஒரு பிழைப்பாகுமா! நான் இப்போது செய்யும் விருத்திக்கு உஞ்சி விருத்தியே சிரேஷ்டமானது!' என்று அவர் தம்முடைய ஸ்திதியை யுன்னி நொந்து கொண்டார். கஞ்சாக்குடிக்கும் வழக்கம் அவருக்கிருந்த படியாலும், அவர் அப்போது பேசின போது அவருடைய வாயிலிருந்து அதன் துர்நாற்றம் அதிகமாக வந்துகொண்டிருந்த படியாலும், அன்றிரவு அவர் அதை மித மிஞ்சி உபயோகப் படுத்தி யிருந்தாரென்று எனக்குத் தெரிய வந்தது. ஆகவே அவர் அப்படி ஒரு மாதிரியாக இருந்ததின் காரணம் கஞ்சாவென்று நான் நிச்சயித்து, அந்தப் பிரமத்தைத் தெளிவிக்கும் பொருட்டு, 'என்ன மாமா! ஒரு மாதிரியா யிருக்கிறீர்கள்? என்ன இவ்வளவு புழுக்கமா யிருக்கிறது! வாருங்கள்: வாய்க்காலிலிறங்கி முகத்தைக் கழுவிக்கொள்ளலாம்' என்று நான் அவரைக் கேட்டுக்கொண்டேன். அதற்கு "ஒரு மாதிரியாகவா இருக்கிறேன்! ஆம்; நீ சொல்வது சரிதான். காசு என்றதின் அருமையை அறியாத உனக்கு எல்லாம் வேடிக்கையாகத்தானிருக்கும். உனக்கிருக்கிற சொத்தில் அரைகால் பங்கு மட்டும் எனக்கு இருக்கும் பக்ஷத்தில் ஒரு மாதிரியாக இல்லாமல் உன் மாதிரி ஒரே மாதிரியாக நானும் இருப்பேன்" என்று அவர் என்னிடங் கோபமாகச் சொன்னார். 'இவ்வளவு தானே மாமா! என் சொத்தெல்லாம் தங்களுதுதான். என்னுடைய சகல சொத்தையும் சமபாகமாகப் போட்டு, அதில் ஒரு பாகத்தைத் தாங்கள் எடுத்துக்கொள்வதில் எனக்கு ஆக்ஷேபணையே கிடையாது. அப்படித் தாங்களெடுத்துக்கொண்டு, எப்படியாவது தாங்கள் தங்களுடைய மனவருத்தத்தை நீக்கிக்கொண்டால், அதைவிட எனக்கு வேறு சந்தோஷங் கிடையாது. அப்படிக்கு நாளைக்கே சரிபாகமாகப் போட்டுக்கொண்டு விடலாம்' என்று நான் அவரை வேண்டிக்கொண்டேன். அப்போது அவர் பின்னும் அதிகக் கோபமடைந்து "உன்னுடைய காசு எனக்கு எதற்குடா? உன் காசா எனக்கு வேண்டும்! என் உயிருக்குச் சமானமாகிய ஒரு பொருளை நீ வைத்துக்கொண்டு உன்னுடைய காசையா எனக்குக் கொடுத்து நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்?" என்று அவர் பதிற் சொல்லி என்னை உற்றுப்பார்த்தார். அப்போது அவருடைய முகம் கடுங் கோபத்தால் உருத் தெரியாமல் மாறுபாடு அடைந்திருந்தது. நான் திடுக்கிட்டு 'மாமா என்ன சொல்லுகிறீர்கள்? தாங்கள் சொல்லுவதற்கு என்ன அர்த்

தம்? ஏன் இப்படி அகாரணமாய் என்னிடம் வருத்தப்பட்டுக் கொள்ளுகிறீர்கள்? என்னை ஏன் இப்படி உற்றுப் பார்க்கிறீர்கள்? தங்கள் கோபத்துக்கு என்ன காரணம்? தாங்கள் விரும்புகிற பொருள் என்னிடம் என்ன இருக்கிறது? தயவு செய்து அதைச் சொல்லுங்கள்' என்று நான் அவரை வேண்டிக்கொள்ள ''சொல்வதில்பயனென்ன? எனினும் சொல்லுகிறேன்: கேள். லீலாவதியை .... நான்............மணம் .... செய்து கொள்ள வேண்டும். அவளை நீ எனக்குக் கொடுத்து விடுகிறாயா?' என்று அவர் என்னைக் கேட்டார். அவர் சொல்லி முடிப்பதற்குள் கோபம் என்னை மீறிவிட, 'அயோக்கியப் பயலே! பரம யோக்கியனென்று நானும் உன்னை இவ்வளவு காலமாய் நினைத்திருந்தேனே! அடே நீ ஒரு பெரிய துரோகி! நீ சண்டாளன்! உனக்கு நல்ல உலகம் கிடைக்காது. உத்தம ஸ்திரீயாகிய என் தாயின்கூடப் பிறந்தவனா நீ! உன்னைப் போன்ற பாபியுடனா என் தாய் பிறந்தாள்? சீ! போ'' என்று பற்பல விதமாய் என் மனத்துக்குத் தோன்றியவாறு நான் அவரை நிந்தித்துக் கொண்டிருக்கையில் ''டேய்! இந்தமட்டோடு நிறுத்து! என்ன கண்டபடி பிதற்றுகிறாய்? ஜாக்கிரதை!'' என்று அவர் என்னை மிரட்டினார். உடனே எனக்குக் கோபம் பின்னு மதிகரித்தது ''அயோக்கியப் பயலே; இனி உனக்கு மரியாதை வேறா? துடைப்பக்கட்டைக்குப் பட்டுக்குஞ்சலமாம்! இனி நீ ஜாக்கிரதையாகப் பேசு!'' என்று நான் அவரை ஏகதேசமாய்ப் பேசினேன். அவர் தம்முடைய கையிலிருந்த ஓர் பருத்த கொண்டைக்கட்டானால் திடீரென்று என் மண்டையிலடித்தார். பாழுங் கிணற்றில் நான் மட மடவென்று விழுந்ததாக என் புத்திக்குத் தோன்றிற்று. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். பிறகு எனக்கு உபாயமாகப் பிரக்ஞை வந்ததின் பேரில் சுவாசம் விடமுடியாமல் நான் திணறினேன். என் மேல் மண்ணும் கல்லும் கிடந்தனவென்று எனக்குத் தோன்றிற்று. உடம்பெல்லாம் ஒரே வலியாக இருந்து கைகால்களை நீட்ட முடக்க முடியாமல் சிரமப்பட்டேன். அப்போது சிரமம் பொறுக்க முடியாமற் கால்களை முழு பலத்தோடு உதறிக்கொண்டேன். உடனே 'படேர்' என்று ஒரு கதவு திறந்துகொண்டது. நான் என் புத்தியை ஸ்திரப் படுத்திக்கொண்டு, என் சொக்காயிலிருந்த வத்திப் பெட்டியை எடுத்து ஒரு குச்சியைக் கிழித்துப் பார்க்க, எனக்கெதிரே ஓர் சுரங்கம் புலப்பட்டது. நான் மெதுவாக எழுந்து, அச்சுரங்கத்தின் வழியே குனிந்து செல்ல, ஐந்து நிமிஷத்தில் நான் மற்றொரு கதவண்டை போய்ச் சேர்ந்தேன். அக் கதவை ஒரே உதையில் உதைத்துத் தள்ளினேன். ஆகா! என்ன ஆச்சரியம்! அப்போது நான் அனுபவித்த சந்தோஷத்தை எப்படிச் சொல்வேன்! எனக்கு எதிரே என் காலடியில் சுமார்

இரண்டடி மட்டத்தில் வண்ணான் வாய்க்கால் ஓடிக்கொண்டிருந்தது. நான் குதித்து வெளியிற் சென்றவுடன் என் சொக்காயெல்லாம் இரத்தமாக இருந்ததைக் கவனித்தேன். என் மாமன் என்னைக் கோபத்திலடித்தது எனக்கு ஞாபகம் வந்தது. பிறகு நான் இறந்துவிட்டேனென்று அவர் நினைத்துத் தாம் செய்த குற்றத்தை ஒருவரும் அறியாவண்ணம் அக்கிணற்றிலேயே ஒரு வழியாய் என்னை அடக்கஞ் செய்திருக்க வேண்டுமென்று அனுமானித்தேன். 'தந்தையைப்போல் நாம் பாராட்டிவந்த நமது ஒரே பந்துவாகிய நம்முடைய மாமனும் நமக்குச் சத்துருவாய் விட்டார். அவரோ நம்முடைய தாயின் சகோதரர். அவர் என்ன தீங்கு நமக்குச் செய்தாலும், அவர் பேரில் இக்குற்றத்தைச் சுமத்துவது நியாயமல்ல. நம்முடைய தாய் இப்போது உயிருடனிருந்து, நாம் அவர்மீது கொலைக்குற்றத்தைச் சுமத்தினால் அவள் மனம் அதைச் சகிக்குமா? ஆனபடியால் அவர் பேரில் இக்குற்றத்தைச் சுமத்தவே கூடாது. அதற்கு நாம் கொஞ்சநாள் மறைந்திருப்பது நலம். மேலும் நம்முடைய விவாகமும் நின்றுவிட்டது. அது வேறு கேலிக்கிடமாயிற்று. ஆகையால் நாம் எங்கேனும் சில காலம் மறைந்திருப்பதே உத்தமம்' என்று எனக்குத் தோன்றிற்று. உலகம் நான் இறந்ததாகவே நினைத்துக்கொள்ளும் பொருட்டு, சுரங்கத்திலிருந்து நான் தப்பிப் போனதை ஒருவரு மறியாமலிருக்கவேண்டி, நான் மறுபடியும் அச் சுரங்கத்தினுட் சென்று அவ்விரண்டு கதவுகளையும் முன்போலப் பக்குவமாய்ச் சாத்திவிட்டு, மெதுவாய் வெளியேறினேன். அப்போது மாதாக்கோயிலில் மணி ஐந்து அடிக்கப்பட்டது. உடனே, கடியாரத்தை எடுத்துப் பார்க்கலாமென்று, என்னுடைய ஜேபியில் கையைவிட்டுப் பார்த்தேன். கடியாரத்தைக் காணவில்லை. சந்தேகமேற்பட்டு, நான் என்னுடைய பாக்கி சாமான்களைத் தேட, விலையுயர்ந்த இரண்டு மோதிரங்களும் டயரியும் சோரம் போயிருந்ததைத் தெரிந்துகொண்டேன். அவைகளை என் மாமனே எடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று நிச்சயித்து என்னுடைய பெல்ட்டின் பையைப் பார்த்தேன். நல்ல வேளையாய் அதில் நான் வைத்திருந்த நூறு ரூபாய் நோட்டு அப்படியேயிருந்தது. தாமதித்தால் உதயமாய்விடும்; பொழுது விடிந்தவுடன் அவரிங்கு அநேகமாய் வருவார் என்று நான் பயந்து, உடனே மேற்கமாய்த் திரும்பிக் கழனி வழியாகக் கொஞ்ச தூரம் போய், தண்ட வாளங்களின் ஓரமாகக் கோட்டை ஸ்டேஷனுக்குப்போனேன், அங்கே தயாராகக் காத்துக்கொண்டிருந்த ஷட்டிலிலேறித் திருச்சி ஜங்ஷனுக்குப்போய், அங்கிருந்து தஞ்சாவூருக்குப் போனேன். அன்று சாயங்திரமே அங்கிருந்து போட்மெயிலில் ஏறிச் சென்னைக்குச் சென்றேன். நான் சென்னைக்குப்போன சாயந்திரமே கப்பலேறி

மோஹனஸிங்கு என்று பெயர் வைத்துக்கொண்டு ரங்கூனுக்குப் பிரயாணப்பட்டேன். அங்கு போய்ச் சேர்ந்து ஒரு வாரத்துக்குள் பெரிய கம்பெனி ஒன்றில் தகுந்த உத்தியோகமொன்று எனக்குக் கிடைத்தது. நான் அப்படியிருந்துகொண்டிருக்கையில், ஒரு நாள் சென்னைத் தமிழ்ப்பத்திரிகை யொன்றைத் தற்செயலாய்ப் பார்த்தேன். அதில் "திரிசிரபுரத்துக் கோலே கேஸ்! முத்துக்குமர நாடார் கோலேக்கேஸ்! அநியாயம்! அநியாயம்! அநியாயம்!" என்று அச்சிடப்பட்டிருந்தது. நான் திடுக்கிட்டு அதைப் படித்துப் பார்த்தேன். அதன் விவரம் இரண்டு பக்கங்களில் அச்சிடப்பட்டுக் கடைசியில், "முத்துக்குமர நாடாருடன் கடைசியிலிருந்தவர் நவமணி நாடாரானபடியாலும், அவரே முத்துக்குமர நாடாரைக் கொலே செய்ததாகச் சாஷியங்கள் மூலமாய் நன்கு தெரிகிறபடியாலும் அவர் மரண தண்டனைக்கு உட்படுவார்!" என்று முடிக்கப்பட்டு, அதனடியில் 'வீரசிங்கம்—துப்பன்' என்று கையொப்பம் போடப்பட்டிருந்தது."

மாசிலாமணி நாடார்:—வீரசிங்கமே! உமது புத்திக் கூர்மையை நான் என்னென்று சொல்வேன்! தாங்களில்லாவிட்டால் நவமணியின் கதி எவ்விதமாக முடிந்திருக்கும்?

"மேற்படிப் பத்திரிகை ஒருவாரத்துக்கு முந்தினதாக இருந்தபடியால், நவமணிக்கு என்ன ஆபத்து நேர்ந்துவிட்டதோவென்று நான் திகில்கொண்டு அன்றைக்கே கப்பலேறிச் சென்னைக்குப் புறப்பட்டேன். புறப்பட்ட இரண்டாவதுநாள் கப்பலில் தீப் பிடித்து, என்னைத் தவிர மற்றெல்லோரும் மாண்டார்கள். கப்பலில் கட்டப்பட்டிருந்த ஒரு சிறிய படகையவிழ்த்து முதலிலேயே நான் மட்டும் அதில் குதித்துக் கப்பலுக்குக் கொஞ்ச தூரத்துக்கப்பாற் சென்று, ஒரு நீண்ட துடுப்பின் நுனியில் என்னுடைய தொப்பியைக் கட்டி அதை நாலாபக்கமும் சுற்றினேன். கடவுள் கிருபையால் வெகு தூரத்துக்கப்பால் வந்துகொண்டிருந்த ஒரு கப்பலில் நான் காட்டினமாதிரியே பிரதி சமிக்ஞையைக் கவனித்தேன். அக்கப்பல் வெது சீக்கிரத்தில் என்னை யணுகி, என்னைக் காப்பாற்றிற்று. என் இன்னுயிரைக் காப்பாற்றியவரும், அந்தக் கப்பலுக்குச் சொந்தக்காரரும் எவர் என்று கேட்டால், இராஜகிரி ஜமீந்தார் என்ற இந்த உத்தமரே! அவரிடம் நான் என்னுடைய வரலாற்றைச் சொல்ல, அவர் அடங்கா மகிழ்ச்சியடைந்து, உடனே கப்பலைச் சென்னைக்குத் திருப்பச் சொன்னர். முந்தாநாள் சாயங்கிரம் நாங்கள் சென்னைக்கு வந்து சேர்ந்தோம். எனக்கு உடம்பு சௌக்கியமில்லாதபடியால் நாங்கள் உடனே புறப்பட முடியவில்லை. ஆகையால்தான் தந்தி கொடுத்தோம்."

முத்துக்குமாரன் தன்னுடைய வரலாற்றைச் சொல்லி முடித்தவுடன், மோட்டார் வண்டியும் மாசிலாமணி நாடாருடைய பங்களாவை யடைந்தது. எல்லோரும் அன்றிரவு விருந்து சாப்பிட்டு விட்டு, ஹாலில் உட்கார்ந்து வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தபோது, "அமிருதம் இனி என்ன செய்யப்போகிறாளோ?" என்று லீலாவதி இராஜகிரி ஜமீந்தாரைக் கேட்டாள்.

இராஜகிரி ஜமீந்தார்:—இவ் விஷயமாகத்தான் நானும் இப்போது யோஜித்துக்கொண் டிருந்தேன். "இப்போதே புறப்பட்டு வீட்டுக்குப் போகப் போகிறேன்" என்று அவள் சொன்னாலும் சொல்லலாம். பாட்டு உபாத்தியாயராக எங்கேனும் அமர்ந்து காலத்தைக் கழிக்கப் போவதாக இரண்டொரு தரம் என்னிடம் பிரஸ்தாபித்திருக்கிறாள். பிடிவாதம் அதிகமான படியால், நாம் சொல்லுவது எதுவும் பிரயோஜனப் படாது.

* * *

லீலாவதி:—அக்கா, சுலோசனா! இதென்ன நூதனமாயிருக்கிறது! முத்துக்குமர நாடாரோடு என்ன இரகசியஞ் செய்துகொண்டிருக்கிறீர்கள்? என்ன விசேஷம்? என்னிடங்கூடச் சொல்லக்கூடாத அத்தகைய இரகசியம் அவரிடம் தங்களுக்கு என்ன இருக்கக்கூடும்?

முத்துக்குமரன்:—அதைப்பற்றி உனக்கென்ன இவ்வளவு கவலை? இந்நேரம் நீ நவமணியோடு இரகசியம் பண்ணினாயே! நான் அதைக் கவனிக்கவில்லை யென்று நினைத்து, இப்படிப் பேசுகிறாயோ?

லீலாவதி:—நானும் அவரும் பேசுகிறதைப்போல் நீங்களும் பேசுகிறதோ! வெகு அழகாயிருக்கிறது! நானும் அவரும் எவ்வளவோ பேசிக்கொள்வோம். தாங்களும் என் அக்காளும் அப்படிப் பேசலாமோ? தங்களிருவருக்கும் என்ன அப்படி யிருக்கக் கூடும்?

முத்துக்குமரன்:—எப்படி வேண்டுமென்றாலும் நீ நினைத்துக் கொள். என்னவோ பொடி வைத்துப் பேசுகிறாயே!

லீலாவதி:—சரிதான்; அப்படியா சமாசாரம்! இதற்கென்ன இவ்வளவு இரகசியம்! ஆம்படையான் பெண்டாட்டி கதையா? சரி! சரி!

லீலாவதி அப்படிச் சொன்னவுடன், "லீலாவதி! என்ன கண்டபடி பேசுகிறாய்? உனக்கு ஜோஸியங்கூடத் தெரியும்போலிருக்கிறதே!" என்று சுலோசனா சொல்லிச் சிரித்துக்கொண்டெழுந்து மட மடவென்று உள்ளே சென்றாள்.

* * *

அதற்குள்ளாக ஒருவருமறியாமல் எழுந்து சென்று, தனிமையில் சென்ற இராஜகிரி ஜமீந்தாரும், அமிருதமும் பேசிக்கொண்டதைச் சற்று விஜாரிப்போம்.

ஜமீந்தார்:—உன்னுடைய ஆக்ஷேபணை யென்ன?

அமிருதம்:—என்னுடைய பூர்வஸ்திதிதான். பெருங்குணமே உருவெடுத்து வந்ததுபோ லுள்ள தங்களுக்கு நான் தகுதியற்றவள். எனக்கு அவ்வித பாக்கியம் இந்த ஜன்மத்தில் கிடையாது.

ஜமீந்தார்:—பழங்கதையே வேண்டாம்! என்னை மணம்புரிய உனக்கு இஷ்டமா, இல்லையா? அதற்குமட்டும் பதில் சொல், போதும்.

அமிருதம்:—இது விஷயமாய் நான் இனித்தான் யோஜிக்க வேண்டும். என்னுடைய இஷ்டத்துக்கும், விவாகத்துக்கும் சம்பந்தமே கிடையாது. குருடன் கண்ணுக்கு ஆசைப்படாமல் என்ன செய்வான்?

ஜமீந்தார்:—உனக்கு ஏன் வீண் சிரமம்? உனக்குச் சிரமம் கொடுக்காமலிருக்கும்பொருட்டு நானே யோஜித்துவிட்டேன்.

* * *

அவர்கள் திரும்பி ஹாலில் நுழைந்தவுடன் "என்ன மாமா! இதுதான் ஒழுங்கோ? என்ன திருட்டுத்தனம் இது?" என்று லீலாவதி ஜமீந்தாரைக் கேட்க, அமிருதம் "உனக்கு அசாந்தியவாய் அம்மா" என்று பதில் சொல்லிவிட்டு, சுலோசனை நுழைந்த அறைக்குள் விரைந்து சென்று மறைந்தாள்.

பின் மோட்டாரில் கொண்டு போகப்பட்ட அற்புதஸாமி உடையாரைப்பற்றி நாம் சற்று விஜாரிப்போம். போகும் வழியிலிருந்த வைத்தியசாலையில் அற்புதஸாமி உடையார் விடப்பட்டார். முத்துக்குமரன் தானும் அவரண்டையிலேயே இருக்க வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல "அப்படியானால் நான் ஜவாப்தாரியா யிருக்கமாட்டேன். நீர் இன்றைக்கு இரவு முழுதும் இங்கே இருக்கக்கூடாது. பிறகு உம்மிஷ்டம்போ லிருக்கலாம். அவருக்குப் பிரக்ஞை வரும் சமயத்தில் நீர் அவர் அருகில் இருந்துவிட்டால் அவர் பிராணன் உடனே போய்விடும்" என்று டாக்டர் சொல்ல, முத்துக்குமரன் மாசிலாமணி நாடார் பங்களாவுக்குச் சென்றான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் அற்புதஸாமி உடையாருக்குப் பிரக்ஞை வந்தது. அவர் தமக்கு வேண்டியவற்றைக் கேட்பதற்கும், சொல்லுவதற்கும் பிரயத்தனப்பட்டார். டாக்டர் அவருடைய தேகஸ்திதியைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு

அவருக்கு இருதய ரோகமென்றும், அவர் வெகு பலஹீனமா யிருந்த படியால், எந்த நிமிஷத்திலும் அவருடைய பிராணன் போகலாமென்றும், எவ்வித வைத்தியஞ் செய்தாலும் ஒரு வாரத் துக்குமேல் அவர் ஜீவித்திருக்க முடியாதென்றும் அபிப்பிராயப் பட்டார். அற்புதஸாமி உடையார் வைத்திய சாலைக்கு வந்த மூன்றாவது நாள் "என் குழந்தை முத்துக்குமரன் எங்கே யிருக்கி றான்? அவனை நான் உடனே பார்க்க வேண்டும்" என்று வைத்திய சாலை வேலையாளைக் கேட்க, "தாங்கள் இங்குவந்த மறுநாட்காலையி லேயே அவர் இங்குவந்துவிட்டார். தங்கள் பக்கத்திலேயேதான் வெ குநேரம் உட்கார்ந்திருப்பார். இரவு பகல் முழுதும் அவர் இங்குதான் இருக்கிறார். தங்களுக்குப் பிரக்ஞை இல்லாதவரையில் அவர் தங்க ளுக்கருகேயிருந்துவிட்டு, ஞாபகம் வந்தவுடன் வெளியே போய்விடு கிறார்? அவர் இப்போது சாப்பாட்டுக்குப் போயிருக்கிறார். இப் போது அவர் வரும் சமயந்தான்" என்று அவன் பதிற் சொன்னான். "எனக்குப் பிரக்ஞை வரும்போதுமட்டும் அவர் ஏன் வெளியே போய்விடுகிறார்? அதன் காரணமென்ன?" என்று அவர் அவனைக் கேட்க, "டாக்டருடைய உத்தரவு அப்படி" என்று அவன் பதிற் சொன்னான். அவர்கள் அப்படிப் பேசிக்கொண்டிருந்தபோதே "முத்துக்குமர நாடார் அதோ வருகிறார்!" என்று மற்றொ ருவன் சொன்னான். உடனே அவனைக் கூப்பிடும்படி அற்புதஸாமி உடையார் அவர்களை வேண்டிக்கொள்ள, ஒருவன் போய் நடந்ததை டாக்டரிடம் தெரிவித்து, அவருடைய அனுமதியின்பேரில் முத் துக்குமரனை உள்ளே யழைத்துச் சென்றான். முத்துக்குமரன் அவருடைய கட்டிலண்டையிற் போனபோதுகூட அவர் ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்தார். அவ்விரண்டுபேர்களும் ஒரு வரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள். ஒருவர் முகத்தில் பச்சா தாபமே குடிகொண்டிருக்க, மற்றொருவர் முகத்தில் பரிதாபமே குடிகொண்டிருந்தது. அற்புதஸாமி உடையாரின் கண்களிலிருந்து நீர் அருவியாகப் பெருகி வழிந்து கொண்டிருந்தது. இரண்டு நிமிஷத்துப் பிறகு "அப்பா, என் செல்வமே! முத்துக்குமரா! அதுநான் செய்த வேலையல்ல. அந்தப் பாபி கஞ்சாச் செய்த வேலை! இப்படிச் செய்துவிட்டேனே!" என்று நாவெழாமல் மெலிந்த குர லுடன் உடையார் சிரமப்பட்டுச் சொன்னார்.

முத்துக்குமரன் :— மாமா! அதன் விஷயம் எனக்கு நன்றாகத் தெரியும். போன விஷயத்தைப்பற்றி எனக்குக் கொஞ்சமேனும் தங்களிடம் வருத்தமே கிடையாது. எல்லாம் எனையாளும் ஈசன் செயல்! ஆகையால் அதைப்பற்றித் தாங்கள் இனி நினைக்கவே வேண்டாம். இப்படிப்பட்ட விஷயமொன்று நடந்ததென்பதையே

மறந்துவிடுங்கள். தங்களுக்கு எப்படியாவது உடம்பு சௌக்கியமானால் எனக்குப் போதுமானது.

அற்புதஸாமி உடையார் :—ஆகா! நீயே என் சகோதரியின் பிள்ளை! உத்தமியினிடம் உற்பத்தியான உத்தமனுக்கா நான் துரோகஞ் செய்தேன்! பதினைந்து வயதிலேயே இக்கொடிய வழக்கத்துக்கு நான் அடிமையானேன். வேலையில்லாத போதெல்லாம் இவ்விஷச் சரக்கை உபயோகித்தேன். நான் அதை உபயோகித்த சமயங்களில், எனக்குச் சமானமானவர் உலகத்திலேயே கிடையாதென்று எனக்குத் தோன்றும். திடீரென்று நான் ஒரு பெரிய லக்ஷாதிகாரியாய்ப் போய்விட்டதாகவும், எனக்கு நிகரானவர் ஒருவரும் கிடையாதென்றும் தோன்றும். பணக்காரனாகவேண்டுமென்ற துராசை என்னுள்ளத்தில் பல வருஷங்களாகக் குடிகொண்டிருந்தபடியால், கஞ்சாவினாலேற்படும் உன்மத்தத்தினால் என்னுடைய ஆசைகளெல்லாம் பூர்த்தியானதுபோல் நான் மயங்கினேன். உலகத்தில் சிலர் மட்டும் தனவந்தர்களாய் இருக்க, மற்றவர்கள் தரித்திரர்களா யிருக்கவேண்டுமென்றும், அப்படி யிருப்பது அநியாய மென்றும் எனக்குத் தோன்றும்."

"இவ்விதம் எனக்குத் தோன்ற ஆரம்பித்த பிறகுதான், நீ மட்டும் லக்ஷாதிகாரியாயிருக்க நான்மட்டும் தரித்திரனாக இருப்பானேன் என்று உன்னிடம் துவேஷம் எனக்கு ஏற்பட ஆரம்பித்தது. உனக்கு வயது வளர வளர எனக்குத் துவேஷ மதிகரித்தது. உன்னிடம் பிரியமாயிருக்கவேண்டுமென்று நான் என்னாலியன்றமட்டும் பிரயத்தனப் பட்டும், அது பயன்படாமல் போயிற்று. லீலாவதியின் பேரில் எனக்குப் பிரியமேற்பட்ட பிறகு உன்னிடம் எனக்கு அளவற்றதுவேஷ முண்டாயிற்று. நான் அவள்மீது வைத்திருந்த பிரியத்தில் நூற்றில் ஒரு பங்கு கூட நீ வைத்திராதபோது, அவள் என்னை நிராகரித்துவிட்டு உன்னை மணம்புரிய யத்தனித்தாள். அதன் பிறகு உன்னைத் தொலைக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்குத் தோன்றிற்று. என்னுடைய மனோநிலைமை அவ்வாறிருக்க, அன்றைய தினம் நான் அக்கொடிய விஷத்தை அளவுக்கு மிஞ்சி உபயோகப் படுத்தி யிருந்தேன். ஆனபடியால் அற்ப விஷயங்களும் அன்று எனக்குக் கோபத்தை யுண்டாக்கின. நீ சர்வ சுகத்தையும் அனுபவிக்கப் பிறந்தவனென்றும், நான் சகல துன்பங்களையும் அனுபவிக்கப் பிறந்தவனென்றும் எனக்குத் தோன்றிற்று. எப்படியேனும் உன்னை ஒழித்துவிட்டால், உன் தந்தையின் உயில்படி உன்னுடைய சொத்துக்கும், பிறகு லீலாவதிக்கும் நான் பதியாகலாமென்று எனக்குத் துராசை உண்டாயிற்று. ஆனால் அன்றிரவே உன்னை ஒழித்துவிடவேண்டுமென்று நான் நினைக்கவேயில்லை யென்று நான் என் மனப்பூர்வ

மாய்ச் சொல்லுகிறேன். உன்னைக்கொன்று ஒழித்துவிட வேண்டுமென்று நான் நினைக்கவேயில்லை. பல வருஷங்களாய் என் மனத்திலிருந்த எண்ணம் அன்றைக்கும் இருந்ததேயொழிய, வேறு வித்தியாசமாய்ப் புதியஎண்ணம் ஒன்றுமில்லை. என்னை விவாகஞ் செய்துகொள்ளும்படி லீலாவதிக்கும் பயத்திலும், நயத்திலும் சொல்லி நான் ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தபோது, சுலோசனை அவளுக்குத் தைரியஞ் சொல்ல ஆரம்பித்தாள். உடனே லீலாவதி என்னை மீறினாள். அதனால் சுலோசனையின்மீது எனக்குத் துவேஷ முண்டாயிற்று. அவளை யொட்டி நவமணி பேரில் முதலில் எனக்குக் கோபமேற்பட்டது. பிறகு, நவமணி சுலோசனையைப் பார்க்கப் போனபோதெல்லாம் லீலாவதியுடன் பேசினபடியால், அவனிடத்தில் எனக்குக் கோபம் அதிகரித்தது. அவனுடன் மட்டும் லீலாவதி சகஜமாய்ப் பேசிக்கொண்டிருக்க, நம்முடன்மட்டும் அவள் பேசவில்லையே யென்று எனக்கு அவனிடம் துவேஷ மேற்பட்டது. அன்றிரவு நீ அவனிடம் சிநேகிதஞ் செய்துகொண்டதில், உன்னிடம் எனக்குண்டான கோபத்துக்கு அளவே கிடையாது. கோபத்தை அடக்கிக்கொள்ள முடியாமல்தான் நான் அன்றைக்குச் சாப்பிட்டவுடனே மேரியா மர்ட்டன் வீட்டிலிருந்து புறப்பட்டுப் போனேன். வீட்டில் அவஸர ஜோலி எனக்கு ஒன்றுமேயில்லை. நான் வெளியே போனவுடன், நேராகப் பாட்டியம்மாள் ஹோட்டலுக்குப் போகாமல், தெருவில் அங்குமிங்கும் மனச் சஞ்சலத்தால் உலாவிக்கொண்டிருந்தேன். வெகு நேரம் அப்படிக் காலத்தைக் கழித்துக் கடைசியில் வண்ணான் வாய்க்காலுக்குத் திரும்ப யத்தனித்தபோது, எனக்கு எதிரே நீ வந்துகொண்டிருந்தாய். வண்ணான் வாய்க்காலுக்கு என்னுடன் நீ வரவேண்டாமென்று நான் உனக்குப் பலதடவை சொன்னேன். உனக்கு அன்றைக்குத் தீங்கு செய்ய நான் யத்தனிக்கவில்லையென்பது இதிலிருந்தே உனக்கு நன்றாய் விளங்கும். அங்கு போனதும் உனக்கும் எனக்கும் தற்செயலாய் லீலாவதியைப் பற்றி விவாதமேற்பட்டது. அவ்விஷயத்தைப் பற்றி என்னைப் பேசச் செய்தது நீதான். பிறகு நீ என்னை ஏசினாய். கோபந் தாங்கமாட்டாமல் கட்டாணியால் உன்னை அடித்தேன். கோபத்தில் அடித்ததால், படத்தகாத இடங்களாகிய நெற்றியிலும் தலையிலும் அடி விழுந்தது. நீ மூர்ச்சித்துக் கீழே விழுந்தாய். உன் தலையிலிருந்து உதிரம் மளமளவென்று பெருகத் தொடங்கிற்று. உன் முகம் திடீரென்று பிரேதம்போலாயிற்று. சுமார் இரண்டுமணி சாவகாசம் நான் உனக்குச் சிகிச்சை செய்தேன். ஆஹா! அப்போது நான் பட்ட துயரத்தை யார் அறிவார்! நம்முடைய செல்வச் சகோதரியின் குழந்தையைக் கொன்றுவிட்டோமே! என்று நினைத்துக் கோவென்று கதறினேன். பிறகு உன்னுடைய சரீரம் விரைத்ததுபோல் குற்றமுள்ள என்

மனத்துக்குத் தோன்றிற்று. கொலை பாதக ஞகிவிட்டோமே என்ற கிலி என்னை ஆட்கொண்டது. உடனே எவ்விதம் அந்தக் கொலை பாதகத்தை மறைக்கலாமென்று நான் யோஜனை செய்தேன். காவேரியாற்றில் நடந்த விஷயம் அப்போது எனக்கு ஞாபகம் வந்தது. உன்னுடன் கடைசியிலிருந்தது நவமணி யென்று ஞாபகம் வர, உனக்கும் நவமணிக்கும் ஏற்பட்டிருந்த மனஸ்தாபத்தால் அவன் சூதான எண்ணங்கொண்டு உன்னை ஆற்றுக்கு அழைத்துக்கொண்டு போனதாகவும், அவன் கையிலுள்ள காயம், அவனுடைய சொக்காய், வேஷ்டி முதலியவைகளிலுள்ள இரத்தம் முதலியவைகளால், அவன் உன்னை அடித்துக் கொன்ற தாகவும் சாக்ஷியங்கள் கற்பித்து, அவன் பேரில் குற்றத்தைச் சுமத்திவிடலா மென்று நான் தைரியங் கொண்டேன். அவ்வாறு நான் ஒரு க்ஷணத்தில் முடிவு செய்துவிட்டு, என் கழுத்தில் சுற்றிக்கொண்டிருந்த கழுத்துப்பட்டையை அவிழ்த்து, அதனுல் உன்னுடைய கழுத்தில் சுருக்குப் போட்டு, மெதுவாய் உன்னைத் தூக்கி, கழுத்துப்பட்டையின் நுனியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, கிணற்றினுள் உன்னை மெதுவாய் விட்டேன். ஒன்று சொல்ல மறந்து விட்டேனே! நவமணியின் பேரில் குற்றஞ் சுமரும் படிப் பொருத்தமான ருசுக்களை ஏற்படுத்தும் பொருட்டு உன்னுடைய டயரி, வைரக்கல் மோதிரம், கடியாரம், ஜரிகைக் கைக் குட்டை ஆகிய சாமான்களையும் எடுத்து என்னுடைய சொக்காயில் ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டேன். உன்னுடைய பிராணன் போய்விட்டதென்றும், தேகம் விரைத்துவிட்டதென்றும் நான் முன்னுலேயே தீர்மானங்கொண்ட படியால், பிணமென்று உன்னைக் கண்டு பயந்து, உன்னுடைய சுவாசத்தைக்கூடப் பரிசோதித்துப் பார்க்காமல் உன்னைக் கிணற்றில் விட்டேன். கனம் தாங்கமாட்டாமல் கழுத்துப்பட்டை பாதி தூரத்தில் அறுந்தது. கொலையின் விஷயத்தை முழுதும் மறைத்துவிட வேண்டுமென்ருல், உன்னுடைய சரீரத்திலுள்ள சதை முழுவதும் சீக்கிரம் மடியவேண்டுமென்றும், எலும்புகள் மாத்திரம் எக்காலத்தில் கண்டெடுக்கப்பட்டாலும், பேர்வழி யாரென்று ஏற்படாதென்றும் எனக்குத் தோன்றிற்று. ஆகவே வண்ணன் வாய்க்காலுக்குப் பக்கமாய் ஓடி ஏதோ கட்டிடம் மராமத்து செய்வதற்காக அங்கு குவித்துவைக்கப்பட்டிருந்த சுண்ணும்பை வாரி என்னுடைய அங்கவஸ்திரத்தில் கட்டிக் கொண்டு நான்கு மூட்டைகள் கொண்டுபோய்க் கிணற்றில் உன்மீது கொட்டினேன். பிறகு, திடலிலிருந்த செத்தைகளை யெல்லாம் கூட்டிப் பெருக்கி, அச் சுண்ணும்பின்மீது போட்டு அக் கிணற்றையே பாதிக்குப் பாதி மூடிவிட்டேன். இன்னும் இரண்டொரு சமாசாரங்கள்தான் பாக்கி யிருக்கின்றன. அவ்விதம் உன்னை யடக்கஞ் செய்துவிட்டுக் காவேரி யாற்றுக்கு ஓடி, மணற்

சரிவிலிறங்கி அங்குமிங்கும் ஓடி அடிச்சுவடுகள் ஏற்படுத்திவிட்டு— என்ன முட்டாள்தனம்! அப்போது என் மனத்திலுள்ள பயத்தால் என்னென்னவோ செய்தேன்! இருவர் சண்டை செய்துகொண்டதைப்போல் சுவடுகள் ஏற்படுத்தவாவது! அப்படிச் சுவடுகள் ஏற்படுத்த முடியுமா? அல்லது, அப்படியே ஏற்படுத்தினாலுந்தான் பலபேர்கள் நடக்கக்கூடிய இடத்தில் அவைகள்தாம் அப்படியேயிருக்குமா? உன்னுடைய கடியாரத்தை அங்கு ஓரிடத்தில் பக்குவமாய் அழுத்திவைத்து, உன் காயத்திலிருந்து இரத்தம் வழிந்திருந்த என்னுடைய அங்கவஸ்திரத்தைக் கிராதியில் பிழிந்து, கிராதியில் இரத்தக் குறி பேற்படுத்தினேன். என்னுடைய அங்கவஸ்திரத்திலிருந்து கொஞ்சங் கிழித்து இரத்தம் பட்டிருந்த துண்டை அங்கு ஒரு பக்கத்தில் போட்டேன். அங்கு வேலை முடிந்தபின், நான் அங்கிருந்துவீட்டுக்குத் திரும்பி வந்த சமயத்தை ஒருவரும் அறியாமலிருக்கும் பொருட்டு, பதுங்கிப் பதுங்கி ஹோட்டல் வாசலண்டை வந்து சேர்ந்து, எப்படியேனும் கதவைத்திறந்து ஒருவரு மறியமல் உள்ளே நுழைவதற்காகச் சரியான சமயம் பார்த்துக்கொண் டிருந்தேன். நான் அங்கு அரைமணி சாவகாசம் காத்துக்கொண் டிருநதபிறகு ஏதோ காரியமாய்ப் பாட்டியம்மாள் கதவைத் திறந்து வைத்துவிட்டு வெளியேவந்தாள். அவளுக்குத் தெரியாமல் நான் சரேலென உள்ளே நுழைந்து, என் அறைக்குட் சென்று, சப்தமில்லாமல் அறைக் கதவைத் தாளிட்டுக்கொண்டேன். ஆ! என்ன இப்படி மார்பை வலிக்கிறது. அப்பா! அப்பா! இதென்ன மரண வலியா என்ன!"

முத்துக்குமரன் :—மாமா! நான் நிரம்ப வேண்டிக் கொள்ளுகிறேன். தயவுசெய்து பேசாமல் தூங்குங்கள். தங்களிடம் எனக்கு வருத்தமே கிடையாது. என் தாயுடன் கூடப் பிறந்தவரிடமா எனக்கு வருத்தம் ஏற்படும்? ஒருநாளுமில்லை.

அற்புதஸாமி உடையார் :—அதிகஞ் சொல்லவேண்டியது இனியொன்றுமில்லை. சொல்வதற்குப் பொழுதும் கிடையாது. இதோ என் கதையே முடியப்போகிறது. இது மரண வலிதான். பிறகு கதவைத் தாளிட்டுக்கொண்டு பாட்டியம்மாள் உள்ளே போனபிறகு, நான் என் அறைக் கதவைத் திறந்து, நடுத் தூக்கத்தில் விழித்துக் கொண்டவன்போல் தள்ளாடிக்கொண்டு—நான் வேண்டுமென்று தள்ளாடவில்லை; பயத்தால் நடுங்கினேன்—கீழே இறங்கிப் பாட்டியம்மாள் பக்கத்திற்சென்று குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டேன். அப்போது "எப்போது வந்து படுத்தீர்கள்?" என்று அந்த அம்மாள் என்னைக் கேட்க, "சாப்பாடு அங்கே சீக்கிரம் முடிந்துவிட்டது; நான் உடனே வந்துவிட்டேன். நான் வந்தபோது எல்லோரும் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். தாங்கள் வேலையில் கவனமா

யிருந்தபடியால் என்னைப் பார்க்கவில்லை. ஒருவேளை முத்துக்குமான் வந்து கதவைத் தட்டுவான்; தயவுசெய்து கதவைத் திறவுங்கள்" என்று நான் பதில் சொல்ல, "இனிமேல் வரவாவது; மணி மூன்றுக்கு மேலாச்சு. இனிக் காலையில்தான் வருவான்" என்று பதில் சொன்னாள். பிறகு நான் போய்ப் படுத்துக் கொண்டேன். சில நாட்களுக்குப் பிறகு டயரி, மோதிரம், இன்னும் என்ன எழமோ ....அவைகளையெல்லாம்...சமயம் பார்த்து ......நவமணியின்........ மேஜையில் .... நவமணிக்கு ...... ஏராள மாண.......ஐயோ என்ன வலியிது!.....அதில் ஒரு உயில்.......இருந் தது.......இதென்ன.......மரண வலியா!......ஏதோ.....பாங்கியில் ......ரூபாய்.......நவமணி.........சுலோசன......" என்று சொல்லி அடுத்த நிமிஷத்திற் சவமானார்.

4167

இருபத்தோன்பதாவது அத்தியாயம்.

எனையாளு மீசன் செயல்.

"வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்
கானிலந் தோயாக் கடவுளை—யாநிலஞ்
சென்னியுற வணங்கிச் சேர்து மெம்முள்ளத்து
முன்னியவை முடிகவென் று."—நாலடியார்.

மூந்திய அத்தியாயத்தில் கூறப்பட்ட விஷயங்கள் நடந்து இரண்டு வருஷங்களாகிவிட்டன.

துப்பன் வீரசிங்க நாடாரினால் கண்டெடுக்கப்பட்ட உயிலி லிருந்து தனக்குக் கிடைத்த ஐம்பதினாயிரம் ரூபாயைக்கொண்டு, நவமணி சேலத்தில் ஒரு மிட்டாவை விலைக்கு வாங்கி, மிட்டேதா ரென்ற பட்டம் வகித்தான்.

மாசிலாமணி நாடார் சென்னையில் தம்முடைய வீட்டில் ஒரு பெரிய விருந்து வைத்தார். விருந்தை முன்னிட்டு ஒரு மாதத் துக்கு முன்னேயே சென்னைக்கு வந்திருந்த லீலாவதியும் நவமணி யும் வெகு உற்சாகத்துடன் விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் அதிக விமரிசையாகச் செய்து வைத்திருந்தார்கள். விருந்துக்குக் குறிப்பிட்ட தினம் இராவில் அழைக்கப்பட்டவர்க ளில் அநேகமாய் எல்லோரும் தயாராய் வந்திருக்க, பிரதானமாக

வரவேண்டியவர்கள் மட்டும் வந்து சேராதது கண்டு "நாதா! இன்னுமென்ன அவர்களைக் காணோம்!" என்று லீலாவதி நவமணியைக் கேட்க, "அதோ இரண்டு மோட்டார்கள் வருகின்றன; பார்க்கலாம்" என்று நவமணி பதிற் சொல்லி வாய் மூடுமுன், அவ்விரு மோட்டார்களும் ஒன்றன் பின்னொன்றாக மாசிலாமணி நாடாரின் பங்களாவின் வாயிலில் வந்து நின்றன. இராஜகிரி ஜமீந்தாரும் அவருடைய மனைவி அமிருதமும் ஒன்றிலிருந்து இறங்க, மற்றொரு வண்டியிலிருந்து முத்துக்குமார நாடாரும், அவருடைய மனைவி சுலோசனாவும் இறங்கினார்கள். நவமணியும், லீலாவதியும் அவர்களை யெதிர்கொண்டுபோய் நல்வரவளித்து உள்ளே அழைத்துச் சென்றார்கள். விருந்து வெகு விமரிசையாய் நடந்தது. பிறகு எல்லோரும் கடவுளைத் துதிக்க, அமிருதம் பிட்டில் வாசிக்கவும், லீலாவதி ஹார்மோனியம் வாசிக்கவும், சுலோசனா இனிய குரலுடன்

4167

"ஊரனந் தம்பெற்ற பேரனந்தஞ் சுற்று
முறவனந் தம்வினையினால்
உடலனந் தஞ்செயும் வினையனந் தங்கருத்
தோவனந்தம் பெற்றபேர்
சீரனந் தஞ்சொர்க்க நரகமு மனந்தநற்
றெய்வமு மனந்தபேதம்
திகழ்கின்ற சமயமு மனந்தமத னால் ஞான
சிற்சத்தி யாலுணர்ந்து
காரனந்தங்கோடி வருஷித்த தெனவன்பர்
கண்ணும்விண் ணுந்தேக்கவே
கருதரிய வானந்த மழைபொழியு முகிலைநங்
கடவுளைத் துரியவடிவைப்
பேரனந் தம்பேசி மறையனந்தஞ் சொலும்
பெரிய மௌனத்தின் வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவா னந்தமாம்
பெரிய பொருளைப் பணிகுவாம்."

என்னும பாட்டைப் பாடிக் கடவுளைத் துதித்தார்கள்.

பழனியாண்டியின் கழலிணை வாழ்க.